ஓம்.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பக வெளியீடு 3.

# மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்.

ஆசிரியர்.

கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.,

அட்வகேட்,

தாகூர் சட்ட விரிவுரையாளர்,

திருநெல்வேலி.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

அக்டோபர் 1939.

பதிப்புரிமை]

[விலை ரூ. 1

சேலம், குகை
ஓரியண்டல் பவர் பிரஸில் அச்சிடப்பட்டது.

| பொருளடக்கம். | பக்கங்கள். |
| --- | --- |


| | |
| --- | --- |
| மொழிநூற் கொள்கை | 1—19 |
| எழுத்து வடிவம் | 20—23 |
| மேலைநாட்டு மொழிநூல் வரலாறு | 23—30 |
| எழுத்தொலி இயல்பு | 30—43 |
| சொல்லமைப்பு (தமிழ்மொழி அமைப்பு) | 43—60 |
| திராவிட மொழிகள் | 60—75 |
| உயிரெழுத்து | 75—79 |
| மெய்யெழுத்து | 79—91 |
| வேர்ச்சொல் | 91—99 |
| பெயர்ச்சொல் | 99—106 |
| வேற்றுமை | 106—126 |
| எண்கள் | 126—131 |
| பெயரடை | 131—133 |
| வினைச்சொல் | 133—148 |
| மொழியொப்புமை | 148—156 |

# பதிப்புரை.

"புத்தம்புதியகலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்தவளருது மேற்கே; அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை". என்பது தமிழைப்பற்றிய பழம்பெருங்குறை. அக்குறை இதுகாலை மற்றக்கலைத்துறைகளில் சிறிதளவேனும் படிப்படியாய்க் குறைந்து பல புதுவகைநூல்கள் நாளடைவில் தமிழில் வெளிவந்துகொண்டிருத்தல் கண்கூடு.

ஆயினும் மொழிநூற் கொள்கைகளைக் கூறும் நூல் தமிழில் அறவேஇல்லை எனக்கூறலாம். மொழிகளின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, இனம் போன்ற அரும் பெரும் பொருள்களை விளங்க விரித்துரைக்கும் சிறந்த மேனாட்டுப் பெருநூல்கள் போன்றதொரு சிறு நூலேனும் இதுவரை இங்கு வெளிவந்ததில்லை. இந்நூல் இக்குறையைப் போக்கும் முறையில் முன்னின்றுதவும் முதற் புதுநூல் ஆகும். மேலும் இந்நூலின் விரிவும் விளக்கமும் தமிழிலக்கணப் பொருளை முழுமைப் படுத்துவனவுமாம்.

எண்திக்கிலுள்ள கலைச் செல்வங்கள் யாவற்றையும் கொணர்ந்திங்குச் சேர்த்துத் தமிழைமென்மேல் வளமுறுத்த வேண்டுமென்னும் பேரவாவுடைய எம்பதிப்பகத்தின் மூன்றும் வெளியீடாகிய

"மொழிநூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும்" என்னும் இந்நூலுக்குக் கிடைக்கும் ஆதரவு, மற்றும் பல புதுவகை நன்னூல்கள் தமிழில் முளைத்தெழுவதற்கு ஏதுவாகி நலம் பயக்குமென நம்புகிறேன்.

இவ்வரிய நூலை தமது "நுண்மாணுழைபுல" மிகுதியால் வரைந்தமக்கு எளிதின் அளித்த உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்களுக்கு பெரிதும் நன்றி யறிதலுடையேன்.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்<br>செவ்வாய்ப்பேட்டை,<br>சேலம்.<br>(4—10—1939.)

இங்ஙனம்,

ஆ. மாணிக்கம்.

ஓம்.

# முகவுரை.

---

ஆங்கில நூற் கல்வி பயிலாத தமிழ் இலக்கண மாணுக்கர்க்குப் பயன்படும் பொருட்டு, இச்சிறு நூல் இயற்றப்பெற்றது. ஆங்கிலங் கற்றவர்க்கு மொழிச் சார்பாக ஆங்கில மொழியிலுள்ள பெரு நூல்களைப் பயில்வதற்கு இது தோற்றுவாயாகும். இதன் விரிவு தமிழில் எதிர்காலத்தில் அமைய வேண்டுவதே. இச்சிறு நூலிடை இடையே சில கருத்துக்கள் புதுமைபற்றி இருமுறை மும்முறை குறிக்கப்படும். அது கூறியது கூறலாகுமெனின், அதனையும் பிற பிழைகளையும் அறிஞர் பொறுத்திடு வாராக.

அன்பன்,

கா. சுப்பிரமணியன்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 8 | குர்ளிச்சியை | குளிர்ச்சியை |
| 11 | 8 | Sithian | Scythian |
| 11 | 17 | 'ஒள்' | 'ஒண்' |
| 14 | 10 | urol | ural |
| 14 | 15 | mogyar | magyar |
| 19 | 2 | கீழ்க்-கடலி | கீழ்க்கடலி |
| 25 | 8 | லீப்ரிட்ஸ் | லீப்நிட்ஸ் |
| 25 | 8 | Leibrity | Leibnity |
| 27 | 7 | Rosk | Rask |
| 27 | 26 | டச்சு= | டச்சு |
| 31 | 20 | பாறை | பறை |
| 33 | 14 | காற்றுக்= | காற்றுக் |
| 36 | 13-14 | கட்டைக்கு= | கட்டைக்கு |
| 36 | 15 | ஆபூர்வம் | அபூர்வம் |
| 39 | 15 | போன்றது | போன்றது. |
| 58 | 24 | னன | றன |
| 59 | 7 | நிலைப்படுத்துபவை | நிலைப்படுத்துவது |
| 59 | 11 | அவசியத்தாலும். | அவசியத்தாலும் |
| 62 | 19 | குறித்தல் | குறித்தனர் |
| 67 | 20 | தோரும் | தோறும் |
| 68 | 4 | from | form |
| 69 | 10 | Serebral | cerebral |
| 75 | 12 | எகரமாகிறதென்ப, | எகரமாகிறதென்ப. |
| 75 | 12 | எம் | எய் |
| 75 | 13 | மாகிறது, | மாகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 78 | 7 | இல்லை. | காண்க. |
| 78 | 8 | என்பதில்லை, | என்பதிற்காண்க |
| 81 | 22 | நிணைவு | நினைவு |
| 84 | 26 | என்றும், | என்றுவரும். |
| 89 | 23 | ஒசையிலிருக்கின்ற | ஓரசையிலிருக்கின்ற |
| 91 | 11 | ஒசைச் | ஓரசைச் |
| 92 | 16 | ஒண்ணுதது | ஒண்ணூதது |
| 93 | 14 | எறுனு | என்று |
| 104 | 23 | இறுக்கமாகும். | குறுக்கமாகும். |
| 105 | 14 | வாருலு. | வாருலு |
| 106 | 4 | சிறிது. | பிறிது. |
| 118 | 9 | என்பது. | என்பனவாம். |
| 120 | 16 | மறியாதை | மரியாதை |
| 120 | 24 | பகுதி-பின் | பகுதி-நின் |
| 121 | 12 | முன் < பின். | முன் < மின் |
| 122 | 11 | நயத்தியற்காக | நயத்திற்காக |
| 124 | 23 | (=பன்மை) | (பன்மை) |
| 125 | 7 | எற்பட்டுள்ள | எற்பட்டுள்ளன. |
| 126 | 17 | குறிப்பன, | குறிப்பன. |
| 127 | 17 | வந்தல் | வநடம. |
| 128 | 15 | நான்கு | நால்கு |
| 131 | 17 | பெரெச்சமாகவும் | பெயரெச்சமாகவும் |
| 133 | 3 | மலைவளம் | மலையவளம் |
| 134 | 14 | Optetive | Optative |
| 138 | 16 | 'கோண்' | 'கோள்' |
| 141 | 22 | உடையதன், | உடையன், |
| 142 | 23 | இயையப்படு | செயப்படு |

| | | | |
|---|---|---|---|
| 143 | 12 | என்ற | என்பதிற் |
| 144 | 2 | உருபு, | உருபு. |
| 144 | 3 | என்றாய் | என்பது |
| 147 | 13 | வரை | வர |
| 148 | 20 | Glossanal | Glossarial |
| 150 | 23 | காடுத, | காடு, |
| 152 | 17 | சபாயேடிக் | சாமாயேடிக் |
| 154 | 7 | வேஸ்டு | வேண்டு |
| 154 | 9 | ஈறு | ஈனு |
| 154 | 9 | ஈறு (year) | ஈனு (yean) |
| 154 | 11 | உன்னை | ஊனை |
| 155 | 16 | Avamaic | Avrmaic |
| 155 | 19 | Hete | Heb |
| 155 | 20 | urn | uru |
| 156 | 15 | இவ்வாரே | இவ்வாறே |
| 156 | 16 | ஒருக்கு | ஒருங்கு |

# மொழி நூற் கொள்கையும்
# தமிழ்மொழி அமைப்பும்.

ஓம்

# மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்

## மொழி நூற் கொள்கை.

தமிழ்மொழி அமைப்பை ஆராய்ச்சி செய்யு முன் மொழிநூற் பொதுக் கொள்கைகளை அறிந்து கொள்ளுதல் அவசியம். ஆதலின், அவற்றை முதலில் ஆராய்வாம்.

மக்கள் தங்கள் கருத்துக்களை ஒருவர்க் கொருவர் தெரிவித்துக் கொள்ளுதற்குப் பயன் படுத்துங் கருவி ஒலி மாத்திர மன்று. படம் எழுதிக்காட்டுவதனாலும், கைக்குறிப்பு முதலிய அடையாளங்கள் செய்வதனாலும், பல நிறக் கொடிகள் எடுப்பதனாலும், அமெரிக்க மிலேச்சர்கள் செய்வதுபோலத் தோற்சாட்டை ஒன்றினைப் பலவிதமாகக் காற்றிலடிப்பதனாலும், பிறவற்றாலும், கருத்தறிவித்தல் பல நாட்டுச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

ஐயறிவுடைய உயிர்கள் யாவும் தம் உணர்ச்சிகளைக் குறிப்பதற்கு மெய்ப்பாடுகள் தோற்றுவித்தல் யாவரும் அறிந்ததே. முகத்தைச் சுளித்தல்.

கண் சிவத்தல், புருவ நெரித்தல், நடு நடுங்கல், நகைத்தல், முகமலர்தல், முகம் வாடுதல் முதலியன வெவ்வேறு உணர்ச்சிகளைக் குறிப்பித்தல் தெளிவு. நெஞ்சம் கடுத்ததை முகம் காட்டும் என்னும் இயற்கை உண்மையை ஆசிரியர் திருவள்ளுவனார்,

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம். (குறள் 706)

என்ற குறளில் இனிது உணர்த்தினர்.

மக்கள் பொருத்தமான அடையாளங்களால் கருத்தை அறிவிப்பர். உணவு வேண்டுவோன், கையினால் வயிற்றைக் காட்டுதலும், வாய்க் கருகே விரல்களைக் குவித்து உண்ணுவதைக் காட்டுதலும், நீர் வேண்டுவோன், பருகுதற் குரிய கைக் குறிப்புக் காட்டுதலும், அடிப்பேன் என்போன், கையை ஓங்குதலும், பேசக்கூடா தென்போன், வாயைக் கையினால் பொத்திக் காட்டுதலும், இணக்கம் தெரிவிப்போன், கண்ணினாலும் தலையசைப்பாலும் அதைக் குறிப்பித்தலும், இடத்தைச் சுட்டிக் காட்டச் சுட்டு விரலைப்பயன் படுத்தலும், பல மொழி பேசும் மக்களுக்குள்ளும் விளங்கக் கூடிய பொதுக் குறிப்புக்களாகும். சில அடையாளங்கள் சில இனத்தார்க்கே சிறப்பாக உள்ளன. அமெரிக்க மிலேச்சருள் ஒரு சாரார் சுமார் 104 அடையாளங்களால் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றன ரெனவும், வேறொரு சாரார் 307 அடையாளங்கள் உடைய

ரெனவும் கேட்கப் படுகிறது. அவர்கள், கொடுப்பதைக் கையைத் திறப்பதனாலும், எடுப்பதைக் கையை மூடிக் கொள்வதாலும் காட்டுவர். மனிதனை, சுட்டு விரலை நேராக வைப்பதனாற் குறிப்பர். உண்மை என்பதை சுட்டு விரலை மாத்திரம், நீட்டிய கையினாற் காட்டுவர். ஊமைகள் செய்யும் அடையாளங்களும் அத்தன்மையன.

இனி, மக்கள் ஒலியினைப் பயன் படுத்து முறையினை ஆய்வாம். உணர்ச்சியைக் காட்டும் ஒலிக் குறிப்புக்கள் இயற்கை மெய்ப்பாடுகளோடு ஒரினமாவன. துன்பம் வந்தகாலை ஓவென்று கதறுதல், கோபம் வந்த போது முறுமுறுத்தல், மகிழ்ச்சி உற்ற போது நகைப்பொலி எழுப்புதல், முதலியன காண்க. தாழ்ந்தஉயிர்களும் (கீழ்ப் பிராணிகளும்) தங்கள் சினம், அவலம், மகிழ்ச்சி முதலியவற்றை வெவ்வேறு ஒலிக்குறிப்பால் உணர்த்துவனவே.

உணர்ச்சியையும் கருத்தையும் உணர்த்தாத ஒலி வெற்றொலி எனப்படும். காற்றொலி, கடலொலி முதலியன அத்தன்மையன. உணர்ச்சி கருத்து என்பவற்றைக் குறிக்கும் ஒலியே பேச்சொலிக்கு அடிப்படையானது. கருத்தைக் குறிப்பிக்கும் ஒலி, எழுத்தாற் குறிக்கப்படுதலின் அது எழுத்தொலி எனப்படும்.

பேச்சு அல்லது மொழி என்பது மக்கள் கூட்டத்தில் தோன்றி வழங்கும் எழுத்தொலித் தொகுதியே. உணர்ச்சி ஒலிகள், பொருள்களில் எழும் இயற்கை ஒலிகள், அடையாள ஒலிகள் முதலியவற்றின் அடியாகச் சொற்கள் தோன்றி இருத்தல் கூடும். 'மியா' என்ற பூனையின் ஒலி, பூனைக்குப் பெயராகச் செவிலித் தாயாரால் குறிக்கப்படும். பாபபுவானியர் (Papuanians) என்ற கூட்டத்தார், நாயை 'பௌ வௌ' என்ற அவர் நாட்டு நாய்க் குரலால் அழைப்பர். இரும்புக் கோடாலியைக் கீழே தட்டினால், 'டின் டின்' என்ற ஒலி கேட்டலால், 'டின் டின்' என்ற பெயரை அவர்கள் அதற்கு வழங்குகிறார்கள். புல்புல், குக்கூ, காகா என்ற சொற்கள் அவ்வொலிகளை எழுப்பும் பறவைகளுக்குப் பெயராக வழங்குவன. ஆங்கில நாட்டில் 'மூ, மூ' என்ற சொல் அவ்வோசையை இசைக்கும் பசுக்களுக்குப் பெயராய் வழங்குகிறது. பொருள்களுக்கு வெவ்வேறு மக்கள் வெவ்வேறு காரணத்தால் பெயரிடுதல் காண்க. அருவ நப்புக் குறிக்கும் 'ஞீ' என்ற ஒலியால் நாயைக் குறிப்பித்தல், சந்திரனில் தோன்றும் கருப்புப் பகுதியை அம்புலி என்றல், சலசல, என்ற நீரோட்ட ஒலி காரணமாக நீரைச் சலம் என்றல், அதற்கு உதாரணங்கள் ஆகும். நாகரிகம் முதிராத மக்களும் குழந்தைகளும் பெரும்பான்மை அறிவில் ஒத்த நிலையினர்.

குழந்தைக்கு முதலில் அழும் பருவமும், பின் குழறும் பருவமும், பின் மழலைப் பருவமும், இறுதியாகத் தக்க பேச்சுப் பேசும் பருவமும் உண்டாம். ம, ப, என்ற ஒலிகளைப் பிள்ளைகள் எளிதாக உச்சரித்தல் கூடும்.

வாயைத் திறந்தவுடன், 'அ' என்ற ஓசை பிறக்கின்றது. அம்மா, அப்பா, என்ற சொற்களைக் குழந்தைகள் எளிதில் உச்சரிக்கும். ககரத்தைப் பார்க்கிலும் தகரத்தை எளிதாக உச்சரித்தல் தெளிவு. தாதா என்பதைப் பிள்ளைகள் இலேசாக இயம்பும். ரகரத்தைப பார்க்கிலும் ககரத்தை உச்சரித்தல் எளிது. 'வெரி' (Very) என்ற சொல்லை 'வெகி' என்று ஆங்கிலக் குழந்தைகள் செப்புமாம். நாக்குத் தசைகள் வலியுறும் வரை நரம்பைச் செழுதல் கடினம். கட்டியான பண்டங்களை உண்ணும் பருவத்தில நாக்குத் தசைகள் வலியுறும். தொண்டையிற் கோழை இருந்தால் ரகரம் நன்ருய் ஒலிக்காது. இரும்பை, இலும்பென்றும், 'கிளின்' என்பதைக் 'கீன்' என்றும் ஒலிப்பது உண்டு. இரண்டு மெய்யெழுத்துக்களை ஒன்று சேர்த்து ஒலித்தலுங் கடினமே. 'கிளாக்' என்பதைச் சில பிள்ளைகள் 'காக்' என்று சொல்லிவிடும். தமிழில் இயற்கையாக ஒன்றுபடாத மெய்யொலிகளுக்கு இடையே உயிரொலி பயிலுதல் மரபு. 'ம்ருகம்' என்பது 'மிருகம்'

எனவும், 'சந்த்ரன்' என்பது சந்திரன் எனவும் வரு தல் காண்க.

மக்களுள் ஒருவர் நினைத்தபடி மற்றொருவர் நினையாமையால், ஒரு பொருளுக்குப் பல பெயர் அவர்களால் இடப்படும். நீரால் விடாய் தணியப் பெற்றவன், விடாய் தணிவிப்பது உணர்த்தும் பெயரால் நீரைக் குறிப்பிடுவன். நீரின் குளிர்ச்சியை உணர்ந்தவன் குளிர்ச்சிக்குரிய சொல்லால் நீரை உணர்த்துவான். நீரின் ஓட்டத்தைக் குறிக்குஞ் சொல்லால் நீரை மற்றொருவன் குறித்தல் கூடும். பிறவும் அவ்வாறே கண்டுகொள்க.

எழுத்தோசையாகிய பேச்சொலிக்கு மூலம், நமது உடம்பினுள் உந்தியில் எழுந்து மார்பிற் றங்கி தொண்டை வழியாக வாயிற் சென்று வேற் றுமைப்படுங் காற்றினோட்டமாம். மனத்திலெழுங் கருத்தே ஒலி வடிவாக வெளிப்படுதலின், அவ் வொலிவடிவிற்கு மூலமாகிய நுட்பப் பகுதிகள், கருத்தினை போர்த்துக்கொண்டு சிந்தையிலிருக் கின்றன. அவைபரு வகையின எனவும், அவை பாகுபாடு அடையாத பிண்ட நிலையில் தொகையின எனவும், அதற்கும் அதிநுட்ப நிலையில் நுண்ணியன எனவும், கூறப்படும். வெளியே கேட்கப்படும் ஒலி விரிவன எனப்படும். அழியாத நுட்பநிலை(சூக்குமை), நுட்பநிலை (பைசந்தி), நடுநிலை (மத்திமை), புறநிலை

(வைகரி), என்ற நான்கு நிலையிலுள்ள சொல்லே நால்வகை வாக்கு எனவும், மாறுமறை நான்கு என வும் பெரியோர்களாற் கூறப்பட்டன. பிண்ட நிலை யிலுள்ள கருத்து மக்கட் கெல்லாம் பொதுவாய் இருக்க, அக்கருத்து வெளிப்படும் எழுத்தொலி கள் மொழிதோறும் வெவ்வேறாதலின், பிண்ட நிலையிலுள்ள கருத்தைப் பொதிந்து நிற்கும் எழுத்து நுட்பம் எல்லா மொழிகளுக்கும் பொது வானதாமெனவும், அந்நுட்பத்தை அறியவல்லார் பல்வேறு மொழிகள் தெரிக்கும் கருத்துக்களை அறிய வல்லாரே எனவும் யோக நூலார் நுவல்வர். அக்கருத்து தொல்காப்பியத்துள் அந்தணர் மறை இயல்பு கூறுமிடத்துக் குறிப்பாக உணர்த்தப் படு தல் காண்க.

சொல்லும் அதன் கருத்தாகிய பொருளும் உடம்பும் உயிரும் போலச் சிந்தையில் ஒற்றுமைப் பட்டிருக்கலைக் கருதி, சொல்லும் பொருளும் ஒன்றே என்பர் ஒரு சாரார். புறத்துப் புலனும் ஒலியே சொல், உள்நின்ற கருத்தே அதன் பொருள் என்பார், சொல்லும் பொருளும் வேறு என்பர். சொல்லைக் கூறவே பொருளறிவு உண்டாவதால் இரண்டும் ஒருபுடை ஒற்றுமை உடையன என்பர் மற்றொரு சாரார். அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி இங்கே விரிக்க வேண்டியதில்லை. மக்கள் எல்லாரும் கருத்தைத் தெரிவிக்க சொற்றொடரைப் பயன்

படுத்துவர். குழந்தைகளும், பேச்சு விரிவடையாத நிலையில் உள்ள மக்களும், தங்கள் கருத்துக்களை விரிந்த வாக்கியத்தால் தெரிவியாமல், ஒரோவொரு சொல்லாலே அறிவிப்பர். பால் வேண்டுங் குழந்தை 'எனக்குப் பால் வேண்டும்' என்னாது 'பால், பால்' என்ற அளவே கூறி அழும். அதன் கால் நோவுற்றால் 'என் கால் வலிக்கிறது' என்னாது 'கால், கால்' என்றே கூவும். அச்சொற்களில் வாக்கியங்கள் தொக்கு நிற்கின்றன.

திட்பமாக கருத்தை அறிவிக்கும் மக்கள் பெயர்ச் சொல்லாலும் வினைச்சொல்லாலும் அதனைத் தெரிவிப்பர். அவற்றைத் தொடர்பு படுத்தும் சொற்கள் முதலில் ஒலிக்குறிப்பாகவும் தனிச் சொல்லாகவும் இருந்து பின் உருபாக மருவி இருத்தல் கூடும். 'வந்தான்' என்ற சொல் முதலில் வா + த் + ஆண் என்ற வடிவத்தில் நின்று, 'வா' என்பது வருதலையும், 'த்' என்பது அழுத்தத்தால், சென்றதைக் குறிக்கும் சுட்டு ஒலியாகவும் 'ஆண்' என்பது ஆண்பால் குறிக்குஞ் சொல்லாகவும் இருந்து, அப்பகுதிகள் ஒருங்கு சேர்ந்து, வந்தான் என உருவொலித்தபோது முதல் நின்ற பாகம் பகுதியின் குறுக்கமாகவும், பிற எழுத்துக்கள் உருபுகளாகவும் திரிந்திருத்தல் கூடும். சில மொழிகளில் பயனிலை குறிக்குஞ் வெளிப்படைச் சொல் வழங்குவதில்லை. 'அழகாய் இருக்கிறது' என்பதற்கு

'அழகு' என்ற சொல்லே வழங்கும். உதாரணம்: 'உன் படகு அழகு'. பாலினீஷியன் என்ற பாஷையில், 'அவன் வெள்ளைச் சட்டை உடையான்' என்றதற்கு 'அவன் வெள்ளைச் சட்டையோடு' என்று அளவே கூறப்படும். மிகப் பழைய சீன பாஷையில், சொற்களைத் தொடர்பு படுத்தும் ஒட்டுச் சொற்களும் பெரும் பான்மையும் இல்லை. ஒலியின் அழுத்தத்திலும், சொல்லின் இடம் பற்றியும் தொடர்பு குறிக்கப்படும். 'அடி' என்ற சொல்லை அழுத்தமாகச் சொன்னால் 'அடித்தேன்' என்னும் இறந்த காலப் பொருள் கொள்ளப்படும். 'நான் அடி அவன்' என்றால், நான் அவனை அடித்தேன் என்பது கருத்து. 'அவன் அடி நான்' என்றால் அவன் என்னை அடித்தான் என்பது கருத்து. 'வானிற் காற்று குளிரத் தொடங்கிற்று' என்பதற்கு வான் காற்று குளிர்ச்சி தொடங்கு என்றே எழுதப்படும். காலம் ஒலியின் அழுத்தத்தால் உணரப்படும். சில மொழிகளில் எழுவாய் முன்னாகவும் பயனிலை பின்னாகவும் அவை மாறியும், அவ்வாறே செயப்படுபொருள் முன் பின்னாகவும் காலம், பால், வேற்றுமை முதலியன உணர்த்தும் அசைகள் முன்னாகவும் பின்னாகவும், அமைதல் காணப்படும். திணை, பொருளை வைத்து அமையாது சொல்லை வைத்து அமைதலும் உண்டு. சொற்கள் சேருமிடத்துச் சில மொழிகளில் அவைகள் தனிச் சொற்கோவையாகவும், சொற்கள் உருபுகளை இழந்

தும், சில பகுதிகளை இழந்தும், தம்முள் ஒருங்கு பிணைந்தும், பகுதியும் உருபுகளும் சேர்ந்தபோது பகுதியின் உட்பகுதி எழுத்துப்போல விகுதியின் உட்பகுதி எழுத்து மாறியும், பகுதி விகுதி முதலியன ஒருங்கு பிரிக்க முடியாது பிணைந்தும் வழங்குவது பல்வேறும் மொழி ஆராய்ச்சியால் அறியப்படும். 'நீ வா' என்ற சொல் தனிச் சொல் நிலை. 'மரை புனை சீறடி' என்பது தாமரை புனையும சிறிய அடி என்பதற்குப் பதிலாக வழங்குமிடத்துச் சொற்பிணை நிலை காணப்படும். பாப்புப் பை, பாப்புப் பை என மருவுங்காலை எழுத்து மாற்றமும், வர + இல்லை, வல்லை என்றபோது உட்பிணைப்பும் காணப்படும். நான் அதை அடிக்கிறேன் = ஐ பீட் இட் (=I beat it)=நான் அடி அது என்று ஆங்கிலத்தில் வழங்குங்கால் பிரிநிலையும் அறிக. ஒரு பாஷை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு நிலையில் நிற்பது ஆராய்ச்சியால் அறியப்படும். ஆங்கில மொழி உட்பிணைப்பு நிலையில் நின்று, பிரிவு நிலைக்கு வந்துள்ளது.

சொற்றொடர்களைச் சொற்களாகவும் உருபுகளாகவும் பகுத்து ஆராய்தல் போல, சொற்களை எழுத்துக்களாகப் பகுத்து எழுத்தின் பிறப்பு, இனம் முதலியவற்றை ஆய்தலும் இலக்கணத்தின் பகுதியே. பல மொழிகளின் சொற்களை ஆயுமிடத்து அவற்றின் தோற்ற ஒற்றுமை கருதி அவை இனமான பாஷைகளுக்கு உரியன என்று கொள்ளு

தல் தவறு. தென் ஐரோப்பாவில் வழங்கிய கிரீக் (Greek) மொழியிலும் கிழக்கு இந்தியத் தீவில் வழங்கும் பாலினீஷியன் மொழியிலும், 'மதி' என்ற சொல் 'கண்' என்பதைக் குறிக்கின்றது. அது பற்றி அந்த இரண்டு மொழியும் ஓர் இனத்தன வென்று கொள்ள இடமில்லை. வட சைனாவில் வழங்கும் 'மஞ்சு' என்ற சித்திய (Sithian) மொழியில் இரத்தத்தைக் குறிக்கும் சொல 'செங்கி' யாகும். மத்திய ஐரோப்பாவில வழங்கிய லத்தீனில (Latin) 'செங்க்வினா' என்ற சொல் அக்கருத்தையே குறித்து நின்றது. அது பற்றி இரு மொழியும் ஓர் இனம் ஆகவில்லை. ஆங்கிலத்தில் 'ஒன்' (One) என்பதும் தமிழில் 'ஒண்' என்பதும் ஒரே கருத்து உடையனவாயினும் இரண்டின் மூலவடிவமும் வெவ்வேறே. ஆங்கிலத்தில் 'ஏகோம்' என்ற சொல்லே 'ஓம' என்றாய் 'ஒன்' என்று ஆயிற்று. தமிழில 'ஒன்று' என்பதே 'ஒண்ணு' என மருவிற்று. ஆங்கிலத்தில் 'மர் மர்' என்பது தமிழில் 'முறு முறு' என்பதும் ஒத்து இருத்தல் பற்றி, ஆரிய குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலமும் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த தமிழும் ஓர் இன மொழி ஆகா. மொழிகளை ஒத்துப் பார்க்குமிடத்து அவற்றின் பண்டை வடிவத்தைத் தெரிந்து இலக்கண ஒற்றுமையும் பொருள் ஒற்றுமையும் ஒத்து இருத்தலறிந்து, அவை ஓரினத்தனவென்று தெரி

ரித்தல் முறை. ஆங்கிலத்தின் மூல மொழியாகிய ஆங்கிலோ - சாக்சன் (Anglo-saxon) என்னும் மொழியும் இந்நாட்டு ஆரிய மொழியும் தம்முள் சொல்லொற்றுமை பொருளொற்றுமை மிகவும் அதிகமாக உடையன. ஆதலால், இரண்டும் ஆரிய குடும்பத்தைச் சேர்ந்தன எனப்படும். இது மொழிநூலார் கண்ட உண்மை.

மொழிநூலானது எழுத்தொலியியல், சொல்லமைப்பியல், சொற்பொருளியல் என மூவகைப்படுத்து ஆயப்படும். உலகத்திலுள்ள மொழிகளின் பகுப்பை முதற்கண் கூறி அவற்றின் வேறுபாடுகளைச் சொல்லமைப்பில் ஒருவாறு காட்டுவாம்.

தென்னாட்டில் வழங்கும் மொழிகள் திராவிட குடும்பம் எனப்படும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் என்பனவும் நீலகிரிமலையிலுள்ள தோடர் முதலியோர் பேசும் மொழிகளும் அக்குடும்பத்தின. வடநாட்டில் வழங்கும் மொழிகள் பலவற்றின் இலக்கணம், தமிழ் இலக்கணத்தோடு ஒத்திருக்கின்றது. அவற்றின் சொற்கள் பெரும்பான்மையும் வடமொழிச் சார்பினவே. வட மொழியும் தமிழும் கலந்து உண்டான பிராகிருத மொழியினின்று கிளைத்துத் திருந்திய பேச்சுக்களே. வங்காளி, இந்தி, காஷ்மீரி, பஞ்சாபி, குஜராட்டி, மராட்டி முதலிய மொழிகள். வடநாட்டு மொழி

களும் அரபியச்சார்பும் சேர்ந்து இந்துஸ்தானி அல்லது உர்டு என்ற மொழி ஏற்பட்டு ஐதராபாத்தில் பெரிதும் வழங்கிவருகிறது.

இன்றும், மத்திய இந்தியாவிலுள்ள நாகரிக முதிராத பல மக்களின் மொழிகள், கோலேரிய (Kolarian) குடும்பத்தைச் சேர்ந்தன. அவற்றை மண்டா (Munda) மொழிகள் என்பர். அவைகள் திராவிடப் பெருங்குடும்பச் சார்பினவே என்பது டாக்டர். கிரையர்சன் (Dr. Grierson) கருத்து. பெலுசிஸ்தானிற் பேசப்படும் பிராஹுயி (Brahui) என்ற மொழியும் திராவிடக் குழுவினதே.

இந்தியாவிற்கு வெளியே சீனமொழி மிகப் பழமையானது. இலக்கணத்தால் அதனோடு ஒற்றுமை உடையவாய்க் கொச்சின்சீனு, கம்போடியா, முதலிய இடங்களில் வழங்கும் மொழிகள் அன்னுமித்தொகுதி (Annamese group) எனப்படும். சயாமொழி, தை (Thai) எனப்படும். இலக்கணத்தால் அது சீனத்தோடொத்ததே. எனினும் சொற்கள் வேருகவே உள்ளன. பர்மியப்பேச்சும் அத்தகையதே. திபேத்தின் மொழியில் ஓரசைச் சொற்கள் மிகுதியாய் இல்லை.

வடசைனுவில் வழங்கும் மங்கோலிய மொழி, துருக்கி நாட்டிலிருந்து கிழக்கே ருஷியா வரை

வழங்கும் துரானிய மொழிகள், வட ஐரோப்பாவில் பின்லண்டு முதல் கிழருஷியா வரை வழங்கும் மொழிகள் யாவும் சித்தியப் பெருங்குடும்பத்தைச சார்ந்தன. அவை பலப்பல தனித்தொகுதிகளாய்ப் பிரிவன. திராவிட மொழிகளை இந்தச் சித்திய (Scythian) குடும்பத்தின் ஒரு தொகுதியாக டாக்டர் கால்ட்வெல் கருதுகிறார். இவையெல்லாம் பின்னசை உருபுச்சொற்கள் மிகுதியாக உடையன. அவற்றை ஊரல்-ஆல்டேயிக் (Urol-Altaic) என்பர்.

சித்தியமொழிகளை ஐரோப்பிய இனம், ஆசிய இனம் என்ற இருபகுதிகளாகப் பகுத்து அவற்றை ஆய்தல் உண்டு. பின்னோ-உக்ரிக் (Finno ugric) தொகுதியில் பின்னிஷ், பின்லண்டில் வழங்குவது; ஹங்கேரியில் மக்கியார் (Mogyar) மொழி வழங்கு வது; வொல்கா நதியின் மேலிடம் நடுவிடங்களில், பல கிளைமொழிகள் உள்ளன. இத்தொகுதிகளோடு லாப்லாண்டில் உள்ள லப்போனிக் மொழி, ஒனிகா ஏரிக்கரையில் வழங்கும் ட்சூடிக், லடோகா ஏரி முதல் வெண்கடல் வரை வழங்கும் கார்லியன், பின்லண்டு குடாக்கடலுக்குத் தெற்கில் வழங்கும் எஸ்தோனியன், கோர்லண்டில் வழங்கும் லிவோனி யன் முதலிய மொழிகளும், ஊரல்மலைத் தொடர்க் கருகில் வழங்கும் பேர்மியன் (Permian) மொழித் தொகுதிகளும் வட ஊரலினருகில் உக்ரிக் தொகு

தியும் ஆகியவெல்லாம் ஐரோப்பிய ருஷியாவில் வழங்குவன.

ஆசிய இனத்தில், சைபீரியாவில் வழங்கும் சாமாயேடிக் தொகுதி, கீழை ருஷியாவில் வழங்கும் துங்கீஸ் தொகுதி, தெற்கு ருஷியாவிலும் வடசைனாவிலும் வழங்கும் மங்கோலியத் தொகுதிகள், ஐரோப்பிய துருக்கி முதல் சைபீரியா வரை வழங்கும் துருக்கி-தார்தாரிக் (Turko-Tartaric) மொழிகள், துருக்கி மொழிகள் என்பன சேர்ந்தனவாகும்.

ஆரியப் பெருங்குடும்பத்தில் சமஸ்கிருதம், பாரசீகம், (ஐரானிய மொழிகள்), ஆசியாமைனரி லுள்ள அர்மீனியன் கிரீக் தொகுதி, லத்தீன் தொகுதி, ஜெர்மன் தொகுதி, ஆங்கிலத் தொகுதி, அல்பேனியத் தொகுதி, ரோமானியத் தொகுதி, வெல்ஷ் தொகுதி, ஸ்காண்டிநேவியன் தொகுதி, ருஷிய மொழி, கோதிக், சிலோவோனிக், பால்டிக் அல்லது லெட்டிக் முதலிய மொழிக்குழு என்பன மேலை ஆசியா மத்திய ஐரோப்பா, தெற்கு ஐரோப்பா, வடமேற்கு ஐரோப்பா என்னுமிடங்களில் வழங்குவன. வட ஆப்பிரிக்காவிலும் அரேபியாவிலுமுள்ள மொழிகள் — சேமிடிக்-ஹாமிட்டிக் குடும்பத்தைச் சேர்ந்தன. வட பிரிவினுள், அசீரிய மொழி, அரமிய மொழி, கானனீய மொழி, பாபிலோனிய மொழி, யூத மொழி, ஹீபிரு மொழி, பினிசிய மொழி

என்பன அடங்கும். தென் பிரிவினுள், அரபிக், எகிப்து மொழி, பேர்பேர் மொழி, அபிசீனிப மொழி, இத்தோப்பிய மொழி முதலியன அடங்கும்.

மத்திய ஆப்பிரிக்காவில் உலாப் (Wolof) தொகுதி செனிகல், செனிகாம்பியா முதலிய இடங்களில் வழங்குவன. ட்சாட் ஏரியைச் சுற்றியுள்ள நாடுகளில் பார்னு (Bornu) மொழிகள் பேசப்படுவன. இவைகளெல்லாம் நீகிரோவர் பேச்சுக்களே. ட்சாட் (Tchad) ஏரிக்கு மேற்கே பூலா (Fula) தொகுதி, நூபியத் தொகுதி என்பன சிறந்துள்ளன. தென் ஆப்பிரிக்காவில் ஹாட்டென்டாட் தொகுதி, புஷ்மன் தொகுதிகள வழங்குவன.

கீழை ஆசியாவில் ஜப்பான் மொழி தனித்தன்மை உடையது. ஐரோப்பாவில் ஸ்பெயினுக்கு வடக்கிலுள்ள பாஸ்கு (Basque) மொழிகள், வட ஐரோப்பாவிலுள்ள எஸ்கிமோப் பேச்சுக்கள், அமெரிக்காவில் கானடாவிலுள்ள அல்காங்கின் தொகுதி, அமெரிக்காவில் நாகரிக முதிராத மக்கள் (அமெரிக்க இந்தியர்) பேசும் மொழிகள், என்பன பல் சொற்கள் உருவிழந்து வார்த்தை போலப் பிணைந்த வாக்கியங்களுள்ள பல்சொற்குழு வென்னும் (Polysynthetic) குடும்பத்தைச் சேர்ந்தன.

ஆப்பிரிக்காவுக்குக் கிழக்கே ஆசியாவுக்குத் தெற்கே உள்ள தீவுகளின் மொழிகள், மலயா-பாலி

னீஷியன் தொகுதி, மலயா-ஜாவா தொகுதி, தகாலா தொகுதி, மேலேனேஷியத் தொகுதி, பாலினீஷியத் தொகுதி, ஆஸ்திரேலியத் தொகுதி என்பன பலபகுதிப்பட்ட ஒரு பெருங்குடும்பத்தின.

இவ்வாறு பலவகைப்பட்டு வழங்கும் பல்லாயிர மொழிகள் சில குடும்பங்களில் அடக்கிக் காட்டப் பட்டுள்ளன. இக்குடும்பங்கள் ஆதியில் ஒன்றிற் கிளைத்தனவா தனித்தனி தோன்றினவா என்ற ஐயப்பாடு இன்னும் முற்றிலும் முடிவாகவில்லை. ஒன்றிற் கிளைத்தால் அவ்வொரு தனிப் பழைய மொழி மக்கள் முதற்றோன்றிய நாட்டில் வழங்கும் மொழி ஆகுமாயின் அது தமிழோடு ஒத்த மூல மொழியாதல் கூடும் என்பாரும் உளர். அதன் சார்பான ஆராய்ச்சி இனித்தான் தெளிவாக ஏற்பட வேண்டியதாய் இருக்கிறது.

ஆராய்ச்சி இயற்றுங்கால், ஒரு மொழி பேசுவோர் ஓரினத்தவர் என்பதற்கு இடமில்லை. ஓரினத்தார் ஆதியில் தாம் பயின்ற மொழியை விடுத்துப் பிறிதொரு மொழியைப் பயில்வதுண்டு. யூதர்கள் தாங்கள் தங்கும் தேசத்தின் மொழியைப் பேசுகின்றார்கள். அவர்களுடைய ஆதிமொழி ஹீப்ரு. நீகிரோவர் அமெரிக்காவில் ஆங்கில மொழியையே தங்கள் சொந்த மொழியாகக் கொண்டனர். ஆரியப் பிராம்மணர் தாங்கள் தங்கும் நாட்டில் பயிலும்

மொழியைத் தமது வீட்டு மொழியாகவும், வட மொழியைத் தங்கள் பொதுச் சமயமொழியாவும் இந்நாட்டிற் கைக்கொண்டனர். வடகிழக்கு ஆப்பிரிக்காவில் நீக்கிரோவர் அரபிய மொழி பேசுகின்றனர்.

ஒரே மொழி தன் வளர்ச்சியின் பல நிலைகளிலே வெவ்வேறு சொல்லமைப்பைத் தழுவுகின்றது. ஆங்கிலம் ஆதியில் உட்பிணைப்பு (Inflexion) உள்ள மொழியாக இருந்து தற்காலத்தில் பிரிவுநிலை (Analytical) மொழியாக மாறியுள்ளது.

வெவ்வேறு இனத்தார் தத்தம் மொழியமைப்பில் ஒரு தன்மைத்தாய சொல்லமைப்பை உடையராயிருத்தலுமுண்டு. ஆஸ்திரேலியரும் ஹங்கரி நாட்டிலுள்ள மாகியார் (Magyar) என்னும் இனத்தவரும் ஒட்டுச்சொல்லமைப்பு (Agglutinative) மொழிகளையே பேசுகின்றனர்.

மக்கள் இனம், தோல் நிறம், தலையோட்டளவு, மயிர்த்தன்மை முதலியவைகள் பிறவியிலேயே வேறுபடுவதில் வைத்துத் துணியப்படும். இந்தியாவிலும் மேலை ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பெரும்பாலும் மெல்லிய தலைமயிரும், நீண்ட தலையும் உடைய காக்கேசிய இனத்தவர் வாழ்கின்றனர். கம்பளி மயிரும் கருநிறமும் நீள்தலையுமுடைய மக்

கள் நீகிரோவர் எனப்படுவர். அவர்களது நிலையான இடம் ஆப்பிரிக்காவே. சீனநாட்டிலும் கிழக்-கடலிடைத் தீவுகளிலும் வாழ்வோர் மஞ்சள் நிறமும் தட்டை மூக்கும் வட்டத்தலையும் உடைய **மங்கோலிய** இனத்தவர் ஆவார். அமெரிக்காவின் பழங்குடிகள் இவர்களினின்று நிறத்தால் மட்டும் வேறுபட்டவர்கள்.

தென் ஆசியாவிலிருந்து நீகிரோவர், மக்கள் இனத்தில் முதன்முதற் றோன்றி உலகெங்கும் பரவினர். மங்கோலியர் இரண்டாவதாகத் தோன்றியிருத்தல் கூடும். அவர்க்குப் பின் காக்கேசியர் தோன்றினர். மங்கோலியரும் காக்கேசியரும் கலந்த இனத்தவரே, சித்தியப் பெருங்குடும்பத்தின் மொழிகளை வட ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பல இடங்களிற் பேசுவாராயினர். எகிபதியர் முதலிய மேலை ஆசியமக்கள் காக்கேசியப் பகுதியினராகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர். அவர்கள் **செமிடிக்** குடும்ப மொழிகள் பேசுவோர்.

இதுவரை கூறியவற்றால், மக்கள் இனமும் மொழியினமும் தொடக்கத்தில் ஒத்திருந்தாலும் பிற்காலத்தில் பல இடங்களில் மாறுபட்டுள்ளன வென்பது தெரியவரும்.

## எழுத்து வடிவம்.

ஒலியானது தனது அதிர்ச்சித் தொகுதியால் வடிவங்களை உண்டாக்குவது. நாம் ஒலிக்கும் ஒவ்வோரொலியும் வெவ்வேறு உருவுடைய காற்றலைகள் வாயிலாக மணல் முதலியவற்றில் தாக்கியபோது வெவ்வேறு வரிவடிவுகள் அமைகின்றன என்று அறிவியல் நூலார் கண்டுள்ளார்கள். காலஞ்சென்ற தமிழ்த் தலைமகன் திருவாளர். பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் ஓ என்பது ஓ என்ற ஒலியின் வடிவ மென்றும், அதன் பகுதிகளாகவே தமிழ் நெடுங்கணக்கிற்கு ஆதியில் வரிவடிவங்கள் அமைக்கப்பட்டன வென்றும் கூறினார். அது நன்றாக ஆயற்பாலது. ஆதியில் வட்டெழுத்து ஏற்பட்டுப் பிற்பாடு சதுரப் பகுதிகளாக அவை மாற்றப்பட்டன என்பது அவர் கொள்கை.

பிற நாடுகளில், எழுத்துக்கள் எப்படி ஏற்பட்டன என்று ஆயுமிடத்து, பொருள்களைக் குறிப்பதற்கு எழுதிய படங்களினின்று அவை ஏற்பட்டன என்று தெரிகிறது. பண்டை எகிப்தியர், அத்தகைய பட எழுத்துக்களைத் தங்கள் கல்லறைச் சாசனங்களில் சில ஆயிர ஆண்டுகளாகப் பொறித்து வந்தனர்.[1] வட இந்தியாவில் மோகஞ்சதாரோ என்னுமிடத்தில் தமிழரது பண்டைய பட எழுத்துக்களின் வடிவுகள் காணப்படுகின்றன என்று ஹீராஸ்

பாதிரியார் கூறுகின்றனர். யாப்பருங்கலவிருத்தியில் தமிழுக்குப் பட எழுத்துக்கள் இருந்தன என்பது குறிக்கப்படுகின்றது. சீனர்களுக்குள்ளும் அமெரிக்காவில் 'அஸ்டெக்' (Aztec) என்னும் சாதியார்களுக்குள்ளும் அவ்வித பட எழுத்துக்கள் வழங்கின. காணப்படும் பொருள்களைக் குறிப்பதற்கு அவற்றின் வடிவத்தை எழுதுதல் எளிது. 'கேட்டல்' என்னும் வினைச்சொல்லைக் குறிப்பதற்கு அவர்கள் ஒரு கதவை எழுதி அதிற் காது ஒன்று இணைத்து வைத்தனர். இருகை கோத்த படம் நட்பினை உணர்த்தும். குணங்களை உணர்த்துவதற்குப் பலவகை அடையாளங்கள் ஏற்பட்டு, அவற்றுள் ஒன்று மிகுந்த ஆட்சிபற்றி நிலைபெறுவதாயிற்று. 'பெரு' என்ற அமெரிக்க நாட்டில், இரண்டடி நீளமுள்ள கயிற்றில் பலநிற நூல் வரிசைகள், பலவிதமாக முடிச்சிட்டும் பின்னியும் தொங்கவிடப்பட்டுள்ளன. நூல்களின் நிறத்தையும் வரிசையையும் வைத்து அரசாங்க அதிகாரிகள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதும், சாட்சியங்கள் வைத்துக்கொள்ளுவதும் நிகழ்ந்தன. வெண்ணிறம், வெள்ளியையும் சமாதானத்தையும், செந்நிறம் தங்கத்தையும் போரையும் குறிக்கும்.

பொருள்களைக் குறிக்கும் பட எழுத்துக்கள் வழக்கத்தில் தேய்ந்து மாய்ந்து பொருள்களை நன்கு நினைவு படுத்தாது அவற்றின் அடையாளங்களா

யின. ΛΛΛΛ என்ற மலையின் படம் Λ என்றாயிற்று. அவ்வாறாகவே, ஒரு தன்மையவாய் ஒலிக்கும் சொற்களைக் குறிக்க ஓர் அடையாளம் ஏற்படும். 'உருவப்பிரதி' யாயிருந்த எழுத்து 'ஒலிப்பிரதி' யானபின், ஒவ்வொரு ஒலியையுங் குறிக்க வெவ்வேறு எழுத்துக்கள் நாளடைவில் வழக்கில் நிலைபெறும். ஐ என்பது தலைமை, மூச்சு என்ற பொருள்படுதற்குக் காரணம், தலைமையைக் குறிக்கும் அடையாளத்தையே வரிவடிவில் இரண்டையுங் குறிக்கப் பயன்படுத்தினமையே. கருத்தைக் குறித்த எழுத்து ஒலியைக் குறிக்குங்கால், ஐ என்ற தனி ஒலியை அவ்வடையாளங் குறிப்பதாயிற்று. இவ்வாறே நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களெல்லாம் ஒவ்வொரு ஒலியைக் குறிப்பதாய் அமைந்தன.

தமிழகத்திலும் எகிப்திலும் சீனதேசத்திலும், பட எழுத்துக்களும், அசீரியா பாபிலோனியாவில் முக்கோண முளைஎழுத்துக்களும் (Cuneiform inscriptions) ஆதியில் வழங்கின. பட எழுத்துக்களை மிகவும் பயின்ற பினிசியரிடமிருந்தே பல நாட்டினர் தம்மொழிகளுக்கு வரிவடிவு அமைத்துக் கொண்டனர் என்பது மேலைநாட்டினர் கொள்கை. பினிசியர் (Phoenicians) பெருங் கடல் வணிகராய்த் திகழ்ந்தனர். எகிப்தியரிடமிருந்து பினிசியரும், அவரிடமிருந்து கிரேக்கரும், அவரிடமிருந்து ரோமரும் பின்னர்ப் பலரும் எழுத்து வரிசை (லிபி)

வகுத்துக்கொண்டனர் என்ப. பாபிலோனிய லிபியிலிருந்து அரபியலிபி வந்திருக்கலாம். செமிட்டியர் எகிப்திய நாட்டுக் குருக்கள் வகுத்த லிபியினின்று தமது லிபியை வகுத்தனராம். பினிசிய மொழி 22 எழுத்துடையதாய் வலப்பக்கமிருந்து இடப்பக்கம் எழுதப்படுவதாய் இருந்தது. கிரேக்கர் இடப்பக்கமிருந்து வலப்பக்கம் எழுதத் தொடங்கினர். இதன் விரிவு ஆங்கிலத்தில் டக்கர் என்பார் எழுதிய மொழியியல் வரலாற்றிற் (Introduction to the natural History of Language) காணப்படும்.

## மேலைநாட்டு மொழிநூல் வரலாறு.

மேலைநாட்டில் மொழிநூல் தொடங்கிய சரிதம் வருமாறு. ஐரோப்பாக்கண்டத்திலே கிரேக்க நாடுதான் முதன்முதல் நாகரிகம் அடைந்தது. பிளேட்டோ என்னும் அறிஞர், சொல்லிற்கும் சொற்பொருளிற்கும் உள்ள தொடர்பினை ஆய்ந்தனர். சொல் தக்க காரணப்பெயராய் இருக்கும் மொழியே சிறந்ததென்பது அவர் கருத்து. ஆசிரியர் தொல்காப்பியனார், 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு' என்றனர். அது உண்மையே. சொல்லின் காரணத்திற்கு ஏடு தெளிவாக யாண்டும் எழுதப்படவில்லை. அது இன்னதாயிருக்கு

மென்று பிற்காலத்தார் ஊகிப்பதே பெரும்பாலும் நிகழ்கின்றது.

சொல், எண்ணத்தினைத் தெரிவிக்கும் ஒலிவடி வாய் உள்நின்று எழுதலின், சொல்லும் சொற் பொருளும் வேறல்ல என்ற கொள்கையும் அக்கா லத்தே நிலவிற்று.

இலக்கணம் இந்திய நாட்டில் தான் முதலிற் உருவெடுத்ததெனினும், ஐரோப்பாவில் முதலில் அரிஸ்டாட்டில் என்பவர் தான் இலக்கணப் பாகு பாடுகள் வகுத்தனர். பெயர், வினை, வேற்றுமையுருபு கள் முதலியன வகுத்து ஓதப்பெற்றன. எகிப்தில் அலெக்ஸாண்டிரியா என்னும் நகரத்தில் நூல்நிலையம் கலைஞர்கழகம் முதலியன இருந்தன. அங்கே கிரீக் இலக்கணம் தழைத்தோங்கிற்று. ஹோமர் முதலி யோர் இயற்றிய பண்டைய நூல்களைப் பொருள் கொள்வதற்கு கிரீக் இலக்கண ஆராய்ச்சி பயன் தந்தது.

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் கி. பி. மத் திய காலத்தே லத்தீன்மொழி வளர்ந்தோங்கிற்று. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் புது எழுச்சிச் சீர்திருத்தம் தோன்றியபோது, பண்டைக் கிரேக்காது ஆராய்ச்சி முறைகள் ஆட்சிக்கு வந்தன. பைபில், நாட்டுமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டபோது ஹீப்ரு மொழியாராய்ச்சி

தலையெடுத்தது. (பைபிள் சார்பாய் உண்டான பற்றுக் காரணமாக, ஹீப்ருவே ஆதிமொழி என்ற நம்பிக்கை ஏற்பட்டு, அதில் நின்றே ஐரோப்பிய மொழிகள் தோன்றியிருக்க வேண்டுமென்ற தவறான கொள்கை தலையெடுத்தது. அது காரணமாக, ஹீப்ருவுக்கும் பிறமொழிகளுக்கும் தொடர்புகள் கற்பிக்கப்பட்டன. லீப்ரிட்ஸ் (Leibritz) என்னும் புலவர் முயற்சியால், ருஷிய சக்ரவர்த்தி யொருவர் பல மொழிகளிலுள்ள ஒத்த சொற்கோவைகளைத் தொகுத்தனர். இரண்டாவது காதரைன் (Catherine II) என்னும் ருஷ்ய சக்ரவர்த்தினியும், மொழியாராய்ச்சியில் விருப்பமுடையராய் விளங்கினர்.

பதினெட்டாவது நூற்றாண்டில் பல பேச்சுகளுக்குமுள்ள தொடர்பைத் தீர்மானிப்பதற்குச் சொல்லாராய்ச்சி மட்டும் போதாது, அவற்றின் இலக்கண ஒற்றுமையும் அவசியமாலதென்ற கொள்கையை ஹேர்வஸ் என்னும் புலவர் வற்புறுத்தினர். லத்தீன இலக்கணம் சிறந்த முறையில் அமைந்திருப்பதாக அவர் கருதினர். மொழியாராய்ச்சிக்காகப் பிரானசில் கலைஞர்கழகம் (Academy) ஒன்று ஏற்பட்டது. அக்கழகத்தார் உலகவழக்குச் சொற்களைப் பொருட்படுத்தாது நூலில் வழங்கும் சொற்களைக் கோவை செய்தனர்.

மொழியானது இயற்கையாகத் தோன்றிய தென்ற கொள்கை நிலைபெற்றது. ஹெர்டர் என்னும் புலவர் 1772-ல் மொழிமூலம் என்ற ஒரு வியாசம் எழுதி, அதிலே, மொழியை ஒரு மனிதன் உண்டாக்க வில்லை; அது இயற்கையாய் எழுந்தது: ஒரு நாட்டினரது உள்ளமே சொற்களாய் உருவெடுக்கின்றது என்று வற்புறுத்தினர். 1796-ல் பெர்லின் நகரத்தில் டாக்டர் ஜெனிஸ்க் என்பவர் பூரணமான மொழியின் இலக்கணம் என்ற ஒரு நூல் எழுதி வளமும், ஆற்றலும், தெளிவும், ஓசை நயமும் நல்ல பேச்சிற்கு (Language) வேண்டுமென்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஜோன்ஸ் முதலிய புலவர்கள் இந்தியாவிற்கு வந்து வடமொழி கற்று, அதன் இலக்கணத்தை மேலை நாட்டு மொழியிலக்கணங்களோடு ஒப்பிட்டனர். பிரென்சுப் பாதிரி ஒருவர் லத்தீனையும் சமஸ்கிருதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தனர். 1796-ல் ஜோன்ஸ், வடமொழியானது கிரீக் மொழியைக் காட்டிலும் பூரணம் வாய்ந்ததாயும் லத்தீன் மொழியினும் வளமுள்ளதாயும் இவ்விரண்டு மொழிகளைக் காட்டிலும் திருத்தமுற்றிருப்பதாயும் தெரிவித்தார். பின்னர், புலவர்கள், லத்தீன், கிரீக், சமஸ்கிருதம் என்ற மூன்று மொழிகளையும் ஒப்பிடத் தொடங்கினர்.

1808-ல் பிரிடெரிக் வான்ஷ்லேகல் இலக்கணங்களைத் திருத்தமாக ஒப்பிடும் முறையை வகுத்தனர். அவர் சகோதரர் ஏ. வி. ஷ்லெகல் என்பார் மொழிக்குடும்பங்களை மூவகையாகப் பகுத்தனர். 19-ஆம் நூற்றாண்டிலே பாப் (Bopp), கிரிம் (Grim), ராஸ்க் (Rosk) என்னும் புலவர்கள் மொழிநூலிற்கு வித்திட்டனர். ராஸ்க் (1787-1852) என்பவர், ஒரு நாட்டினரது இலக்கியம் ஏற்படுதற்கு முந்தியுள்ள சரித்திரம் அறிதற்கு மொழிநூலாராய்ச்சி முக்கிய கருவி என்று காட்டினர். ஒரு குடும்பத்திலுள்ள சில மொழிகளில் ஒரு சொல் ஒவ்வோரெழுத்துக்களில் வேற்றுமை உடையதாய் நிற்பதற்கு உரிய விதிகளைப் புலப்படுத்தினர். தமிழில் பழைய என்பது கன்னடத்தில் ஹளய என்றிருப்பது அதற்கு உதாரணமாகும். பல சொற்களில் அவ்வாறிருந்தால், தமிழ்ப்பகரம் அச்சொற்களில் ஹகரமாய்க் கன்னடத்தில் மாறி நிற்றல் அல்லது ஒத்திருத்தல் காணப்படும். ஜெர்மனிய மொழிநூற் புலவர்கள் இந்திய மொழிகள் ஆரியம், திராவிடம் என்ற இருவேறு குடும்பத்திற்குரியன என்றுரைத்தனர். கிரிம் என்பவர் 1812-ல் உலகவழக்கிலுள்ள வாய்ப்பாடல்கள், கதைகள் முதலியவைகளை ஆய்ந்தனர். உலக வழக்கு மொழிகளும், மொழி ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை அவர் காட்டினர். டச்சு—மொழியை அவர் விரிவாக ஆய்ந்தனர். ஒரு

மொழியிலுள்ள வல்லெழுத்துப் பிறிதொரு மொழியில், மூச்செழுத்தாக மாறுதலையும், மூச்செழுத்து இடையெழுத்தாக மாறுவதையும் விளக்கினர். அவர் பெயரால் கிரிம்ஸ் லா (Grims' law)என மொழி நூல்விதி யொன்று பெயர் பெற்றுள்ளது.

பிரான்சு நாட்டு பாப் என்பவர் (1797-1867) பல ஆரியமொழிகளின் இலக்கணங்களை ஒத்துப் பார்த்து, இலக்கண உருபுகள், விதிகள் முதலியவற்றின் மூலங்களைக் காண முயன்றனர். அவர் எழுதிய பெரு நூலாகிய ஆரியஒப்பீட்டிலக்கணம் 1833 முதல் 1849 வரை பல புத்தகங்களாக வெளிவந்தன.

வில்ஹேம் வான் ஹம்போல்ட் (Wilhem von Humboldi) என்பவர் (1767-1835) மொழி என்பது பேசுவார் தன்மையறியுங் கருவி என்றும், சில ஒலிகளுக்கும் கருத்துக்களுக்கும் இயற்கைத் தொடர்புளது என்றும், மொழி உள்ளத்தை வெளிப்படுத்தும் செயல் என்றும் காட்டினர். மொழியமைப்பானது சொற்செறிவு, ஒட்டு, பிணைப்பு, தனிநிலை என்ற பலவகையாக நிலவும் முறையை அவர் விளக்கினர்.

பிரெட்ஸ்டார்வ் (Breds-dorf) என்பவர் சொற்களில் எழுத்துத் திரிபுகள், தேய்வுகள், கெடுதல்கள் உண்டாதற்குரிய காரணத்தை விதந்தோதினர். நன்குகேளாமை, தவருகப் பொருள்கொள்ளல்,

நினைவுத்தவறு, கருவிகளின் பிழை, சோம்பல், போலிகள்சேர்தல், புத்தெழுத்துச்சார்பு, தெளிவு படுத்தல் முதலியன அவற்றிற்குக் காரணம் என்று எடுத்துக்காட்டினர்.

அகஸ்டு ஷிலேக்கர் (August Schleicher) என்பவர் (1820-1865) சிலோவோனிய பால்டிக் மொழிகளை ஆய்ந்தனர். ஸ்டெயின்தல் (Steinthal) என்பவர் மொழிகளை வகைப்படுத்தினர்.

பிரிடெரிக் முல்லர் (Frederik Muller) என்பவர், உலகத்திலுள்ள பன்னிரண்டு இனத்தாருள் 100 வகை மொழிகளைத் தொகுத்தமைத்தனர். ஜியார்ஜ்குர்ட்டிமஸ் கிரீக் மொழியை நன்கு ஆய்ந்தனர். அவர் மாணவர் பிரக்மன் என்பார் மொழியாராய்ச்சியை விரித்தனர். ஆங்கிலநாட்டில், மாக்ஸ் முல்லர், பாட், விட்னி முதலியோர் மொழிநூற் புலவராய்த் திகழ்ந்தனர். செய்ஸ் (Sayce) என்பவர் அசீரிய மொழிகளை நன்காய்ந்து மொழிகளின் அறிவுநூல் இயற்றினர். பின்னர் மொழிநூல் நன்கு விரிவதாயிற்று.

மொழியியல்பை ஆயுங்கால், கற்பனைத் தொடர்புகளை விலக்கி, காணப்படும் உதாரணங்களாற் புலனாகும் விதிகளைத் தொகுத்தல் வேண்டும். மூல வேர்ச்சொற்கள் ஓரசைச் சொற்களாய் இருத்தல் வேண்டும் என்ற கட்டாயமில்லை. கிரீக்கிலும் லத்

தினிலும் எகரமும் ஒகரமும் உள்ள சொற்கள், வடமொழியில் அவற்றிற்குப் பதிலாக அகலத்தோடு காணப்படுவன. ஆதலால், ஆரியத் தாய்மொழியில், தமிழில் உள்ளபடியே எகரமும் ஒகரமும் இருந்தன என்பது புலனாகிறது.

## எழுத்தொலி இயல்பு.

இனி, எழுத்தொலி இயல்பினைப் பற்றி ஆராய்வாம். உடம்பிலுள்ள கருவிகளை மூளையோடு இணைப்பது நரம்புத் தொகுதிகள். மூளையிலிருந்து உடம்பெங்கும் பரவிக் கருவிகளோடு தொடர்புற்றிருக்கும் நரம்புகளின் இயக்கமில்லாமல் எச்செயலும் நடைபெறுவதில்லை. மூளைக்கும் மனதுக்குமுள்ள தொடர்பு காணப்படுமாறில்லை. காதிற் கேட்கும் ஒலி மூளை வழியாக நினைவில் அழுந்தி, நினைவாற்றல் மூளையில் தொடர்புற்றுப் பேச்சு நரம்புகளை இயக்க, பேச்சு நரம்புகள் பேச்சுக் கருவிகளின் தசைப்பற்றுக்களை இயக்கி எழுத்தொலிகளை உதிப்பிக்கின்றன. பேச்சுக் கருவிகள், நரம்பிணைப்பிலாவது, தத்தந்தன்மையிலாவது குறைவுப்பட்டால், ஒலித்திரிபுகள் ஏற்படும்.

மனிதன் தலையிலுள்ள மூளைக் கோளத்தின் இடப்பக்கத்து பாதியினடியில், மூன்று காதுகள் இருக்கின்றன. அவற்றுள் பின்னுள்ள ஒன்றினடி-

யில், முக்கோண நீட்சி ஒன்று இருக்கிறது. அதற்கு ரீல்தீவு என்று பெயர். அத்தீவுக்கு எதிரான காது களின் மேற்பாகத்தில் பேசும் ஆற்றலுக்குரிய நுண் கருவி இருப்பதாகப் பிராகா (Broca) என்னும் ஐரோப்பியப் புலவர் கூறுகிறார். அக்கருவி செவ் வின் அமையாவிடில் பேசுமாற்றல் சிறக்காதென் பது அவர் கருத்து.

ஒலி வெளிப்படையாகப் புலனாவதற்குக் காற் றின் உதவி இன்றியமையாததாகும். நெஞ்சிலுள்ள இரு பக்கத்து மூச்சுப் பையினின்றும் இரு காற்றுக் குழாய்வழிச் செல்லுங் காற்றானது கழுத்திலுள்ள குரல்வளையை அடைகின்றது. குரல்வளையானது சிறு தசைத் திரள்களாலாகிய, நொய்வுள்ள ஒரு நீண்ட குழாய். அது கீழ்ப்பக்கத்தில் இரு காற்றுக் குழாயுடனும் மேற்பக்கத்தில் வாயுடனும் இணைக் கப்பட்டுள்ளது. குரல்வளையின் நடுவே குறுக்காக இரு மடிப்புகள் போன்ற குரல் நாண்கள் (Vocal chords) இரண்டு உள்ளன. அவைகள் முன்பின் னாக இருப்பன. வலமிடமாக அல்ல. ஒரு பாறை யின் மேற்புறத்தை நடுவே இரு கூறாகப் பிளந்தபோது உளவாகும் இரு பகுதிகள் போல அவை உள்ளன. வேண்டும்போது விரிந்து அவை ஒன்றையொன்று பொருந்துவனவாயும் இயல்பாக இருக்கும்போது ஒன்றையொன்று தொடாமல், இடைவெளி உடையனவாயும் இருப்பன. இந்நாண்

களைச் சுற்றித் தொய்வான தசைப்பற்றுகள் இருந்துள்ளன. அவற்றுள் முன்பக்கத்தில் உள்ளதே கழுத்திலுள்ள 'சங்கு' எனப்பட்டுக் கழுத்தின் முன் பக்கத்தில் திரட்சியாகக் காணப்படுவது. சங்கின் இருமருங்கில் இரு தசைப்பற்றுகள் வளைந்து சென்று குரலவளையின் பின்பக்கத்தோடிணைந்திருப்பன. குரல்வளையின் மேற்பகுதி ஒரு சிறு கூடுபோல்வது. அதன் இருமருங்கிலுமுள்ள புடைகளில் உள்ள இரண்டு பைகளிலும் எண்ணெய் போன்ற நீர் உண்டு. அது தொண்டையை நனைப்பது.

ஒலி நாண்கள் விரிந்து மூடுங்காலை மருங்கிலுள்ள வெளி வழியாகக் காற்று மேற்செல்லும். அவற்றின் நீளம், சுமார் முக்கால் அங்குலம் இருக்கும். அவை இழுத்துப் பிடிக்கப்பட்டபோது ஓரங்குலமாதலுங் கூடும். பெண்களுக்குங் குழந்தைகளுக்கும் அவை குறைந்த நீளம் உடையனவாயிருக்கும். தொண்டையில், குரல் நாண்களுக்கு மேற்புறம் இரண்டு பொய் நாண்கள் இலைமூடியால் மூடப்பட்டுள்ளன. அதற்கு மேற்புறம் வாயின் அடியிலும் அண்ணத்திலும் 'டான்சில்' என்ற தசைத்திரள்கள் உள்ளன.

குரல்நாண்களின் இடைவெளிக்கு மேற்பாகம் கிளாட்டிஸ் (Glottis) எனப்படும். அதற்குமேல்

உள்ள இலைமூடி, குரல் வளைக்குப் பின்னுள்ள உண வுக் குழாய்க்கு வாயிலிருந்து உணவு செல்லுகின்ற காலை, அதனைக் காற்றுக் குழாயினுள் விழாமல் தடுப்பதற்குப் பயன்படுவது. வாயின் அடிப்பாகத் தில் நாவின் மூலத்தைத் தாங்கும் எலும்பு ஒன்று உள்ளது. அடிவாயின மேற்பாகம் அண்ணம் எனப் படும். அதன் முற்பகுதி இறுகியதாயும் பிற்பகுதி இளகியதாயும் உள்ளது. பிற்பகுதியின் பின் நுனியே உள்நாக்கு எனப்படும். அதன்கண் உள்ள தசைப்பற்றின் இயக்கத்தால் அது மேலெழுந்து நாசிக்குச் செல்லும் வழியை வேண்டும்போது அடைக்கும். அது இயல்பாக தொங்கிக் கொண் டிருக்கும. காற்றுக்—குழாய், குரல்வளை, வாய், நா, உதடு முதலியன விரிதற்கும் ஒடுங்குதற்கும் உரிய தசைப்பற்றுகளுடையன. ஆதலால் ஒலிக்கக் கருதும் ஒலிகளுக்கேற்றவாறு, இசைப் பெட்டியை ஒடுக்கவும் விரிக்கவும் உயர்த்தவும் தாழ்த்தவும் இட முண்டு என்று அறிக. கருவிகளின் அமைப்புக் கேற்றவாறு ஒலித்திட்பம் அமைவதாகும். குளிரால் தொண்டை மூடியகாலை சில ஒலிகளை ஒலித்தல் இயலாது. பல் இல்லையானால் ஒலித்திட்பம் குறை யும். சிலருக்குச் சில ஒலிகள் நன்கு ஒலிக்க இயலா மைகளுக் காரணம், கருவிகளின் குறைபாடுகளே என்றறிக. மூச்சுப் பையினின்று காற்றானது புறப் பட்டு வெளிவரும்போது குரல்வளை, முதலிய

ஒடுங்கிய வழியாகக் காற்று செல்லுங்கால், இயற்கையாக உளதாகும் நுட்ப ஓசையை மந்திர நூலார் அசபை என்பர். கோழை முதலியவற்றால் மூச்சுக் காற்றுக்கு இடையூறு நிகழுங்காலை இருமல் உண்டாகும். நரம்பின் நோயால், குரல்வளையிலுள்ள தசைப்பற்றுகள், அசையாது போனாலும் பேச்சு செவ்வையாக எழுவதில்லை. தசைப்பற்றுகளின் வாதத்தால் ஊமைகள் பேசாது இருக்கின்றனரென்ப. குரற்பெட்டி குரல்வளையிற் றாழ்ந்து இருந்தால், கம்மலான ஓசை எழும். மூச்சு இதழ்களின் ஓரங்களில், தட்டுவதால், ஊதொலி (Whistling) உண்டாகும். ஓசைக் கருவிகளின் தன்மைக்கேற்றவாறு குரல் வேறுபாடு உளவாகும். கிளாட்டிஸ் நன்கு இயங்காது விட்டுவிட்டு இயங்கினால், கொன்னலுண்டாகும். தொண்டையின் சூடு குளிர்ச்சி வேற்றுமையாலும், குரல் மாற்றம் ஏற்படும். மோவாய்க்கட்டை நீண்டிருப்பதாலும் உச்சரிப்பு மாறுபடும்.

குரல்நாண் இயங்காவிடினும், இல்லாதிருந்தாலும் உயிரெழுத்தொலிகளும், குரல் ஒலிகளும் உண்டாகமாட்டா. பாம்புக்குக் குரல்நாண் இல்லாமையால் ஸகர மெய்யொலியும் மூச்சொலியுமே உள்ளனவாகும்.

ஆங்கிலத்தில் வாய்ஸ் (Voice) என்பது குரல் நாணின் அதிர்ச்சி கலந்த ஒலியாகும். அதனைக்

குரல் எனலாம். வெற்றொலியை அவர்கள் நாய்ஸ் (Noise) என்பர். சிலர் கண்ணிற்குச் சில நிறங்கள் புலனாகாதவாறு போல, சில காதுகளுக்குச் சில ஒலிகள் தெளிவாகப் புலனாவதில்லை.

ஓசை புலனாகாதகாலை மூச்சானது நீரோட்டம் போலச் செல்லும். ஒலிக் கருவிகளை அசைத்த போது மூச்சு ஓட்டம் பல அடுக்குடைய அளவுக ளாகச் செல்லும். உயிரெழுத்துக்களையும் குரல் மெய்களையும் ஒலிக்குங்கால், குரல்நாண்கள் ஒன் றோடொன்று நெருங்கி நிற்க, அவற்றினூடு விரைந்து செல்லுங் காற்றானது அவற்றை மேலே உயர்த்திப் பிரிவிக்கும். பிரிந்தவுடனே அவை மீண் டும் விழும். ஊடுசெல் வளியால் அவை எழுதலும் விழுதலும் செய்யும்போது ஏற்படும் அசைவே குர லுக்குக் காரணமாகும். அந்த அசைவு பலமுறை ஒரு விநாடிக்குள் நிகழும். குரல்நாண்கள் குறுகின வாயிருப்பின், அசைவுகள் ஒரு விநாடிக்குள் அதி கப்படும். அதனால் இசை எடுப்புடையதாகும். அள வுக்கு மிஞ்சி ஒரு விநாடிக்குள் அசைவுகள் ஏற்படு மாயினும், அளவுக்கு மிகக்குறைந்து அவை ஏற்ப டுமாயினும், அவற்றால் உண்டாகும் ஓசை செவிப் புலனாகாது. ஒருவகையான இசையை ஒலிக்குங் கால் ஏற்படும் அசைவுகளைக் கணக்கிட்டு, பிறி தொரு இசை இருமடங்கு அசைவுகளை ஒரே நேரத்தில் உண்டாக்கினால் முன்னிசை முதலிசை

எனவும் பின்னிசை துணையிசை எனவும் கூறப்படும். இரண்டுங் கலந்து பலவகை இராகங்கள் உண்டா வன.

தனியிசை ஒலிக்கும் நேரத்திற்கும் துணை யிசை இசைக்கும் நேரத்திற்கும் இடையீடு ஒரு கட்டை எனப்படும். ஆங்கிலத்தில் அது 'ஆக்டேவ்' (Octave) எனப்படும். கேட்கும் ஒலியின் அசை வுகள் ஒரு விநாடியில் 80 தரம் முதல் 1200 தரம் வரை நிகழும். ஆண் குரலிற் குழ்ந்ததும் பெண் குரலில் உயர்ந்ததும் ஆகியவற்றின் அசைவுகள் 42 தரமுதல் 1702 தரம்வரை ஒரு விநாடிக்குள் நிக ழற்பாலன. சாதாரணமாக மனிதனொலி 4 கட் டைக்கு—மேற் போவதில்லை. 5½ கட்டையளவு பாடுதல் அபூர்வம். குரல்நாண்களின் இறுக்கம் நெகிழ்ச்சிகளால் பல இசைகளும் இடைமொலிக ளும் நிகழ்த்துதல் கூடும். குரலானது தாழ்நிலை யினின்று உயருங்கால், குரற்பெட்டியும் மேலுயரும். அது கபாலத்தின் அடிப்பாகம் வரை எழும். காற் றோட்டத்தின் வன்மைக்குத் தக்கவாறு குரலின் இசையளவு மிகுதிப்படும். அசைவுகளின் மிகுதி, குறை என்பவற்றால் கணிக்கப்படுவது இசை. அதன் வேறுபாடுகள், உயர்வு, நடுவு, தாழ்வு எனவும் அவற்றின் கிளைகள் எனவும் பேசப்படும்.

நீரில் கல் ஒன்றை எறிந்தகாலை, வட்டமான நீரலைவு உண்டாய்ப் பரவுதல் போல, காற்றிலடிக்

கும் இசைக் கருவியால், காற்றில் அலைகளுண்டாய் விரியும். குரல்நாண்கள் மிக உயரமாக எழுந்தால் அதனால் காற்றோட்டத்தின் வளைவு அதிகப்படும். அதனால் குரல் உரத்துக் கேட்கும். காற்றலைகளின் ஆழத்தினளவு குரலின் ஓசையளவு கணிக்கப்படும். ஒலிக் கருவியின் தன்மைக் கேற்ப ஒலியின் தன்மை வேறுபடும். நாகசுரம், வீணை, குழல் இவற்றின் இசைத் தன்மைகள் வெவ்வேறுதல் காண்க.

ஒலி எழுப்பியகாலை உளதாகும் காற்றலைகள் பல வகைச் சுழல்களாக வடிவெடுக்கின்றன. அவ் வடிவுகளை அவை தாக்கும் மணல் தட்டின்மீதும், விளக்கின் ஒளி அசைவாலும், எழுதுகோல் அசை வாலும் காட்டக்கூடிய கருவிகளை மேலைநாட்டினர் கண்டிருக்கிறார்கள். அவற்றின் உதவி கொண்டு, எழுத்தொலிகளின் இயற்கை வடிவங்களை அறிந்து கொள்ளலாம். அவற்றையும் எழுத்துக்களுக்கு மக்கள் அமைத்த செயற்கை வடிவங்களையும் ஒத்துப் பாரப்பது இனிச் செய்யவேண்டிய ஆராய்ச்சியாம். வளையமிட்ட, தொய்வான குழல் ஒன்றின்மேல் தக ரத்தகடு ஒன்றைப் பொதிந்து, குழலின் அதிர்ச்சி தகரத்தில் தாக்கும்படி செய்வதுண்டு. அல்லது வளையத்தை ஒரு ஊசிக்குக் கீழ் வைத்து, ஊசியை ஒரு பலகையோடிணைத்து பலகையிலுள்ள துவாரம் வழியாகப் பேச்சொலியின் அசைவை மணல் முத

லியவற்றில் தாக்கும்படி செய்வதால், ஒலியின் இயற்கைவடிவம் அமைத்தல் கூடும் என்ப.

காற்றானது குரல்வளையூடு செல்லுங்கால், குரல்நாண்களின் தசைகள் இறுகி, நாண்கள் இரண்டும் நெருங்கி இருக்கும். அப்போது உண்டாகும் இசை முதலிசை எனவும், நாண்களின் தசைகள் ஒடுங்காமல், நாண்களின் இடையில் ஒரு பகுதி திறந்திருந்தால், உண்டாகும் இசை துணையிசை எனவும் கூறப்படுதலுமுண்டு. முன்னதை மெய்யிசை எனவும், பின்னதைப் பொய்யிசை எனவும் கூறுவாரு முளர்.

மூச்சுக்காற்றை, நுரையீரலில் (Lungs) இருந்து வன்மையாக வெளிப்படுத்தின், அது ஒலியழுத்தத்தைஉண்டுபண்ணும். சொல்லின் ஓரசையை அழுத்தமாக உச்சரிக்குங்கால் அது உளதாவது. அவ்வழுத்தம், இசையழுத்தம் (Pitch accent) என்றும், விசையழுத்தம் (Stress accent) என்றும் இருவகைப்படும். சொல்லின் ஏதாவது ஒரு பகுதியை உயர்த்தி உச்சரித்தால், முன்னதும், உரத்து உச்சரித்தால், பின்னதும் ஏற்படும்.

ஒருவகையான இசையினை எழுப்புதற்கு உரிய கருவியினை, அதன் துணையிசைக் கருவியின் ஓசை தாக்குமாயின், துணையிசைக்கு ஏற்ற முறையில், முன்னைய கருவி ஒத்து இசைக்கும். அதனால் இரண்டும் கலந்து வலுவடையும்.

குரல்நாணின் இடைவெளி சுருங்கி, நாண்கள் அசையாதிருந்தால், காதுக்குள் பேசும் பேச்சு உண்டாகும். ஒலி உண்டாகும்போது ஏற்படும் தொண்டையின் தன்மையும் நாவின் தன்மையும் காட்டக் கூடிய வரிவடிவம் பேல் என்பவரால் வகுக்கபபட்டுள்ளது. குரல்நாண்களின் இடைவெளி திறந்திருக்குங்காலை மூச்சுப் போய்க் கொண்டிருக்கும். அது ஒலி எழாதபோது உள்ள நிலை. அது மூச்சு (Breath) நிலை எனப்படும். அந்நிலைக்கு அடையாளம் 0 வட்ட வடிவம் போன்றதாகும். நாண்கள் நெருங்கியபோது ஒலி எழும். அந்நிலைக்கு அடையாளம் I போல்வது. அது எழுத்தொலிநிலை. நாண்கள் ஒன்றையொன்று தொடாமல் நெருங்கி நிற்கும் நிலை (Whisper) க்கு அடையாளம் 0 போன்றது அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும் பல்வேறு ஒலிகளுக்கு அவ்வடையாளங்களின் திரிபுகளாகப் பலகுறிகள் வகுக்கப்பட்டுள்ளன.

பேச்சொலிகள் உயிரொலி எனவும் ஒற்றொலி எனவும் இருவகைப்படும். வாயிலுள்ள கருவிகள் ஒன்றை யொன்று தொடாமல் பலவகையாக இயங்குவதால் உளவாகும் ஒலிகள் உயிரொலி எனப்படும். அவை பலவாயினும் மொழிகளுள் சிலவே வழங்குவன. கருவிகள் ஒன்றையொன்று ஒற்றுவதால் உளதாம் ஒலி, ஒற்றொலி அல்லது மெய்யெழுத்தொலி எனப்படும்.

நாவின் இயக்கமில்லாமல் எழுத்தொலிகள் உருவெடுப்பதில்லை. நாவின் முதல், நடு, நுனி என்பவற்றின் உயர்வு, அவற்றினொடுக்கம், அவற்றின் இருதிற அகலம், இருதிற வளைவு என்பவற்றைப் பெருக்கி உயிரொலிகள் 36 எழற்பாலன என ஸ்வீட் (Sweet) என்னும் ஆங்கிலப் புலவர் கணக்கிட்டனர். ஆசிரியர் தொல்காப்பியனார் உயிரொலிகளுள், முதன்மையான 12 ஒலிகளையே உயிரெழுத்து எனவும், ஏனையவற்றை அவற்றோடு சார்பொலிகள் கலந்து உண்டாவன எனவும் கொண்டனர்.

உயிரொலிகள் எல்லாம், மூச்சு வெளிச்செல் லும் காலத்தே உளவாம் எனினும், ஆய்தச்சார்பு டைய ஓ, ஊ என்ற ஒலிகள் மூச்சு உட்செல்லும் போதும் ஒலிப்பனவாம்.

உயிரொலிகளை ஒலிக்கும் நாவின் பகுதியை வைத்து, பின், இடை, முன், எனவும், நாவின் எழுச்சியின் வைத்து, உயர்வு, நடு, தாழ்வு எனவும், இதழின் அமைப்பின் வைத்து ஒடுக்கம், விரிவு எனவும், நாவின் தொழிலை வைத்து வளைவு, வளை வின்மை எனவும், உள்நோக்கு, புறநோக்கு எனவும், உச்சரிப்பை வைத்து எடுத்தல், படுத்தல் எனவும், மூச்சொலி கலப்பன, கலவாதன எனவும், எழுத் துக்கலப்பின் வைத்து ஈரொலி, (Diphthong), மூவொலி (Triphthong) எனவும் பகுத்தும், பிறவற் றானும் மொழிநூலார் ஆராய்வர்.

தமிழ்நூன் முறைப்படி, அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும், அவற்றின் உறழ்ச்சியால் இருபத்தைந்தும், சார்பெழுத்து, ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பவற்றின் குறுக்கமும் நீட்சிகளும் சேர்ந்து உயிரொலிகள் 36 ஆதல் காண்க.) அகர, இகர, உகர ஒலிகள் நாவின் முதல், இடை, முடிவுகள் உயர்வதால் உண்டாவனவாம். எகரமும் ஒகரமும நடுவொலிகளாம். குற்றியலிகரங் கலந்த அகரம் தாழ்வொலி, ஆகரம் பின்னொலி, இகரம் முன்னொலி, எகரம் நடு அல்லது கலப்பொலி, உகரம் ஒடுக்க ஒலி, ஒகரம் விரிவொலி ஆகும். அது குற்றியலுகரக் கலப்புடையது. உள்நோக்கியது. அகர இகரக் கலப்பு, ஐகாரம். அகர உகரக் கலப்பு ஔகாரம். இவற்றினிடையே, யகரமும் வகரமுங் கலந்தால் மூவொலிக்கலப்பு ஏற்படும். அகரத்திற்கு முன் மூச்சுக்கலத்தல் இடம்பற்றி நிகழும். மஹாத்மா, என்பதில், மகரத்திற்குப் பின், ஆய்தம் முன்கலந்த அகரம் உண்டாதல் காண்க. பிறவும் இவ்வாறே கண்டுகொளக.

மெய்யொலிகள், தொண்டை, நாவின் அடிப்புறம், நடுப்புறம், நுனி, நுனியகலம், பல்லீறு, உதடு என்பவற்றில் உண்டாவனவாம். அவை அகன்ற ஒலி, ஒடுங்கிய ஒலி, மூச்சொலி கலந்தன, கலவாதன, வல்லொலி, மெல்லொலி, இடையொலி, குரல்கலந்தன (Voiced), கலவாதன (Voiceless),

மூச்சொலி கலந்தன, கலவாதன, இறுக்கமானவை, நெகிழ்ந்தவை எனப் பலவகையாகப் பகுத்து ஆயப் படும்.

ரகர மொன்றே, நன்கொலிப்பது நன் கொலியாதது, ஈற்றிலுண்டாவது, உருண்டொலிப்பது, தொண்டையிலுண்டாவது, நாவிலுண்டாவது எனப் பலவகையாகப் பகுக்கப்படுகின்றது.

தமிழிற் சிறப்பாயுள்ள றகரமும், ழகரமும் நாவினுறழ்ச்சியால் உண்டாவன. அவை பிற மொழிகளிற்காண்டல் அரிது.

எழுத்து மாற்றம் (அதாவது ஒரு சொல்லில் ஒரெழுத்துக்குப் பதிலாகப் பிறிதோரெழுத்துப் பயிலுதல்) பலகாரணங்களால் நிகழ்வன. சீனர்கள் ரகரத்தைச் செவ்விதின் உச்சரிக்கப் பழகாமையால், அதற்குப் பதிலாக லகரத்தை ஒலிப்பர். 'கிறிஸ்து' என்ற சொல்லைக் 'கிலிஸெது' எனறு கூறுவர். ஜப்பானியர் லகரத்திற்குக் ககரத்தை வழங்குவர். ஐடாலட்ரி என்பதை 'ஐடாரட்ரி' என்பர். ஒருவரைப் பார்த்து மற்றொருவர் உச்சரித்தல், (போலிச் செயல், தழுவிக்கூறுதல், imitation) சொல்லின் ஒரு பகுதியை அழுத்திக்கூறி, மற்றப்பகுதியை நன்கு உச்சரியாமை, எழுத்துக்களை முற்றிலும் உச்சரிக்கச் சோம்புதல், கவனியாமை பற்றி, ஒரெழுத்துப் பக்கத்தெழுத்தாக மாறுதல், (உதாரணம்:

மெல்விஸ் > மெல்லிஸ் ஆதல்) எழுத்துநிலை மாறுதல் (குதிரை > குருதை) முதலியன எழுத்துமாற்றத்தின் சிலவகைப் பகுதிகளாம்.

மொழிப் போக்குப்பற்றி வடசொல்லில் வட எழுத்து நீங்கித் தமிழ்எழுத்துப் பயிலுதல் (பங்கஜம்—பங்கயம், இராஜன்—இராசன்), இருமெய்க்கு நடுவே உயிரெழுத்துப் புகுதல் (ரத்னம்-அரதனம்) (கல்யாணம்—கலியாணம்) என்னும் பலவகை மாற்றங்கள் தமிழிலும் பிறமொழிகளிலும் காணப்படும். ஐரோப்பாவில், கிரிம், வேர்னர் முதலியோர் இம் மாற்றங்கட்குத் தங்கள் மொழிகட்குரிய விதி வகுத்துள்ளனர். இவை விரிப்பிற் பெருகும். எழுத்தொலியியல் ஒருவாறு முற்றும்.

## சொல்லமைப்பு.

இனி, சொல்லமைப்பு ஆயற்பாலது. ஒரு பொருட்குப் பெயர்க்காரணம் தெரிந்தும் தெரியாமலும் உள்ளது. காரணம் அறியப்படாதவற்றை இடுகுறிப்பெயர் எனவும், காரணம் அறியப்பட்டவற்றைக் காரணப்பெயர் எனவும் கூறுவர். ஒரு சொல்லின் அடிப்படையான பகுதியை வேர்ச்சொல் என்பது வழக்கு. தாது என்று வடமொழியாளர் அதனைக் கூறுவர். வேர்ச்சொல் வினைச்சொல்லாக

இருத்தற்பால தென்ற கொள்கை பொருந்துவ தில்லை. அது பெயராகவும் இருத்தல் கூடும். வேர்ச்சொல் ஓரசைச் சொல்லாகவும் இருக்கவேண் டுமென்ற கட்டாயம் இல்லை. செமிடிக்கில் அது மூன்று மெய்களால் ஏற்பட்டுள்ளது. வேர்ச் சொல்லே உருபுகள் கலவாமல் வழங்குவதுண்டு. வா, போ, கல், சொல் என்பன அத்தன்மையன. வேர்ச்சொல் இரட்டித்தலுமுண்டு.

புதுமை பற்றியும், போலி நாகரிக உணர்ச்சி யாலும் நயவழக்கம் என்ற முறையிலும் பிறமொ ழிச்சொற்களைக் கடன் வாங்குதல் பழக்கமாயின், அவைகள் மிகுதிப்படுதல் இயல்பே. ஆங்கிலத்தில் பிறமொழிக் கலப்பு மிகுதி. ஒயின்—லத்தீன் மொழி, டி (தேயிலை)—சீனமொழி, காப்பி-அரபி மொழி, சாக்கோலட்—மெக்சிகன் மொழி, கோச்சு (Coach)—மாகியார் மொழி, ஜாஸ்மின்—பாரசீகம் மொழி, பியானோ—இத்தாலியின் மொழி, பிறவும் அன்ன.

பொருள்களின் பெயரும் அவற்றின் செயல் குறிக்கும் வினையும் ஒட்டாமல் நின்று பொருளு ணர்த்தும்நிலை—தனிநிலை (isolation) எனப்படும், சீனமொழி அத்தன்மையது. சீனத்தில், சொற்க ளின் இலக்கணத் தொடர்பு சொல்லின் இடத்தை வைத்தே ஊகித்து அறியற்பாலது. உருபுகள்,

விகுதிகள் முதலியன இல்லை. முற்காலத்தில் தனிச் சொல்லாய் நின்ற சில சொற்கள் உருபுகளாகப் பிற் காலத்தில் வழங்குவன ஆயின. சொல் நிற்குமுறை யில் முதலில எழுவாய், இரண்டாவது வினைச் சொல், மூன்றாவது செயப்படுபொருள், பின் அத ஞேடு முடியுஞ் சொற்கள் வரும். உதாரணம்: ஞோ தா நி என்ற வாக்கியம் நான் உன்னை அடிக்கி றேன் என்று பொருள்படும. நி தா ஞோ = நீ என்னை அடிக்கிறாய். பெரிய அரசு என்பதற்கு 'தா கோக்' எனவும், அரசு பெரிது = கோக் தா எனவும் வழங்கும். சீனத்தில் ஞோ, மலையாளத் தில் ஞான், தமிழில் 'நான்' என்பன ஒத்திருத்தல் காண்க. நகரத்திற்கு ஞகரம் போலியாதலும், ஆ, ஓ வாதலும், னகரவீறு கெடுதலும் இயற்கை. நீ என்ற தமிழ்ச் சொல்லும், நி என்ற சீனமும் ஒரு பொருளுடைமை காண்க. தாக்குதல் என்பதற் குத் தா பகுதியாகும். சோக் என்ற சீனமும் கோ என்ற தமிழும் ஒருபொருளன.

சீனத்தில், மீன் = மனிதர், ஜனங்கள். லிக்= ஆற்றல். ட்சி = இடம். ட்சி என்பது பிற்காலத் தில் ஆறும்வேற்றுமைப் பொருளில் வழங்குவதா யிற்று. மீன் ட்சி லிக் = ஜனங்களின் ஆற்றல். ஒய் என்ற சொல், உபயோகம் என்ற பொருளுடை யது. அது மூன்றும் வேற்றுமை உருபாய் வரும் போது 'ட்சி' என்பது போல வெறுஞ் சொல் எனப்

படும். அது முன்னுருபாக வரும். ஒய்கங்=ஓடு+கழி=கழியோடு (with a stick). இதைக் கருதுமிடத்து, சீனத்திற்போலவே ஏனைமொழிகளிலும், உருபு, விகுதி முதலியவைகள் தனிச்சொற்களாய் நின்று பின் மருவி, ஒட்டுச் சொற்களாயிருத்தல் கூடுமென்று தோன்றுகிறது.

சீனமொழியில் ஒரு சொல்லிற்குப் பலபொருள் வந்தமைக்குக் காரணம், பலசொற்கள் மருவி ஒரு சொல்லாயினமையே. 'தாவ்' என்ற சொல் வழி, கொடி, முடி, தானியம் என்ற பல பொருளுடையது, 'லு' என்ற சொல் வழி, இரட்டை, பனி முதலிய பொருளுடையது. வழி என்பதைத் தெளிவாகக் குறிப்பதற்கு 'தாவ்-லு' என்ற சொற்றொடரை வழங்குதல் காணப்படும்.

இன்னும், எடுத்தல், படுத்தல், நலிதல், உறழ்தல் முதலிய ஓசை வேறுபாட்டால், சொற்பொருள் வேறுபாட்டைக் குறிப்பதற்குச் சீனத்தில் எட்டு வகை உள்ளன. எடுத்தலில் நான்குவகையும் படுத்தலில் நான்குவகையும் உண்டு. நடுவோசை, மேலோசை, வருவோசை, செல்லோசை என்பன அவ்வகையைச் சேர்ந்தன. 'ஹாவ்' என்ற சொல்லைச் செல்லோசையிற் கூறினால், 'நல்ல, என்று பொருள்படும். மேலோசையிற் கூறினால் 'அன்பு' என்று பொருள்படும்.

சீனத்தில் உலகவழக்குப் பேச்சுப் பிரிவுகள் (colloquial dialects) பலவற்றுள் 'மண்டரின்' (Mundarin) என்பதே சிறந்ததாகும். அது 40000 சொற்களுடையது. சீனமொழிகள் பல ஜப்பான் மொழியிற் பயின்றாலும், ஜப்பான் மொழியமைப்பு சீனத்திற்கு வேறாயது. ஈரசை, மூவசைச் சொற்களும் உருபுகள் முதலியனவும் அதன்கண் உள்ளன. அதில் பின்னசைச் சொற்களே இலக்கணத் தொடர்பு குறிப்பன. சீனத்தில் முதற்சொல் முன்னும் அடைமொழி பின்னும் வரும்.

சீனமொழியானது தனது சொற்களைப் பிணைப்புறாமல் வழங்குகின்றது. அமெரிக்க இந்தியராற் பேசப்படும் பேச்சுக்களில், உருபுகளும் விகுதிகளும் இல்லாமல், சொற்கள் நெருங்கிச் சிதைந்து கிடக்கின்றன. இக்காரணத்தால் ஒரு மொழி பேசுவோருக்குள்ளே, பல சிறு கிளைமொழிகள் வழங்குகின்றன. இலக்கண வரம்பு இல்லாமையால் ஏற்பட்ட இழுக்கு அஃதென்றறிக. இம்மொழிகள் சொற்கோவைநிலையிலுள்ளன. (Polysynthetic stage) இவ்வாறின்றி, உருபுகள், விகுதிகள், காலங்குறிக்குஞ் சொற்கள், எதிர்மறை குறிப்பன, எல்லாம் தனிச் சொற்களினின்று ஏற்பட்டபின், இவைகள் பெயர் வினைச் சொற்களோடு உருவந் தெரியாவகை பிணைந்து போமாயின், அவை பயிலு மொழிகள் உட்பிணைப்பு (inflectional) மொழி எனப்படும்.

அவ்வாறு பிணைப்புறுமல், உருபு முதலியன ஒட்டுச் சொற்களாய் நிற்குமாயின், அவை ஒட்டுநிலை (ogglutinative) மொழி எனப்படும். அவற்றுள் உருபு முதலியன பின்னசைச் சொல்லாய் நிற்பன வும், முன்னசைச் சொல்லாய் நிற்பனவும் உள்ளன. ஒட்டுநிலைக்குப் பின்னே உட்பிணைப்புநிலை ஏற்படும் என்ப. இத்தகைய மொழிகள் உருபு முதலியன வற்றிற் பெரும்பான்மையான வற்றை இழந்து, இடம்பற்றி இலக்கணத் தொடர்பு அறியக்கூடிய நிலை எய்தினல், அம்மொழி பிரிநிலை (analytical) யிலுள்ளன எனப்படும். உருபு முதலியன முன் னசை அல்லது பின்னசையாய் வருவதுடன், சொற் களின் உட்பகுதிகளில் உயிரொலி மாற்றத்தால் இலக்கணத் தொடர்புகள் குறிக்கப்படுதலும், இரட் டித்தலாற் குறிக்கப்படுதலும் உண்டு. இத்தன்மை செமிட்டிக்கு மொழியிற் காணப்படும்.

ஆரியமொழிகள் உட்பிணைப்பு நிலையிலும், திராவிட மொழிகள் பின்னசை ஒட்டு நிலையிலும், தற்கால ஆங்கிலம் முதலியன பிரிவு நிலையிலும், செமிடிக்மொழி முன்னசை உள்மாற்ற நிலையிலும் உள்ளன வென்றறிக. ஊரல் ஆல்டெயிக் (ural Altaic) மொழிகள் பின்னசை ஒட்டு நிலையும், பான்து (Bantu) மொழிகள் முன்னசை ஒட்டு நிலை யும், மலாயா மொழிகள் இருவகை ஒட்டு நிலையும், பாஸ்கு மொழி இடச்சொற் கலப்பு நிலையும் சிறந்து விளங்குவது காணப்படும்.

ஆரியமொழிகளில், வேர்ச்சொல் பகுதியாகும் பொருட்டுச் சேர்க்கப்படும். விகுதிகள் (பின்னசைகள்), வேற்றுமை உருபுகள், இரட்டிப்பு, உயிரெழுத்து மாறுதல் (சிறுபான்மை) என்பன காணப்படும். இந்நாட்டு இருக்வேத வடமொழி, பிற்கால வடமொழி, பாரசீகம், அர்மீனியம், கிரீக், அல்பேனியம், இத்தாலிய மொழிகள், ஸ்பானியன், போர்த்துகியம், பிரெஞ்சு முதலிய மொழிகள், கெல்டிக் மொழிகள், டியூட்டானிக் ஜெர்மன் மொழிகள், லித்துவானிய மொழிகள் லெட்டிக் மொழி, சிலோவோனிய மொழிகள் என்பன ஆரியப் பெருங் குடும்பத்தைச் சார்ந்தவை.

சமஸ்கிருத அஸ்வ, பாரசீக அஸ்ப, லித்துவானிய அசுவ, கோதிக் ஐஹ்வ, என்று வருஞ்சொல், கிரீக்கில், ஹகரஞ் சேர்ந்து அகரம், இகரமாய், வகரம், பகரமாய், ஹிப்பன் என்று உருமாறி, லத்தீனில், இகரம, எகரமாய், பகரம், ககரமாய், எக்வஸ் (equus) என்று வருவதுடன், கெல்டிக்கில், எக், என நின்று ஆங்கிலத்தில், ஹகரத்துடன் முதல் நீண்டு, ரகரங் கலந்து ஹார்ஸ் (Horse) என்று வழங்குவதாயிற்று.

ஆட்டைக் குறிக்கும் அவிஸ் என்னும் சம்ஸ்கிருத சொல் கிரீக்கில் ஔவிஸ் எனவும் லத்தீனில் ஓவிஸ், ஐரிஷில் ஆய், லித்துவான் மொழியில் அவிஸ்

எனவும், ஆங்கிலத்தில் ஈவ் (ewe) என்றும் நிற்றல் காண்க.

வடமொழி - பசு, லத்தீன் - பெகு, கோதிக் பெய்கு என்பன ஒருசொல்லின் வடிவங்களே.

சம்ஸ்கிருத—பிதார், கிரீக்—பெட்டர், லத்தீன்—பேட்டர், கோதிக்—பாதர், ஐரிஷ்—அதிர் என்னும் சொற்கள் தகப்பனைக் குறிப்பவையாகும்.

சம்ஸ்கிருத—வேத, லத்தீன்—வித, கிரீக்—உவாய்த, ஆங்கில—உவிம், கோதிக்—உவிஸ்தை என்பன ஒரு சொல்லே.

சம்ஸ்கிருத-ஜ்ஞாதி, பழைய சிலோவேனியன்-ஸ்நாதி, லத்தீன் நாஸ்கோ, ஆங்கில (க்)நோ (know) என்பன அறிதலைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

சம்ஸ்கிருத—ருதிரஸ், கிரீக்—ருத்ரஸ், லத்தீன்—ருபர், கோதிக்-லெஸ்த்ஸ், சியேமோ-ருத்ரு, ஐரிஷ்—ருவத், ஆங்கில—ரெட் என்பன ஒரு பொருட் சொற்கள்.

சம்ஸ்கிருதத்துக்கும், ஜர்மனியின் வடபாகத்திற் காணப்படும் லித்துவானிய மொழிக்கும் உள்ள ஒற்றுமையாவன:—

| | சம்ஸ்கிருதம். | லித்துவானியன். |
|---|---|---|
| தன்மை | அஸ்மி | எஸ்மி |
| முன்னிலை | அசி | எசி |
| படர்க்கை | அஸ்தி | எஸ்தி |

என்பன அவற்றிற்கு உதாரணங்களாம்.

சம்ஸ்கிருதத்தில் எட்டு வேற்றுமைகளும், மூன்று எண்ணும், முப்பால்களும் காணப்படும். லத்தீனில், ஆறு வேற்றுமைகளும், இரண்டு எண்களும் காணப்படுவன.

மேற்கூறிய ஆரிய மொழிகளை ஒத்துப் பார்த்தால் அவற்றின் இலக்கண ஒற்றுமை நன்கு புலனாகும் அது இங்கே விரிப்பிற் பெருகும்.

திராவிட மொழிகளில் வேற்றுமை ஏழின் உருபுகளும் பால் விகுதிகளும், எண் விகுதிகளும், பின்னசைபாகச் சேர்க்கப்படுதல் தமிழறிந்தார்க்குத் தெளிவானதே. ஆங்கிலத்தின் பிரிவுநிலை ஆங்கிலம் அறிந்தார்க்குத் தெளிவு. ஆங்கிலத்தில் ஆறும்வேற்றுமை உருபும், பன்மை உருபும், பன்மைகுறிக்கச் (மேன்—மென்) சொல்லின் உயிர் மாறுதலும், இறந்த காலம் குறிக்க (do) செய் என்னும் வினையின் பகுதி களும், (be) இரு என்னும் வினையின் பகுதிகளும், முன் சேர்க்கப் படுதலும், எதிர்மறை உணர்த்துஞ் சொல்லும், கேள்வி குறிக்குஞ் சொல்லும் ,முன் சேர்க்கப் படுதலும், ஆங்கிலத்தின் ஆதி உட்பிணைப்பு நிலையை இக்காலத்தே நினைவு படுத்துவனவாகும்.

ரோமானிய மொழிகளில், முதல் எண்ணைக் குறிக்கும் சொல்லும், சுட்டுச் சொல்லும் பின்னசையாகச் சேர்க்கப்பட்டன.

ஊரல் ஆல்டெயிக் மொழிகள் சித்தியப் பெருங் குடும்பத்தைச் சேர்ந்தன. திணை, பால் குறிக்கும் உருபுகள் தமிழிற் போலப் பெரும்பான்மையும் பின்னசையாகச் சேர்க்கப்படுதல் அம் மொழிகளிற் காணப்படும். இவற்றுள் அர் என்னும் பன்மை விகுதி, சொல்லிலுள்ள உயிர் எகரமாயின், எர், என மாறுதல் எவ்லெர் (வீடுகள்), அட்லர் (குதிரைகள்) என்னும் சொற்களை ஒத்துப் பார்த்தால் விளங்கும். ஆதியில் இக்குடும்பத்தைச் சார்ந்த பின்னிஷ் மொழி, ஆரியச் சொல்லமைப்பை பிற்காலத்தே பெறுவதாயிற்று.

வட ஆப்பிரிக்காவில் வழங்கும் ஹாமிக்டிக் மொழிகளுக்கும், அரபியா, துருக்கி முதலிய நாடுகளில் வழங்கும் செமிட்டிக் மொழிகளுக்கும் சுட்டுச் சொற்களிலினும் பெயர்ப் பன்மை விகுதிகளிலும் பெண் பாலுக்குச் சிறப்பு விகுதி சேர்ப்பதிலுமே ஒற்றுமை காணப்படும்.

க் ட் ல் என்ற மும்மெய் வேர்ச்சொல் பல வகை உயிர்களோடு சேர்ந்து வெவ்வேறு இலக்கணத் தொடர்புகளை உணர்த்துவது செமிடிக்கின் சிறப்பியல்பு.

க்ட்ல் = கொல்
கடல் = கொன்ருன்
குடல் = கொல்லப் பட்டான்
க்டுலு = கொல்லுகிருன்
காட்ல் = கொல்லுதல்
கிட்ல் = பகைஞன்
கிடால் = அடி
குல் = பேசு
கால் = பேசினுன்

காலம்—முடியாக் காலம், முடிந்த காலம் என்று இரு வகைப்படும். பெண்பாலை காட்டத்தக்க மெய் சேர்க்கப்படும்.

க்வுதாலத் = கொன்ருள்
தாகதுலு = கொல்லுகிருள்

இவற்றில் எண், பால், இடம், வேற்றுமை என்பன விகுதிகளாற் காட்டப்படும்.

| | ஒருமை | இருமை | பன்மை |
|---|---|---|---|
| அராபியம்— | | | |
| முதல் வேற்றுமை- | அப்து. | அப்தானி. | அப்தூன். |
| இரண்டாம் வேற்றுமை— | அப்தா. | அப்தைனி. | அப்தின். |
| ஆரும்வேற்றுமை- | அப்தீ. | அப்தைனின். | அப்தீன். |

இடம்— கித்தாபி = என் புத்தகம்.
கித்தாபுகா = உன் புத்தகம். (ஆண்பால்)
கித்தாபுகி = உன் புத்தகம். (பெண்பால்)

ஹீப்ரு— எல் = கடவுள்
எலி = என் கடவுள்

ஜாவா— இகி = இது
இக = அது

ஹீப்ரு மொழி, ஆங்கில மொழியைப் போல் உருபுகளை விடுத்துப் பிரிவுநிலை எய்தும் வழியி லுள்ளது.

அசீரிய மொழி—

மலக் = அரசன்
மல்கத் = அரசி

அரபியம்—இப்ன் = மகன் (முன்னசை)
பின்த் = மகள் (பின்னசை)
ஹாமிட்டிக்—எலு = யானை (ஆண்பால்)
பெர்பெர்—எலுத் = பெண் யானை
இத்தியோப்பியன்—தக் = ஆண்
தகத் = பெண்பால்

கீழ் ஆப்பிரிக்காவிலுள்ள சூலு மொழிகள் பான்து பெருங் குடும்பத்தைச் சேர்ந்தன. அவற்றில் 'ன்து' என்பது பல சொல்லின் இறுதியிற் காணப்படும்.

வேற்றுமை முதலியன முன்னசையாற் குறிக்கப்படும். எண், இடையசையாற் குறிக்கப்படும்.

ங் + உழு + ன்து = ஒடு + மனிதன் = மனிதனோடு.
ங் + அப் + ன்து = ஒடு + மனிதர் = மனிதர்களோடு.

மெலெனெசியன் என்னும் மலாய்நாட்டு மொழிகளிலும், முன்னசை, பின்னசை, இடையசை ஒட்டுச் சொற்களால் இலக்கணத் தொடர்புகள் குறிக்கப்படும். பாலினீசியன் மொழிகளில் இரட்டைக்கிளவி பொருள் விகற்பங்களைக் குறிக்கும்.

ஹாலி = தேடு
ஹாலி ஹாலி = முற்றிலுந்தேடு

மன்டிங்—டிங் = பிள்ளை
டிங் டிங் = மிகச்சிறிய பிள்ளை

அக்கேடியன்—கல் = பொய்
கல் கல் = மிகப்பொய்

மலாய்—ராஜ = அரசன்
ராஜ்ராஜ = அரசர்கள்
க்வி = வீடு
க்விக்வி = வீடுகள்

ஆறும்வேற்றுமை பின் சேர்த்தல்,
லிங்காமு = உன்கை
லிங்கான = அவன்கை

இடையசை
பர்மன்—கியா = விழு
பிரி = நிறை
க்ண்யா = எறி, விழுத்து
பிண்ரி = நிரப்பு

தகலா மொழி—சுலக் = எழுக்து
சுமுலக் = எழுத

பார்மோசன் மொழி—

சசி = உப்பு
சுமசி = உப்பிட
சச = கழுவு
சிளசா = கழுவப்பட

} உயிர்மாற்றம்.

ஆஸ்திரேலிய மொழி, பின்னசை உருபுகளை உடையது

புனல் = மகன்

முதல் வேற்றுமை, புனல்லோ
நான்காம் வேற்றுமை, புனல்கோ

சுட்டுச் சொல், முதல் எண் சொல் என்பன துணைமுன்சொல் (article) என்னுந் தன்மையை ஆங்கிலத்தில் அடைந்துள்ளன. பல மொழிகளில் இது கிடையாது. உருபுகள், விகுதிகள் முதலியன இல்லாமல், சொற்கள், பிணைந்து தமது முதல், இடை, கடையில் எழுத்துக்களை இழந்து ஒன்று சேர்ந்து வழங்குநிலை — சொற்கோவை நிலை எனப் படும். அது கிரீன்லந்து முதலிய இடங்களிலுள்ள மொழிகளிற் காணப்படும்.

ஔசார் = மீன் பிடித்தல்
பியார்டர் = வேலையிலமர
பின்னெசுவர்பாக் = அவன் விரைகிறான்

இவை மூன்றும் ஒன்று சேரும்போது 'ஓளலி சாரியார்ம்மர் சுவர்ப்பாக்' என நிற்கும்.

ஸ்பெயினுக்கு வடக்கே வழங்கும் பாஸ்கு மொழியில், சுட்டுச் சொற் கலவாமல் வினைச்சொற்கள் பயில்வதில்லை. உதாரணமாக:—

சி + யிம் + தந்த = நாம் அதை நேசிக்கிறோம்.

சி + ப + தந்த = நாம் அவற்றை நேசிக்கிறோம்.

பாஸ்கு மொழியில், எழுவாய், செயப்படுபொருள், நான்காம் வேற்றுமைச் சொல், வினை என்ற முறையிற் சொற்கிடக்கை பொதுவாய் அமைந்துள்ளது. பின்னைச் சொற்கள் உருபாக வாதல், விகுதிகளாக வருதலும் உண்டு. 'அது கொண்டு போகிறேன் அவனுக்கு நான்' (='டாகார்க்கியட்') என்ற சொல்லமைப்புகளும் உண்டு.

இதுகாறுங் கூறியவற்றால், சொற்களின் இலக்கணக்குறிப்பு உணர்த்து முறையும், சொற்களை வாக்கியங்களில் அமைக்கு முறையும், பல மொழிகளிலும், ஒத்தும் வேற்றுமைப்பட்டும் வருதலும் அவை காரணமாகப் பல குடும்பங்களாக மொழிகள் வகுக்கப்பட்டு இருப்பதும், ஒரு மொழியிலேயே அவைகள் பல காலங்களில் பலவாறாக வேறுபடுதலும், அறியக்கிடப்பன.

சொற்பொருள்களும், காலப்போக்கில் பலவாறாக மாறுபடுதல் ஆராய்ச்சியாற் புலனும். பல

சொற்கள் சிதைந்து ஒரு சொல்லாதல், ஒரு சொல் லிற்குப் பல பொருளமைதல், ஒரு சொல்லிற்கு உச்சரிப்பு மாற்றம், அதனாற் பொருள் மாற்றம், பொதுப் பொருள், சிறப்புப் பொருளாதல், நற் பொருள், இழிபொருளாதல், இழிபொருள் நற் பொருளாதல் முதலிய வேறுபாடுகள் ஏற்பட்டிருத் தல் காணப்படும். இதற்கு உதாரணங்கள் திருவா ளர். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் எழுதிய தமிழ் மொழி வரலாற்றில் காணப்படும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்றபடி பழஞ் சொற்கள் கழிதலும் புதுச் சொற்கள் புகுத லும் இயற்கையே.

சொற்களின் மூலத்தைை ஆராய்ந்து அவற்றின் பொருளைத் தெரிவதால், அச்சொற்களைப் பயின்ற மக்களின் எண்ணங்கள், வரலாறுகள் முதலியன அறிதல் கூடும.

மொழி நூலை நன்கு ஆய்வதற்கு, மக்கள் மன நூல், உடல் நூல், இன நூல முதலிய பல கலைகள் துணையாக கற்றற் குரியன. புராணக் கதைகள், கட் டுக்கதைகள், சமயக் கோட்பாடுகள் முதலியனவும் பயன் படுவனவே, பார்த்துப் படித்தலினாலும், நினை வாற்றலாலும குழந்தைகள் மொழிகளைக் கற்கின் றன. பார்த்து படிப்பதிற் குறைபாடு காரணமாக வும, நினைவின் குறைவாலும், கிளை மொழிகள்

தோன்றுவன. புது மொழியைக் கற்பவர் தமது மொழிப் போக்கின்படி அம் மொழியைப் பேசுவர். சீன நாட்டில் ஒரு வகையார் ஆங்கிலத்தைத் தமது மொழிப் போக்கில் அமைத்தனர். அது, 'புரு ஆங்கிலம்' (Pigeon English) எனப்படும்.

மொழியை நிலைபடுத்துபவை கல்வியே. இலக்கண வரம்பு கடவாமை கல்வியால் ஏற்படும். தக்க சில கல்விமான்களின் முயற்சியால், சொற்களைப் பல மக்கள் திருத்தமாக உச்சரிப்பர். கருத்தைப் பிறர்க்கு விளக்கும் அவசியத்தாலும், சொற்கள் மாறாது நிலைபெறும். உச்சரிப்பு எளிதாயும் இயற்கையாயும் அமைந்த சொற்கள், வடிவ மாற்றம் அதிகமாக அடையமாட்டா. இலக்கணத் தொடர்புகளைக் குறிக்கும் உருபு, விகுதி முதலியவை கடினமாயும் இருக்குமானால், மொழிகள் தமது உருவத்தை இழந்து கிளை மொழிகளாய்விடும். இக்காரணம் பற்றியே வட மொழி, நூலில் மாத்திரம் நிலை பெறுவதாய் வழக்கிற் பயிலாமல் போவதாயிற்று. இயற்கைப் போக்கை ஒட்டி அமைந்த விதிகளை உடைய தமிழ் இன்றும் பேச்சு மொழியாகவும், நூன்மொழியாகவும் இருத்தல் காண்க. எனினும், இலக்கணக் கூறுபாடுகளின் தொடர்பு குறைந்தமையால், மலையாளம் தமிழின் வேறாய கிளைமொழியாயிற்று. வடமொழிக்கலப்பால் அது வேறு மொழி போற் றோன்றும். இதனோடு இப்

பகுதியை நிறுத்தி இனி தமிழ் மொழி அமைப்பை ஆராய்வாம்.

## தமிழ் மொழி அமைப்பு.

---

### திராவிட மொழிகள்.

இந்தியாவில் வழங்கும் மொழிகளுட் பல, திராவிட குடும்பத்தைச் சார்ந்தவை. ஆரிய குடும்பத்தைச் சேர்ந்தவை யுள்ளும் பல மொழிகள், திராவிட இலக்கண போக்கைத் தழுவி யுள்ளன. ஆதலால் இந்தியாவிற் பெரும் பான்மையும் திராவிடச் சார்புடைய மொழிகளே பேசப்படுகின்றன. இந்திய மக்களுட் பெரும்பான்மை யோரும் திராவிட உடற்கூறு உடையவர்களே. மத்திய இந்தியாவிலும், இமயமலைச் சாரலிலும், மலைத்தீவு(Maldives) களிலும் உள்ள மொழிகள் பலவும் மண்டா என்ற பெரும் பிரிவைச் சார்ந்தவை என மாக்ஸ் முல்லர் முதலியோர் கூறுவர். அவற்றை பேசுவோரும் திராவிட மொழிகள் பேசுவோரும் ஒரே தன்மை யான உடற்கூறு உடையவரெனவே கொண்டு டாக்டர் கிரையர்சன் (Dr. Grierson) அம்மொழிகளைப் பேசுவோரும் திராவிட மக்களே எனக் கூறினர். திராவிட மொழிகளையும், மண்டா மொழிகளையும் சித்தியப் பெருங் குடும்பத்தைச் சார்ந்தன என டாக்டர். கால்ட்வெல் (Dr. Caldwell) கருதுகிறார். சில

போலி மெய்கள் மண்டாவிற் சிறப்பாகக் காணப்படு கின்றன. மெய் இரட்டித்து வல்லோசை யாவதில்லை. 'மண்டாவில்' ஒருமை, இருமை, பன்மைகள் உண்டு. உயர்திணை, அஃறிணை என்ற பகுப்பில்லை. உயிருள்ளன, இல்லன என்ற பகுப்பே உண்டு. வேற்றுமைகள் வினைகளாற் காட்டப்படுவன. திரா விடர் பத்துப்பத்தாக எண்ணுவர். மண்டர், இரு பது இருபதாக எண்ணுவர். பிறவேறு பாடுகள் சிலவே.

திராவிடர்களே தென்னிந்தியாவின் பண்டை மக்கள். அதற்கு மாறான கொள்கைக்குத் தக்க சான்றில்லை. 'மண்டர்' மொழி பேசுவோர் மங் கோலியக் கலப்புடைய திராவிடரே. பெலுசிஸ்தா னத்தில் பிராகுயி (Brahui) மொழியை ஆதியிற் பேசியவர் திராவிடரே. வங்காளத்தில் இராஜ மகால் மலைச் சாரலில், பண்டை நிலையில் திராவிட மக்கள் வாழ்கின்றார்கள். 'ஐதரேயப் பிராம்மணத் தில், ஆந்திரர், சபரர் முதலியோர் விசுவாமித்திரர் வழிவந்தோராகப் பேசப்படுகின்றனர். மனுநூலில், திராவிடர், க்ஷத்திரிய நட் பதிதர் என்று கேட்கப் படுகிறது. அவ்வாறே மகா பாரதத்திலும் கூறப் பட்டது. பாகவதம் ஸ்கந்தம் 8, அத்தியாயம் 24, சுலோகம் 13-ல் இந்திய நோவா வாகிய (Indian Noah) சத்தியவிரதன் என்பான் திராவிடத் தலைவன் என்று அழைக்கப்படுகிறான். 'திராவிடர்' என்ற

சொல் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வராக மிசிரருடைய பிருகச்சம்மிதை யிற் காணப்படுகிறது.

திராவிடர் என்ற சொல் தமிழ் நாட்டைக் குறிப்பதற்கு வால்மீகி இராமாயணத்திற் பயன்படுகின்றது. குமாரிலபட்டர் என்பார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் திராவிடம் என்ற சொல்லைத் தமிழ் மொழியைக் குறிக்கவே வழங்கினர். 'ஆந்திர-திராவிட பாஷைகள்' என்பது அவர் வாக்கியம். தமிழ் நாட்டைக் குறிக்கும் அச்சொல் ஓடி வளைந்துள்ள தென்று பொருள்படும் என்ப.

திரமிளேசுரன் என்ற சொல் மச்சபுராணத்துள் ஒரு தமிழ் மன்னனைக் குறிப்பதாம். தாரநாத் என்பவர் 1573-ல் எழுதிய புத்தமத நூலில் 'திரமில்' என்ற சொல் தமிழைக் குறிக்கின்றது. பஞ்சத் திராவிடர் என்ற சொல் தென்னாட்டுப் பிராம்மணரைக் குறித்த தென்ப. போர்த்துக் கேசியர் 1577-ல் தமிழை 'மலபார்' என்ற சொல்லாற் குறித்தல், பாலி பாஷையில் எழுதப்பட்ட மகாவமிசத்தில் 'தமிழோ' என்ற சொல் பயன்படுகின்றது. டேனிஷ் பாதிரிகள் Lingua Damulia (தமிழ் மொழி) என்ற சொலலை வழங்கினர். கிரேக்க ஆசிரியர் தாலமி (Ptolemy) என்பவர் தமிழ்நாட்டை தமிரிசி (Damirici) என்ற சொல்லாற் குறித்தனர். அக்காலத்தில் இந்தியாவின் மூன்று பிரிவுகளில்

ஒன்றாகத் தமிழகம் கருதப்பட்டது. ஹியான்சாங் என்னும் சீன யாத்திரிகர், தென்மொழி என்பதற்கு தேய் மோலோ (Tehi-molo) என்ற சொல்லை வழங்கினர். பேரிப்ளஸ் (Periplus) நூலிலும், பிளினி (Pliny) நூலிலும் பாண்டியன் மலையாளத்தின் ஒரு பகுதியை ஆண்டனன் என்பது குறிப்பிக்கப்பட்டது. கிளாடியஸ் (Cluadius) என்னும் ரோமச் சக்கரவர்த்தியின் நாணயம் ஒன்று வைகையாற்றின் பாங்கர் கிடைக்கப்பெற்று சென்னைக் காட்சி சாலையில் வைக்கப் பட்டுள்ளது. ஏரியன் (Arian) சாதியைச் சார்ந்த வாலன்ஸ் என்னும் சக்கரவர்த்தியின் நாணயமும் கிடைத்திருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவிற் சில இடங்களில் ரோமநாணயங்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. கிரீக் மெகஸ்தனிஸ் (Megasthines) அலெக்சாண்டர் பெருமன்னர் படையெடுப்பில் கி. மு. 4-வது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தவர். அவர் பாண்டிய நாடு முத்துக் குளிக்கும் இடம் என்று கூறுகிறார். பிளினி பாண்டிய நாட்டைப் பற்றிப் பேசுமிடத்து அந்நாட்டில் பெண்ணரசி திகழ்ந்ததாகக் கூறுவர். சளுக்கிய சாசனங்களிற் 'சோடர்' என்ற சொல் சோழரைக் குறிக்கிறது. தாலமி (Ptolemy) 'சோலிர்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். சேரநாட்டிலுள்ள கி. பி. 8-வது நூற்றாண்டின் யூத கிறித்துவ சாசனங்களின் மொழி பாண்டி நாட்டுத் தமிழை ஒத்தி

ருப்புதாம். சேர சோழ பாண்டியர் கொற்கையில் ஆதியிலாண்ட ஒரு குடும்பத்தினர் என்பது கர்ன பரம்பரை.

மலையாளநாடு, அடிக்கடி மேலைத் தேசத்தார் போக்கு வரவிற்கு உரியதாய், பினிசியர், கிரேக்கர், யூதர், சிரியக்கிறித்தவர், அரபியர், போர்த்துகேசியர் முதலியோரால் முதல் முதல் கண்ட தென்னுடாகும். அசோக சாசனங்களிற் சோளபுத்திரர் என்று மலையாள மன்னர் அழைக்கப்படுகின்றனர். கி. பி. 545-ல் மிளகு வரும் நாட்டை 'மலே' என்ற சொல்லால் ஒரு ஆசிரியர் குறித்தனர். 'பார்' என்பது அரபிய மொழியில் 'நாடு' என்று பொருள் படும். 'மலெபார்' = மலைநாடு. பழைய மலையாளப் பாட்டு, தமிழே. தமிழ் எழுத்தே பல மலையாள நாட்டுச் சாசனங்களில் பயில்கின்றது.

தெலுங்கநாடு, திருப்பதியிலிருந்து வடக்கே சிக்காகுளம் என்ற ஏரி வரை பரவி ஒரிசா நாட்டைத் தொடுவது. மகமதியர் 'தெலிங்கானு' என்றனர். தெலுங்க நாட்டுக் கடற்கரைக்குக் கலிங்கம் என்ற பெயர் வழங்குகிறது. தெலுங்கரைக் கலிங்கர் என்றும் ஆந்திர ரென்றும் ஆரிய நூல்கள் கூறும். பிளினி 'ஆந்திரர்' என்ற பதத்தை வழங்குகிறார். 'திரிலிங்கம்' என்ற கருத்தில், பிளினி, 'மூடுகலிங்கம்' (=மூன்று கலிங்கம்) என்று கூறுகி

ரூர். 'வடுகு' என்ற சொல் அகநானூறு முதலிய சங்க நூலுட் காணப்படுகிறது. வடுகர், படகர், என்பன தெலுங்கரைக் குறிக்குந் தமிழ்ச் சொற்கள் போலும்.

கன்னடம் என்பது கருநடம் என்பதன் மரூஉ வாகும் பஞ்சு அதாவது பருத்திச் செடி விளையும் கறுப்பு நிலம் என்பது அதன் பொருள் என்ப.

துளுவநாடு, சந்திரகிரிக்கும் கலியாணி புரத்திற் கும் நடுவேயுள்ளது. (துளு= தாழ்மையுடைய). அது பள்ளத்தாக்கான நாடு போலும். குடகு= மேலைநாடு. (குடகு=மேற்கு)

நீலகிரியிலுள்ள தோடர், திராவிடரே. அவர் களுக்குள் ஒரு பெண் பலரை மணக்கும் வழக்கம் உண்டு என்ப. கோட்டார் என்னும் திராவிட வகுப்பினர் கன்னடக் கிளைமொழி பேசுபவர். இரு ளர், குறும்பர் முதலிய சாதியார் தமிழரே. மத் திய இந்தியாவில் காண்டவவனம் என்ற மலை இடத் தில் வாழ்பவர். காண்டர் (Gonds) முதலியோர் பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளனர். அவரெல் லாம் திராவிட மொழிகள் பேசுவோரே. கோண் டேயர் (Khonds) ஒரிசா நாட்டு மலைவாழ்பவர். அவரும் திராவிடரே. வங்காளத்து இராஜமகால் மலைவாழ் திராவிடர் 'மாலர்' எனப்படுவர். சூடிய நாகபுரி (Chota Nagpur) யில் வாழும் ஓராவோன்

களும் (Orasus) திராவிடரே. ஹாட்க்சன் (Hodgson) என்பார் கோலேரியரைத் தமிழினத்தாராகவே கூறுவர். தமிழையும் தமிழோடொத்த இலக்கணச் சார்புடைய மொழிகளையும் டாக்டர் கால்ட்வெல், 'திராவிடம்' என்ற பெயராற் குறிப்பாராயினர். பெலுசித்தான் கீல்ட் மாகாணத்திற் பிராகுயி பேசுவோர் தாங்கள் துருக்கியில் 'ஹாலெப்' என்ற இடத்திலிருந்து வந்ததாகக் கூறினும், சிலர் அவர்கள் மலையாள மேலைக்கரையிலுள்ள 'ஆலப்புழை' யினின்று போயிருத்தல் கூடும் என்பர். அது எவ்வாறாயினும், அவர் மொழி திராவிடச் சார்புடையதே.

மேலைநாட்டுப் புலவர்களுள் தமிழறியாத கோல்புருக் என்பவரே தமிழ் பிராகிருத மொழிகளுள் ஒன்று என்ற கருத்தைத் தழுவினர்.

தமிழும் வடமொழியும் வேறு வேறிலக்கணமுடையன என்பதை ஆசிரியர் சிவஞான யோகிகளும் பிறரும் செவ்விதி னுரைத்தனர். தமிழ் நூல்களிலே வடமொழிக் கலப்பு மதிப்புப் பெறுவதில்லை. அஃதில்லாமையே நூலுக்குச் சிறப்பு. பாட்டுக்களிலும் பாமரர் பேச்சிலும் தனித் தமிழ் மொழியே மிகுதியும் காணப்படும். சமய நூல்களிலே பிற்காலத்தில் வடமொழி மிகுதி பயில்வதாயிற்று.

திராவிட மொழிகளினின்று நீர், மீன் போன்ற பல சொற்களை வடமொழி பெற்றிருக்கிற தென்பதைப் பலர் அறிவதில்லை திராவிட மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள வேறுபாடுகளிற் சில வருமாறு:—

வடமொழியில் ஆண், பெண், அலி என்ற பகுப்பு சொல்லைப் பொறுத்தது. பாஷாணம் (=கல்) ஆண்பால், சிலை (=கல்) பெண்பால், தாரம் (=மனைவி) அலிப்பால். திராவிடமொழியில் பகுத்தறிவு இல்லாதனவும், உயிரில்லாதனவும் அஃறிணைப்பாலன.

வடமொழியில், ஒருமை, இருமை, பன்மை என்றமுப்பகுதியுள்ளன. ஒருமை, பன்மையே தமிழிலுள்ளன.

திராவிட மொழியில் பின்னசைச் சொற்களே உருவுமாறாது வேற்றுமை குறிப்பன. (agglutina-tive) உருபுகளும் விகுதிகளும் ஒருமைக்கும் பன்மைக்கும் ஓரினத்தனவே. வடமொழியில், வேற்றுமை தோறும் உருபுகள் வேறாய், பெயர்களோடு உட்பிணைந்து நிற்பன (inflectional)

வடமொழியிற்போல, தமிழில் உரிச்சொற்களுக்குத் திணைபால் உருபுகள் இணைக்கப் படுவன வல்ல. திராவிடத்திற்போல உடன்பாடும எதிர்

மறையும் வினையின் பகுதிகளாக அமைதல் வட மொழியிலில்லை. திராவிடத்தில், தொடர்சுட்டு (relative from) என்பது கிடையாது.

திராவிடத்தில் தழுவுஞ்சொல் முடியுஞ்சொல் லுக்கு முன் நிற்கும். அது, ஆரியமொழிகளிற் பின்னிற்றலுமுண்டு.

திராவிடத்திற்போலச் சித்திய மொழிகளில் ஆண், பெண் என்ற பகுப்பு, படர்க்கைச் சொற்க ளிலும், வினையாலணையும் பெயர்களிலும் படர்க்கை வினைகளிலுமே உண்டு.

தமிழிலுள்ள நான்காம் வேற்றுமை உருபு சித்திய மொழியிலும் பேஹிஸ்டூன் கற் பலகைகளி லும் அவ்வேற்றுமை குறிக்கவே காணப்படுகிறது. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, தமிழிலிருப்பது போலவே சித்திய மொழிகளிலுண்டு. தமிழிற் போல வினை யெச்சங்களே, உம்மைத் தொடர். வினைகளுக்குப் பதிலாக வருதல் சித்தியத்திலுண்டு. உடன்பாடும் எதிர் மறையும் வினையின் பகுதிகளாக வருதலும் சித்தியத்திலுண்டு. கொண்டு முடியுஞ் சொல் தழுவுஞ் சொல்லிற்குப் பின்னிற்றல் சித்திய முறையாகும். வினைகளினின்றெழும் பெயரெச்சமே உரிச் சொல்லாக மிகுதியும் பயன் படுவதில் திரா விடமும் சித்தியமும் ஒத்திருப்பன. ட, ண, ள என்பவை பயிலுதல் மொழி முதலில் நின்ற வல்

லொற்று சொல் நடுவில் மென்மையாதல் இரட்டித்த மெல்லோசை மிகுதல், நான்காம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை யுருபுகள், சுட்டுச் சொல்லுருபுகள், எண்ணுருபுகள் முதலியன திராவிடத்திற்கும், சித்தியத்திற்கும் பெரும்பாலும் ஒத்திருப்பனவாம்.

வடமொழியினுதவியின்றித் திகழக் கூடிய திராவிட மொழிகளிற் சிறந்தது தமிழே யென்பது டாக்டர் கால்டுவேல் கொள்கை யாகும். வட மொழி யிற் கபால ஒலிகள் (Serebral sounds என்பன வாய ள, ண; ட முதலியன) திராவிடத்தினின்றும் போந்தன. முன்னசைச் சொல்லை வட மொழி யிழந்தது, திராவிடத்தைப் பார்த்தே யாகும். வாக்கி யத்திற் சொல்லமைப்பு மிகுதியும் திராவிடச் சார்பு பற்றியே வட மொழியில் இருப்பதாக காணப் படு கின்றது. வட மொழியில் தழுவுஞ் சொற்கள் முடி யுஞ் சொற்கு முன்னுக, வருதல் தமிழ்ச் சார்பு பற்றியே.

வங்காளத்தில் ஆசியா சபை (Asiatic Sosiety of Bengal) வெளியிட்ட மாதப் பத்திரிகையில் டாக்டர் ஹாட்க்ஸன் (Hodgson) சொல்லி யிருப்ப தானது திராவிடத் தாக்கினுலே, வட நாட்டில் பல உள் நாட்டு மொழிகள் (Vernaculars) வட மொழி யினின்று பிறக்க லாயின என்பதே.

ளகர முதலிய திராவிட ஒலிகள் கலந்துள்ள வட சொற்கள் திராவிடச் சொற்களே யென்பது டாக்டர் எர்னஸ்டு டிரம்ப் (Dr. Ernest Trumpp) என்பவர் கருத்து.

திரு, எட்கின் என்பவர் சீன மொழிக்கும் பிற மொழிக்குமுள்ள தொடர்பை ஆயுமிடத்து, ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள எல்லா மொழிகளும் ஆதியில் ஒரு பண்டை மொழியிற் தோன்றியிருத்தல் கூடும் என்கிறார்.

டாக்டர் போப் திராவிட மொழிகள், கெல்டில், டியூட்டான் மொழிகளோடு ஒருவாறு ஒத்திருப்பன என்கிறார். கெல்டிக்கிற்கும் சித்திய மொழிக்கும் ஒற்றுமை பெரிதுங் காணப்படுமென்ப.

அகரம், சுட்டுப்பன்மையாய் வருதல், தூரத்தைச் காட்டுஞ்சுட்டு, அகரமாயும், அண்மையைக் காட்டுஞ் சுட்டு, இகரமாயும் இருத்தல், தகரம், இறந்தகாலங் குறித்தல் இரட்டித்தல், இறந்தகாலங் குறித்தல்பகுதியின் முதலெழுத்து நீண்டு தொழிற் பெயராதல் முதலியன ஆரியமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவானவை.

லத்தீன் — அவியோ, சம்ஸ்கிருதம் — அவ், தமிழ்—அவா, ஆவல். ஹீபுரு—ஆவஂ, முதலியன ஒரு பொருட் சொல்லாதல் காண்க. சித்திய குடும்

பமும் இந்து—ஐரோப்பிய குடும்பமும் செமிட்டிக் கும் ஆதியில் ஒன்றாயிருந்து பிரிந்தன என்பாரு முளர். தமிழுக்கும் ஆஸ்திரேலிய மொழிக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

| ஆஸ்திரேலியம் | தமிழ் |
|---|---|
| ஙா, | நான், |
| நீன், நீம். | நீ, நீர், நீங்கள். |

என்பன ஒருபொருட் சொற்கள். தெலுங்கில், 'லு' பன்மை விகுதியாதல் போல, ஆஸ்திரேலிய மொழிகளிலும், அது பன்மை விகுதியே. உருபுகள் பின்னசையாக வருதல் ஆஸ்திரேலியத்திற்கும், சித் தியத்திற்கும் பொது. தன்மைப்பன்மை ஆஸ்திரே யத்திலும் இருபகுதியா யுள்ளன. சொல்லமைப்பும் அவ்வாறே உள்ளது. ஆப்பிரிக்காவினுள் பார்நு (Bornu) மொழியும் திராவிடம் போல ஒட்டுச் சொல் நிலையிலுள்ளதாய் கேள்வி, எதிர்மறையுருபு கள், பின்னசையாய்ச் சேர்க்கப் படுவதாயுள்ளது. முன்னிலைப் பெயர் 'நீ' என்பதே அம்மொழியிற் காணப்படுகின்றது.

தமிழ் மொழியானது ஒத்துப்பார்க்கும் ஆராய் ச்சிக்குப் பிறதிராவிடமொழிகளினுஞ் சிறந்த பகு திகளை யுடையது என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. தனியே பெருகிய இலக்கணம் உடைமை, சாசனங்கள் பெரும்பாலும் தமிழிலேயே இருத்தல்,

சொந்தப்பகுதி கடன்பகுதியினும் மிகுந்து மொழிக்கு முக்கியமான கருத்துக்களை யுணர்த்துதல் முதலிய தன்மைகளே தமிழின் சிறப்புக் கேதுவாவன. தமிழையும் தமிழ் நாட்டையும் பற்றிப் பேசிய கிரேக்கப் புலவர்களுள் ஹெரோடட்டஸ் (Herodotus) கி. மு. 429-லும் டிசியன் (Ctesian) 400-லும் மெகஸ்தனீஸ் 300-க்கு முன்னும், ஸ்டிராபோ கி. பி. 20-லும் பிளினி 77-லும் பெரிபிளஸ் 85-லும் தாலமி (Ptolemy) 130-லும் வாழ்ந்தவர்கள். அவர்கள மொழிகளால் தமிழ் நாகரிகம் கி. மு. 6-வது நூற்றாண்டுக்கு முற்பட்டதே யென்பது தெளிவு. இப்போது சிந்து மாகாணப் புதைபொருளாராய்ச்சியால், தமிழ் நாகரிகம், கி. மு. 5000 ஆண்டுகட்கு முற்பட்ட தென்பது போதரும்.

தமிழர் வடநாடெங்கும் பரவியிருந்தனர். சிந்து நதிக் கரையிலிருந்த ஒரு சாதியார் சூத்திரர் எனப் பட்டனர். ஆரியர் முதலில் வென்றனர். சூத்திரர் என்பது அடிமைப் பட்ட சாதியார்க்குப் பெயராகப் பிற்காலத்தில் வழங்குவதாயிற்று. அடிமைப்பட்டவரைச் சூத்திரரென்றும், அடிமைப்படாத எதிரிகளைத் தாசியுக்களென்றும் ஆரியர் வழங்கினரென்பது டாக்டர் கால்டுவெல்லின் கொள்கை. ஆரியரல்லாத திராவிடரைச் சூத்திரரென்றல் பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்க மென்க.

பண்டைத் தமிழர் கடவுட் கொள்கையராய், கோயில், அரண் முதலியன உடையராய், அரசு, உழவு, போர், இசை, முதலியவற்றிற் சிறந்தும், பனையோலையிலெழுத்தெழுதியும், நெய்தற்றொழில் உணர்ந்தோராய், மணவாழ்க்கை, சட்டம், மருத்துவம் அறிந்தோராய்த் திகழ்ந்தனரென்பதும், பாண்டியரே தமிழ் நாகரிகத்தைக் கொற்கையில் வீற்றிருந்து வளர்த்தன ரென்பதும், அகத்தியர் முதலில் வந்தஆரியப் பிராமணத் தலைவர் என்பதும், டாக்டர் கால்டுவெல் கருத்து. அகத்தியர், பாண்டியர்க்குக் குருவாயிருந்த தமிழ் முனிவர் ஆவர். அவர் வடநாட்டிற்குச் சென்று தெற்கே திரும்பியது பற்றி அவரை ஆரியரென்பது மரபாயிற்று.

தாம்பிரபர்ணி யென்பது தெய்வ நதியாகக் கிரேக்க நூலிற் கூறப்பட்டுள்ளதாம், ஆனல், குமாரிலபட்டர், தமிழையும் தெலுங்கையும் மிலேச்ச பாஷைகளென்பர்.

எட்வர்டு தாமஸ் என்பவர், வடநாட்டில் ஆதியில் தமிழெழுத்தே வழங்கிற்றென்றும், அதனின்றேவடநாட்டு லிபி ஏற்பட்டதென்றுங் கூறுகிறார். சிலர் மாறுபட்ட கருத்துடையர், எவ்வாறாயினும், கிரந்த எழுத்துத் தமிழ் எழுத்தின் வழித்தாக வந்ததென்பது யாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

தமிழ் எழுத்துக்கள் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னேயுள்ளன. தொல்காப்பியர் காலம் கி. மு. 2000-க்கு முற்பட்டது. தொல்காப்பியத்தில் எகர ஒகரத்திற்கும் புள்ளி கூறப்பட்டுள்ளது. இதனையறியாத டாக்டர் பர்னல் என்பவர் ஆதித் தமிழில் எகரத்திற்கும் ஒகரத்திற்கும் வடிவில்லை யென்றார். அவர் தமிழின் பழைமை யுணராது அது தேவார காலத்திலிருந்து லிபி உடைத்தாயிற்றென்றும், ஏமெனிற்காணும் (oyemon) எகிப்து ஹியயாரிட்டிக் சாசனத்திலிருந்து தமிழெழுத்து வந்ததெனறும் தவறுபட உரைத்தார். அசோகர் சாசன எழுத்துக்களுக்குத் தமிழெழுத்துக்களே மூலமென எட்வர்டுதாமஸ் கூறுவதாலும் வட்டெழுத்து முதலிலிருந்து பின்கிரந்த எழுத்து ஏற்பட்டபோது, சதுரபபகுதிகள் கலந்தன வென்பதற்கு இடமிருப்பதாலும், கிரந்த எழுத்துக்களின் சார்பு மலையாள லிபியிற் காணப்படுவதாலும், தமிழெழுத்து மூலமும் தேவநாகரி மூலமும் வெவ்வேறென அறியற்பாலன. பர்மன் எழுத்து முற்றிலும் வட்டெழுத்தாகவே யுள்ளது. ஆதியில் தமிழ் எழுத்துக்களும் அவ்வாறே இருந்தன போலும். தேவநாகரிச் சார்பால் தமிழ்லிபி சதுரமான காரணமறியாது. தேவநாகரிச்சதுரம் எடு எழுத்தாணி காரணமாக வட்டங் கலந்ததென்று கூறல் உண்

மையைத் தலைமாறிக் கூறுவதாகும். , தமிழ் எழுத்துத்தனியே ஆதிபாசிரியரால் அமைக்கப்பட்டதென்பதே ஊகித்தற்பாலது.

## உயிர் எழுந்து.

இனி, உயிர் எழுத்துக்கள் சொற்களில் பயிலுமுறை ஆயற்பாலது. தமிழ் அகரத்தைக் கனத்த எழுத்தென்பர் சிலர். தமிழில் அது அதிகமாற்றமடைவதில்லை. வடமொழி அகரம் தமிழில் எகரம் ஆகிறது. ஜபம் > ஜெபம் என்று வழங்குகிறது. தமிழ் அகரம் கன்னடத்தில், எய் எனுருப்பின் எகரமாகிறதென்ப, தெலுங்கில் எம் என்பது இகரமாகிறது, அது கன்னடத்தில் உகரமாகிறது. பழங் கன்னடத்தில் அகரம் ஒகரமாகும். அது உகரமாதலுங் கூடும்.

அவ் + அ = அவ > அவெய், அவி, (தெலுங்கு)
> அவு (கன்னடம)
> அவா (மலையாளம்)
} = அவைகள்

தமிழில் ஐகாரம அகரமாதலும் அகரம் ஐகாரமாதலும் சிறுபான்மையே உண்டு.

சமையம் > சமயம்

உடைமை > உடமை

அரசு > அரைசு

இகரவுயிர் வருமொழியிலிருப்பின் அ—ஆவாதல் அ + இடை = ஆயிடை என்றும். ஆ தமிழ்ச் செய்யுளில் ஓவாதல் தெளிவு. பெரியார் > பெரியோர். அவ > ஓ. விண்ணவர் > விண்ணார் > விண்ணோர்.

வடமொழி ஆ தமிழில் ஐகாரமாதல் உண்டு.

ஆசா > ஆசை
திசா > திசை

ஆ கன்னடத்தில் எகரமாகும்.

கங்கா > கங்கெ, கங்கெயு.

கொச்சை உலக வழக்கில் அ > எ வாதலும் ஆ > ஏ வாதலும் உண்டு.

திருநெல்வேலி பக்கங்களில் வாங்கினேன் என்பதை வேங்கினேன், என்பர்.

சிதம்பரம் பக்கங்களில் அவர் என்பதை அவெர் என்பர், நட என்பதை நடெ வென்பர், மலையாளத்தில்.

இகரம் நீண்டு ஏகாரமாகிறது தெலுங்கில்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| இலது | லேது |

தெலுங்கிலும் கன்னடத்திலும் ஒவ்வொரு சொல்லும் உயிரெழுத்தில் முடிய வேண்டும். அதற்

காக உகரத்தைச் சேர்த்தல் வழக்கம். கன்னடத்தில், அகரத்தில் முடியுஞ் சில சொற்களுக்குக் கூட உகரம் சேர்க்கப்படுகிறது.

(தமிழ்ச் சகரத்திற்கு கன்னடத்தில் ககரம்வரும்)

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| சில | கிலவு |
| பல | பலவு |

தமிழ் நெட்டெழுத்திற்குப் பின் வரும் உகரம் குற்றியலுகரம் ஆதல் தமிழ் இலக்கணம் அறிந்தார்க்குத் தெளிவு.

உகரம் மலையாளத்தில் அகரமாய் அதுவுங் குறைந்துபோம்.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| கிழக்கு | கிழக் |

வல்லொற்றில் முடியும் வடசொல்லிற்குப் பின் தமிழில் உகரம் வருவதுடன், வல்லெழுத்து இரட்டித்தலும் நிகழும்.

| சம்ஸ்கிருதம் | தமிழ் |
|---|---|
| வாக் | வாக்கு |
| அப் | அப்பு |

அத்வைதம் அத்துவைதம், அத்துவிதம்.

சில தமிழ்ச்சொல், நன்கு ஒலிக்க உகரம் சேர்தலுண்டு.

சொல்>சொல்லு, பல்>பல்லு, வில்>வில்லு
என்பன அவை.

உலக நடையில் உகரம் என்பது ஒகரம் ஓகாரமாம்.
உறு> ஒறு, உன் புத்தகம்> ஒன்புத்தகம்.

எகரம் திராவிடமொழிகளில் உண்டு. வடமொழியிலில்லை. உலக வழக்கிலும் எகரம் ஏகாரமாதல் இல்லை. என்புத்தகம்> ஏன்புத்தகம். என் வீடு> ஏன்வீடு என்பதில்லை.

எகரமும் ஏகாரமும் வேறு.
தெள் = தெளிவான
தேள் = கொடுக்கினாற்கொட்டும் பூச்சி.

இவை வெவ்வேறு பொருளாதல் காண்க.

தமிழ் எகர, ஏகாரங்கள் ஒகரமாக மாறுதல் பிற திராவிட மொழியிலுண்டு.

| தமிழ் | துளு |
|---|---|
| வேண்டும் | போட் |
| வெள்ளி | பொள்ளி |

இது, திராவிட மொழி ஆரியத்தின் வேறென்பதைக் காட்டுவதில் ஒன்று.

தமிழ் ஐகாரம், மலையாளத்தில் அகரமாம்.
தலை <தல. வலை <வல. என்பன உதாரணமாகும்.
தெலுங்கிலும் அவ்வாறும்.

சில விடங்களில் ஒகரம் ஓகாரமாகும் ஒரு=ஓர். என்பது அது. ஔகாரம் — தமிழிலே தான் தமிழ்ச்சொல்லிற் பயில்வது. அதற்குப் பதிலாக 'அவ்' என்பது வருதலுண்டு.

சௌக்கிய < சவுக்கிய.

## மெய்யெழுத்து.

வல்லெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும் போது வல்லோசையாயும மொழிக்கு நடுவில் தனித்து வந்தால் மெல்லோசை இடையோசை உடையதாயும் இரட்டித்தால் வல்லோசை யுடையதாயும் வருதல் தமிழிலுள்ள சிறப்பு விதி. இது, ஆரியத்தில் காணப்படுவதில்லை.

உதாரணம்: கலம், அகம், பக்கம், சடை, கசம, கசசை, வடம், வட்டம் என்பனவாம்.

சம்ஸ்கிருதம் danta < tandan என்று தமிழில் ஒலிக்கும். தமிழ்ச் சகரம். வடமொழியில சிலர் என்ற சொல்லில் உள்ள சகரம் போல ஓசை யுடையது. இரட்டித்த போது வல்லோசை பெறும். தெலுங்கில் தனியாய் வரும சகரம் வல்லோசை யுடையது. றகரம் இரட்டித்தபோது ட்ட என்பது போன்ற ஓசையுடையதாம்.

தமிழிலுள்ள வல்லெழுத்து ஈரோசைவிதி, பின்னிஷ், லாப்பிஷ் மொழிகளிற் காணப்படுகிறது. அது அசீரியாவிற் கண்டெடுத்த கி. மு. 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெஹிஸ்டூன் கற்பலகை மொழியிலும் காணப்படுகிறது. ஹீப்ருவில் மொழிக்கு முதலில் வல்லோசை மூச்சொடு கலவாது வரும். மொழி நடுவில் மெல்லோசையாயும், மூச்சோசை கலந்தும் வரும்.

டகரம், றகரம் தமிழில் மொழிக்கு முதலில் வருவதில்லை, ண்ட், ன்ட், ம்ப் — தமிழிற் கிடையாது. தெலுங்கிலும் கன்னடத்திலும் அவை உள.

தூட மொழி (தோடர் பாஷை)யில், ஆங்கில எப் போன்ற ஒலியுண்டு.

ரகர லகரங்கள் தமிழ் மொழிக்கு முதலில் வருவதில்லை, அவற்றிற்கு முன் இகரம், அல்லது உகரம் வரும். உதாரணம்:— இரத்தம், உலோபம் என்பனவாம்.

ழகரம் உலகநடையில் ளகரமும் யகரமும் ஆம். உதாரணம்:- வாழை < வாளை, பழம் < பயம், பழம் < பளம் என்பன. ழகரம், மலையாளத்திலும் பழங் கன்னடத்திலுமுண்டு. அது தெலுங்கிலும் தற்காலக் கன்னடத்திலுமில்லை. ழகரத்திற்குப் பதிலாகத் தெலுங்கில் டகரம் வரும். தற்காலக்

கன்னடத்தில் ழகரம் < ளகரமாகும். தெலுங்கில், ழகரம் தோன்றுவதில்லை. 'விழுங்கு' என்னும் தமிழ் மொழிக்கு 'மிங்கு' என்பதே தெலுங்கு.

ளகரம், வேதகால ஆரியமொழியிலுண்டு.

றகரம், தெலுங்குப் பாட்டிலும் கன்னடப்பாட்டிலுமுண்டு. அது, மலையாளத்தில் சாதாரணமாக வழங்கும். ற்ற என்பது தெலுங்கில் டகரமாயும், கன்னடத்தில் தகரமாயும் வழங்கும்.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|
| மாற்று | மாட்ட | மாத்து |
| பற்று | பெட்டு | ஹட்து |

ன், தெலுங்கில் கிடையாது.

| தமிழ் | மலையாளம் | துளு | கன்னடம் |
|---|---|---|---|
| ன்று | ன்னு | ஞ்ஜு | ரு |
| சென்று | சென்னு | | |
| கன்றி | | கஞ்ஜு | |
| மூன்று | | | மூரு |

ஒன்று என்பது ஒரு என்றாவதுபோலாம்.

தமிழில் மூச்சுக் கலப்பொலி (Breathing sound) இல்லாமை, தார்த்தார் (Tartar) பாஷை வழக்கை நினைவு படுத்துகிறதென டாக்டர் டிரம்ப் கூறுகிறார்.

பகாரத்திற்குப் பதிலாக ஹகரம் கன்னடத்தி லும், மராத்தியிலும் வழங்குகிறது.

ச, ட, ண, ள என்னும் ஒலிகள் தமிழிலி ருந்தே வடமொழி முதலிய வற்றிற்குச் சென்றன என்பதற்குக் காரணம் வருமாறு:—

(1) பல முக்கியமான வேர்ச் சொல்லில் அவை கலந்திருக்கிறது.

(2) வடமொழியில தகர வர்க்கத்திற்குப் பதி லாக ஓசையின் பொருட்டே அவை பயன்படு கின்றன.

(3) கிரீக், லத்தீன், லித்துவானியன், பாரசி கம் முதலிய ஆரிய மொழிகளில் இவ்வகை ஒலிகள் இல்லை.

(4) தமிழிலேயும் பின்னிஷ் முதலிய மொழி களிலேயும் அவை மிகுதியாகக் காணப்படுகின்றன.

டகரவர்க்கத்திற்கும் முக்கிய வேறுபாடு தமிழ்ச் சொற்கிருத்தல் போல வட சொல்லிற் கில்லை.

குடி, குதி, புதை, புடை, மணை, மனை, கட்டு, கத்து, அரி, அறி, கொள், கொல், தொலை, தொளை, என்பவற்றின் வேறுபாடு காண்க.

ட வர்க்கம், திராவிடத்திற் கின்றியமையாமை போல வடமொழிக் கின்றியமையாதனவல்ல, ஆதலால், ட, த, ண, ள, ற, ச முதலியன ஆதியிற் தமிழ் ஒலிகளே.

க என்ற இடையோசை வகரமாதல் உலக வழக்கிற் காணப்படும். நோக> நோவ. ஆகு> ஆவு தமிழ்ப் பகழம் தெலுங்கில் பகடமு என்னப்படும், சிலவேளை அது மறைதல், பகுதி> பாதி சகடு> சாடு என்பவற்றிற் காண்க.

'லகு' என்பது லத்தீனில் 'லெவி' என்றுவதை ஒப்பிட்டுப் பார்க்க.

தமிழிலும் தெலுங்கிலும் உள்ள ச கரத்திற் கு கன்னடத்தில் க கரம் வரும்.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|
| சின்ன | சின்ன | கின்ன |
| செவி | செவ்வு | கிவி |
| செய் | ச்செய் | கெய் |

தமிழிலுள்ள க கரத்திற்குத் தெலுங்கில் ச கரம்வரும். தமிழ் 'கேடு' என்பது தெலுங்கில் 'செடுபு' என வரும். அது, மாறிவருதலும் உண்டு. வாசல்> வாகிலி, என வருதலும் காண்க.

ய கரத்திற்குச் சகரம் வருதலுமுண்டு. பெயர் பெசர், கெசர் (கன்னடம்) பையன்> பசன், அயல் > அசல், என்பன அவற்றிற்கு உதாரணங்களாம்.

சகரம் யகரமாதல் மலையாளத்திலுண்டு. பசும் > பயும் > பைம், அரிசி > அரியி > அரி என்பவற்றால் அறிக.

டகரம் பிற திராவிட மொழிகளில் ரகர மாகும் ர > ற.

| தமிழ் | தூடமொழி | தெலுங்கு |
| --- | --- | --- |
| நாடு | நார் | |
| செடு | செறு | செறுக்க |

ணகரம் னகரமாகும்.

| தமிழ் | மலையாளம் |
| --- | --- |
| கண் | கன்(னு) |
| விண் | வின்(னு) |
| மண் | மன்(னு) |
| துணிவு | துனிபு |

னகரம் ணகரமாகும்.

| தமிழ் | மலையாளம் |
| --- | --- |
| நினக்கு | நிணக்கு |

ணகரம் டகரமாகும்.

பெண்டு × ஐ = பெட்டை

ஆண்டு × ஐ = ஆட்டை

| கன்னடம் | தமிழ் |
| --- | --- |
| எண்டு | எட்டு |

தகரம் ரகரமாதல், விதை-விரை என்பதிற் காண்க. வடமொழி தசம் என்பது பிராகிருதத்தில், ரகம் என்றும், தகரம், ரகரமாவதுடன், சகரத்திற்குக் ககரமும் வரும்.

தகரத்திற்கு லகரம் வருதல் மலையாளத்தில் காணப்படும். உதாரணம்:—உத்பத்தி =உல்பத்தி. பத்மம்> பல்மம். பத்மநாபன் =பல்மநாபன்> பற்பநாபன். (தமிழ்)

தகரத்திற்குச் சகரம் வருதல், பெரிது> பெரிசு. புதிது> புதுசு. ஐந்து> அஞ்சு. என்பவற்றிற் காண்க. மாறி வருதல், வயஸ் =வயசு> வயது. மனஸ் =மனது. மாஸம் =மாதம், செய்த =செஞ்ச பெய்த> பெஞ்ச.

நகரத்திற்கு மகரம் வருதல், (முன்னிலை) நீர்> மீரு. (தெலுங்கு)

பகரத்திற்கு மகரம்—பதி> மிதி (தெலுங்கு) பாம்பு> பாமு. கோதும்பை >கோதுமை.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| என்பர் | என்மர் |
| உண்பான் | உண்மான் |

பகரத்திற்கு ஹகரமும், வகரமும் வரும்போது தமிழ் 'பாம்பு' கன்னடத்தில் 'ஹாவு' என வரும்.

மகரத்திற்கு னகரம் போலி.

குளம் =குளன்

மரம் =மரன்

னகரத்திற்கு மகரம் வரும்.

ஏன் = ஏமி (தெலுங்கு)

மகரத்திற்கு வகரம் வருதலுண்டு.

மாமி > மாவி (குடகுமொழி)
நீம் > நீவு (கன்னடம்)
நாம் > நாவு ( ” )

யகரத்திற்கு நகரமும், ஞகரமும் வருதல், வடமொழி யமன் > நமன் > ஞமன் ஆதல் காண்க.

மாறி வருதல்—யான் > நான் < ஞான். சொல்லிய > சொல்லின.

யகரத்திற்கு தகரம் வருதல்—யாவர் = தாவர் (கன்னடம்) யாவது = தாவது (துளு)

ரகரம் றகரங்கள் தம்முள் மாறுதலும், ரகர லகரங்கள் தம்முள் மாறுதலும் பல விடத்துங் காணப்படும். கருமை = கறுப்பு, பந்தர் = பந்தல், பரிசை = பலிசை (கேடயம்) என்பன காண்க.

ரகரம் ளகரமாக மாறுதல் தெரி = தெளி எனவாகும். கரு, கார்—என்பன நிறத்தைக் காட்டுதல் சித்தியமொழியிலுண்டு. கார் என்பது வடமொழியிற் காள என்றாயிற்று. காளகண்டம் என்பதில் அப்பொருள் காண்க.

துளு மொழியில் லகர ஈறு ரகரமாகும். வில் < பிர் என்பதிற் காண்க.

லகரத்திற்கு டகரம் வருதல் பிற திராவிட மொழிகளிற் காணப்படும்.

| தெலுங்கு | கூடமொழி |
|---|---|
| பாலு | பாடு |
| இல்லு | இட்டு |

வகரத்திற் சொல் நடுவில் ககரம் வருதல், செய்வேன் = செய்கேன் என்பதிற் காண்க.

ழகரத்திற்கு ணகரம் வருதலுண்டு வீழ் > வீணு. (மலையாளம்) முழுகு > முணுகு. (தெலுங்கு) குழி > குணி. (கன்னடம்)

ழகரத்திற்கு டகரம் வருதலும் ளகரம் வருதலுமுண்டு.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|
| ஏழு | ஏடு | ஏளு |
| கோழி | கோடி | கோளி |
| பொழுது | பொத்து | ஹொட்டு (புது கன்னடம்) |
| | | பொட்டு (பழங் கன்னடம்) |

துளுவில் ழகரத்திற்கு ரகரம் வரும். பொழுது > பொரது. றகரத்திற்கு துளு மொழியில் ஜகரமும், டகரமும் வரும்.

மூறு > மூஜி. ஆறு > ஆறி. நூறு > நூடி.
ற > ன. பிறகு > பின். சிறு > சின்ன.

ளகரத்திற்கு ணகரம் வருதல் கீழ் வருவன வற்றால் அறிக.

ள் > ண். கேள் > கேண் (துளு) கொள் > கொண் (துளு)

மலையாளத்தில், ளகரம் ழகரமாகும். ஆள்மை = ஆண்மை என்பன ஆழ்மை யென எழுதப்படும். ழகரவீறு யகரமாதலுண்டு.

மலையாய்ம < மலையாழ்ம.

இவ்வாறே பிற எழுத்துக்கட்குங் கண்டு கொள்க. சில எழுத்துக்கள் மறைந்தொழியும் ஸ்தானம் > தானம்.

மெல்லோசை வல்லொற்றிற்கு முன் ஓசை நயத்திற்காகச் சொல் நடுவிற் புகுதலுண்டு.

அடகு > அடங்கு, பகு > பங்கு.

கோண்டு, அக = தங்குக, இக = இங்கே, இங்க = இப்பொழுது.

தமிழில் ஙகரம் புகுந்து அங்கு, இங்கு என்பவை வந்தன.

தெலுங்கில் டகரம் சுட்டெழுத்துடன் வரும். அட = அங்கே. எட = எங்கே. ஊட = இங்கே.

குடகு மொழியில் அக்கா = அப்போது, இக்கா = இங்கே, இப்போது. எக்கா = எப்போது

எனவருவதிற் கா—என்பது காலத்தின் சுருக்கச் சொல்லாயிருக்கலாம்.

தெலுங்கிலுள்ள இரடு, என்பதில் ணகரம் ஓசை நயத்திற்காகப் புகுவதால் இரண்டு என்பது வந்ததென்பதுமுண்டு.

| தமிழ் | தெலுங்கு | பழங்கன்னடம் |
|---|---|---|
| மருந்து | மந்து | மர்து |
| கரண்டி | கரிட்டெ | |

அகர முதலிய சுட்டெழுத்துக்களோடு லகரம் சேர்தல் கன்னடத்திற் காணப்படும். அதனோடு தகரம் சேர்வது தமிழிற் காண்க.

அல்லி, இல்லி, எல்லி, என்பது அன்று. இன்று, என்று என வருதல் காண்க.

சொல்லோசைக்காக மகர மொற்றுச் சேரும் போது சொல்லின் ஈற்றிலுள்ள மகரம் பகரமாத லுண்டு. பிற எழுத்தாதலுமுண்டு. திருமபு > திருமு, திருவு (கன்னடம்) திருகு (தெலுங்கு) எறும்பு > இருவு (கன்னடம்)

வகரத்திற்குப் பகரம் வருதல் இயல்பு. வாழ்ந் தேன் > பாள்தேன் (கன்னடம்)

சித்திய குடும்ப மொழிகளில, உள்ள ஒரு சொல்லில், ஓசையிலிருக்கின்ற உயிரெழுத்திற்கு

ஒத்த உயிரெழுத்துப் பிறிதோரசையிலிருக்க வேண்டுமென்ற விதி தெலுங்கில் உண்டு. அது, தமிழில் இல்லை. இகரம், ஈகாரம், ஐகாரம் என்பவற்றிலொன்று ஒரு சொல்லில் வந்தால், அதற்கு இனமான உயிர் பின்னசைபிலிருத்தல்வேண்டும். உகரம் வந்தால், அதற்கினமான எழுத்து பின்னசையிலிருத்தல்வேண்டும்.

| ஒருமை | | பன்மை |
|---|---|---|
| கத்தி | { | கத்துலு |
| | | கத்துவு |
| | | கத்திகி |
| | | கத்திலக்கி |

கூட்டு மெய்கள் தமிழிலில்லை. அவை தெலுங்கிலுண்டு. பினிசிய, ஹங்கேரிய மொழிகளிலும், ஒவ்வோரசையும் ஒரு மெய்யோடு தான் தொடங்கும்.

எழுத்து மாற்றம் அறிந்தால் மொழித்தொடர்பு விளங்கும். படர் > பரடு (கன்னடம்) எழுத்துக்கெடுதலும் அவ்வாறே. ஆகாது > காது (தெலுங்கு)

சொல்லினடுவிலுள்ள உயிர் கெடுதற்கு உதாரணமாவன:- நெருப்பு > நிப்பு. எலும்பு > எம்மு. எருது > எத்து. எருமை > எம்மெ. (கன்னடம்) கொழுமை > கொழ்மெ. (துளு)

தமிழில் ஓசையழுத்தம் பாராட்டப் படவில்லை அதாவது ஆரிய மொழிகளிற் போல வர்க்க எழுத்துக்கள் பாராட்டப்படவில்லை. எ போன்ற அசைகள் தேற்றங்குறிப்பனவாம்.

## வேர்ச் சொல்.

எழுத்துக்களின் மாற்றங்களை ஒருவாறு சுருக்கி ஆய்ந்தனர் புலவர். எழுத்துக்களாலாய வேர்ச்சொல் அல்லது பகுதிகளே சொற்களின் முக்கியமாகும். சீன மொழியிலும் வடமொழி தென்மொழிகளிலும் வேர்ச்சொற்கள் ஓசைச் சொற்களாகவே பெரும்பான்மை காணப்படும். செமிட்டிக் மொழிகளில் மெய்யெழுத்துக்களாலாய ஈரசைச் சொற்களே மூலமாவன. சீனத்தில் சொற்களின் இடத்தையும் துணைச்சொற்களையும் வைத்து இலக்கணத் தொடர்புகள் அறியப்படும். செமிட்டிக்கில் உள்ளுயிர் மாற்றத்தாற் பெரும்பான்மையும் இலக்கணத் தொடர்பு காட்டப்படும். உருபுகள் அல்லது விகுதிகளையும் இடையசைகளையும் ஒட்டுவதால் சித்திய மொழிகளும், உட்பிணைந்து கலப்பதால் இந்து ஐரோப்பிய அல்லது ஆரிய மொழிகளும், இலக்கணத் தொடர்புகளை உணர்த்துவனவாகும். பெயர்களும் வினைகளும் பகுதிகளாக வருவன. ஒரு சொல்லே பெயராகவும் வினையாகவும் வரும்.

உதாரணம்:- சொல், தறி, முறி.

கடு (= காரம், விடம்) பெயர்ச்சொல்

கடுநடை = என்பதில் கடு, உரிச்சொல்

கடுகு = விரைவசைச்சொல், என்ற விடத்து வினைச்சொல்.

காடு = வனம்

தமிழிலே பகுதியின் பகுதியாகியவேர், நன்கு இலக்கணத்துள் ஆயப்படவில்லை.

விரி என்னும் பகுதியின் பகுதி விர் என்பது. அதனோடு அல் என்ற தொழிற் பெயர் விகுதி சேர்ந்தபோது விரல் என்றாய் அது கை விரலுக்குத் தொழிலாகு பெயராயிற்று.

கடல் என்பது கட என்பதன் பகுதியாகிய கட் என்பதனடியாய்ப் பிறந்தது. அது கடத்தற்குரியது, கடக்க ஒண்ணுதது என்ற இரு பொருளும் பயப்பது.

பகல் என்பது பகு என்பதன் பகுதியாகிய பக் என்பதனடியாய்ப் பிறந்தது. இரவினின்று கதிரவன் ஒளியாற் பகுக்கப்பட்ட நேரம், பகல் போலும்.

குடல், குடை என்பதனடியாய்ப் பிறந்தது, குடையப்பட்ட குழலபோல, உள் பக்கம் குடைவாயிருப்பது என்னும் பொருள்படும். குட், பகுதி என்பாருமுளர்.

நிலம் என்பதன் பகுதி நில், அம் கருத்தாப் பொருள் விகுதி. வெள்ளியின் பகுதி வெள் என்பதே. இ கருத்தாப் பொருள் விகுதி. நட் என்னும் பகுதியிற் பிறந்த நடு என்பது முதல் நீண்டு நாடு என்றாயிற்று. நாடப் பட்ட நிலம் நாடு போலும். ஆடு என்பதுமுதனிலைப் பெயரே. குதித்து ஆடும் பிராணி ஆடு என்றழைக்கப்பட்டது போலும். பகுதியின் பகுதி ஆட் என்பது. காண் என்பது முதல் குறுகிக் கண் என்றாயிற்றுப் போலும். மூக்கு என்பது முகர் என்பதனடியாய்ப் பிறப்பது அதன் மூலம் முக் என்பதே. அர் விகுதி சேர்ந்து வினைப்பகுதி ஏற்பட்டது. வேரோடு உகர விகுதிசேர்ந்து முதல் நீண்டு, மூக்கு எனுனுயிற்றுப்போலும். நாக்கு, நக்கு என்பதனடியாய்ப் பிறந்தது. நக்கும் பிராணி நாயெனப்பட்டது. செய் என்பதே கையாயிற்று என்பாருமுண்டு. தெலுங்கில், செய் என்பது தமிழில் கை எனப்படும். முதல் என்பது மு என்பதனடியாய்ப்பிறந்தது. மு என்பது முன் என்ற பொருளைக் குறிக்கும். அல் விகுதி வருங்கால், த் எழுத்துப்பேறு தும். அதனையுஞ் சேர்த்து தல் என்பதை விகுதி என்றலுமுண்டு. திராவிட வேர்ச்சொற்கள் விகுதி முதலியவற்றோடு கலந்து பெரும்பான்மை உரு மாற வில்லை. ஆரியத்தில் உட்பிணைப்பால், பகுதிகள் உரு மா றி நிற்கும். பெருகுகிறது என்பதைப் பிரித்தால் பெர் என்பதே

வேராகும். மெய்யெழுத்தில் முடியும் வேருடன் உயிரெழுத்து ஈற்றில் கலத்தல் இயல்பு. அட்(= நெருங்கு) என்பது அடு என்றாய பின், விகுதி முதலியன சேரும். கு, சு, முதலியன பகுதிக்குச் சாரியையாய் வரும். உதாரணம்:- பெருகு, அடங்கு, ஆடு, நீங்கு என்பனவாம். சில இடங்களில் மெல்லின ஙகரம் ஓசையின் பொருட்டு இடையிற் புகுதல் காண்க. படகு என்பது படர் என்பதனடியாய்ப்பிறந்து செல்வதற்குக் கருவி என்று பொருள் படும். கிழங்கு என்பது கீழ் (= தோண்டு) என்பதனடியாய்ப்பிறப்பது. இதில், ஙகரம் ஓசைப் பொருட்டு வந்தது. மெல்லின இடையெழுத்துக்கள் வருஞ் சொல்லில் வரும் வல்லின மெய்க்கேற்ப வல்லின மாகத்திரிதலுண்டு. மருந்து × பை = மருத்துப்பை என்பதிற்காண்க. உரிச்சொல்லாவதற்கு மெல்லினம் வல்லின மாதலும், வல்லினம் இரட்டித்தலுமுண்டு. உதாரணம் மாறு:—

இரண்டு > இரட்டைப்பிள்ளை
பாம்பு > பாம்புக் குஞ்சு
இரும்பு > இருப்புக்கை
குருடு > குருட்டுப் பையன்
கிணறு > கிணற்றுத்தவளை

தன்வினை பிறவினையாகவும் மெல்லினம் வல்லினமாகும். தமிழ்ப்பகரத்திற்குக் கன்னடத்தில் வகரம் வருதலுமுண்டு.

நிரப்பு, நிரம்பு—நிரவு (கன்னடம்)

இடைபெயர்த்துக்கெட்டு, நிரம்பு என்பது நிம்பு என தெலுங்கில் வருதலுண்டு. தமிழ் வல்லினத்திற்குத் தெலுங்கில் மெல்லினமும். ககரத்திற்கு சகரமும் வரும்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| சாய்ச்ந | சாய்ஞ்சு |
| பெருந | பெஞ்சு |

தமிழ் ரகரம தெலுங்கில் ணகரமாவதுண்டு. இரும்பு > இனுமு (தெலுங்கு) இனுப்பு உரிச்சொல் (தெலுங்கு)

கொம்பு—கொய் என்பதனடியாய்ப் பிறப்பது.
வேம்பு—வே(ய்) என்பதனடியாய்ப் பிறப்பது.
பாம்பு—பா(ய்) ,,

பகுதியின் இறுதிவல்லொற்று, பெயர்ச்சொல்லை உரிச்சொல்லாக்கவும், தன் வினையைப் பிறவினையாக்கவும், இறந்த காலமுணர்த்தற்பொருட்டும், வினையினின்று பெயர்ச்சொல் பிறத்தற்பொருட்டும் இரட்டித்தலுண்டு.

உதாரணம் வருமாறு:—

மாடு + கால் = மாட்டுக்கால்

ஓடு = ஓட்டு

தகு = தக்க

படு = பட்டு

எழுது = எழுத்து

ஆரிய மொழியில் பகுதியின் முதலசை இரட்டிக்கும். திராவிடத்தில் ஈற்றசை இரட்டிக்கும்.

விரி என்பதைச் செமிட்டிக்மொழியோடு ஒப்பிடும்போது இரண்டுமெய் சேர்ந்த வேர்ச்சொல்லாகத் தோன்றும். ரகரத்திற்கு லகர ளகரம் போலியாய் வருதலுஞ் சேர்ந்ததும் பார்க்க.

ப் + இ + ர் + இ = பிரி

ப் + இ + ள் + அ = பிள

ப் + ஆ + ல் = பால் (= பகு)

ஹீபுரு—பலஹ் = பகு

ப் + ஒ + ழ் = போழ்

பக் + இ + ர் = பகிர் (= பகு)

செமிட்டிக் மொழியில், பகுதியின் இரண்டாவது அசையை முதலசைக்குத் துணையசையாகக் கருதுவதுண்டு, முதலசையின் பொருளை பலவகையாக விகற்பித்துணர்த்துவது இரண்டாவது அசை என்பாருமுளர். அவ்வாறு தமிழில் வருதற்குகாரணம் வருமாறு:—

அட் = நெருங்கு என்பதனடியாய்ப்பிறந்த

அட் + உ = அடு, சமீபத்திருப்பது.

அட் + அ = அட + ர் = அடர் - நெருங்கியிருக்கும் மரமுதலியவற்றையுணர்த்துவது.

அடகு = அடங்கு, ஒன்றின்கீழிருப்பது.
அட் + இ = அடி = அழுத்தமாகப் பொருந்துவது.
அட் + ஐ = அடை = அழுத்தமில்லாமற் சேர்வது.
டகரத்திற்கு ணகரம் வருங்கால், அண் = நெருங்கு எனவரும். இதனடியாய் வரும் அணுகு, அணி, அணை, அணவு, அண்ணு, அண்ணன், அண்டு, அண்மு, ஆணி என்பன அடிப்படையான கருத்தின் விகற்பங்களை உணர்த்துதலை ஆய்ந்தறிக.

பல அசைகள் பகுதிக்குத் துணைசெய்வதற்கு வருவன. அவற்றை;

அர் — வள் + அர் = வளர்
சுட் + அர் = சுடர்
அம் + அர் = அமர்
இர் — துளிர், உகிர்
அழ் — புகழ், இகழ்
இழ் — மகிழ், அவிழ்
அறு — இடறு, கிணறு
இறு — ஞாயிறு, படிறு
அல் — சுழல், ஈரல்
இல் — வெயில், குயில்
அள் — துவள், திங்கள்
இள் — செதிள், மதிள்
உள் — உருள், இருள், பொருள், அருள்
என்பவற்றுள் காண்க.

இர் — இருட்டைக்குறிக்குங்கால், கருப்பை யுணர்த்தும். இருள், இரவு, இருப்பு என்பவற்றுட் கருநிறங் காண்க.

வேர்ச் சொல்லின் உயிரெழுத்து, திராவிட மொழி (சித்திய மொழிகளிற்)யிற் சாதாரணமாக மாறுவதில்லை. ஆரிய மொழிகளில் விகுதிக் கலப் பால் அதுமாறும்.

சில இடங்களில், ஓசையின் பொருட்டுப் பகு தியின் உயிர்திரியும்.

வர—வருவான்
தொகுப்பு> தோப்பு
நாங்கள்> நங்கள்
நீ> நின்

முதல் நீளுதல் தமிழிலும், வடமொழியிலு முண்டு. அது சித்தியமொழியிற்கிடையாது.

| தமிழ். | வடமொழி. |
|---|---|
| கெடு> கேடு | வச்—வாக் |
| படு> பாடு | ம்ரு—மாரகம் |
| பெறு> பேறு | |
| கொள்> கோள் | |
| மின்> மீன் | |
| சுடு> சூடு | |
| விடு> வீடு | |

முதனிலை குறுகுதலுந் தமிழிற் காணப்படும்.

வே—வெந்து, நோ—நொந்து, காண்—கண்டு வா—வந்து, சா—செத்து என்பன அவை.

வா என்பதற்கு வர என்றும் தா என்பதற்கு தர என்றும் தமிழில் பிறிதொரு வேராக வருதலுங் காண்க.

தெலுங்கில் வகரத்திற்கு ரகரம் வரும். அது, வா என்பது ரா என்பதாற்றெளியப்படும்.

வடமொழியிலுள்ள மாற்றங்கள் தமிழில் நிகழ்தல் வடமொழியைப் பார்த்து ஏற்பட்டன அல்ல. அவை வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான மூல மொழியின் தொடர்பு பற்றியாதல் தமிழர் மன வளர்ச்சி பற்றியாதல் ஏற்பட்டனவாகும்.

## பெயர்ச்சொல்.

திணை— தமிழில் திணைவேறுபாடு சித்திய மொழியிலுள்ள திணைப் பகுப்பை ஒருவாறு ஒத்திருப்பது. ஆரியத்திலும் செமிட்டிக்கிலும், திணை சொல்லைப் பொறுத்ததன்றிப் பொருளைப் பொறுத்ததன்று. சித்திய மொழியில் திணைகாட்டும் விகுதி செய்யுளுக்குச் சேர்க்கப்படுஞ் சொல்லே. பகுத்தறிவுடைய உயிர்களைக் குறிக்குஞ் சொல் உயர்திணை;

பிறவற்றைக் குறிக்குஞ்சொல் அஃறிணை யென்ற வேறுபாடு திராவிட மொழிகளுக்குச் சிறப்பாகவுள்ளது. இவற்றில், ஒருமையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் வேறுபாடு உண்டு; பன்மையில் இல்லை. உயர்திணைப் பன்மைக்கும் அஃறிணைப் பன்மைக்கும் வேறுபாடுண்டு. இருதிணைக்கும் பொதுவான சொற்களுண்டு. மலையாளத்தில், ஆண் பைதல் = ஆண்பிள்ளை. பெண்பைதல் = பெண் குழந்தை. தமிழில், பைதல், பையல் என்பன ஆண் பாலையேயுணர்த்துவன. தமிழ், கன்னடம், மலையாளம் என்பவற்றில் பெண்பாலொருமை தெளிவாக உண்டு. தெலுங்கிலும், காண்டு மொழியிலும், அஃறிணை குறிக்குஞ்சொல் பெண்பாலுக்கு வழங்கப்படும். தெலுங்கில் பெண்பாற் சொற்கள் சிலவேயுள்ளன. தோடர், கோண்டர் முதலியோர் எல்லாத்திணைக்கும் ஒரு வகையான சுட்டுப் பெயரே வழங்குவர். அதம் என்ற சொல்லைத் தூரத்திலுள்ள அவன், அவள், அது என்பவற்றைக்குறிக்க வழங்குவர். தம் என்ற சொல்லை சமீபத்திலுள்ள மூன்றையுங் குறிக்க வழங்குவர். இந்துஸ்தானியில் 'வஹ்' என்பதே அவன், அவள், அது என்பவற்றிற்குப் பொதுவாகும்.

எண்முறையைப் பார்க்குமிடத்து இருமைத் தமிழிலில்லை. தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மை யெனவும், உளப்பாடில் தன்மை எனவும்

இருவகையுண்டு. முதலில் திணை பால் விகுதிகள் சுட்டும்பெயர்களுக்குச் சேர்க்கப்பட்டுப்பின், சுட்டுப்பெயரோடு கூடிய விகுதிகள் பெயர்க்குச் சேர்க்கப்பட்டன.

அ + ன் = அன்

உதாரணம்:- மூப்பு + அன் = மூப்பன்

தமிழ் + அன் = தமிழன்

இவ்விகுதி ஓசை நயத்திற்காகச் சேர்த்தலுண்டு.

வில் + அன = வில்லன், வில் + இன் + அன் = வில்லினன், என்றும் வரும்.

ஆண் என்பது வினையிலிருந்து வரும் பெயர்க்குச்சேர்க்கப்படும்.

ஓது + ஆண் = ஓதுவான்

காப்பு + ஆண் = காப்பான்

அவன் என்பது ஆண் என மருவிற்றென்பதுமுண்டு. கன்னடத்தில் ஆண்பாலொருமை அனு, அம் என்பன. னகரத்திற்கு மகரம் வருதலும் னகரத்தின் பின் ஓசைக்காக உகரம் சேர்தலும் கன்னடத்திற்குரியது.

கு என்ற திராவிட மொழியில் ஆணு = மனிதன் ஆளு = மாது எனப்பொருள்படும்.

ணகரத்திற்கு னகரம் வருதலும், மொழிப் போக்கே.

ஆண், ஆன் என்றாதலும் ஆ குறுகுதலும் கு மொழியிலுண்டு.

தெலுங்கில் னகரத்திற்கு டகரம் வரும். ஆடு என்பது விகுதியாக வரும். விகுதிக்கு னகரம் வருதல் ஓசைக்காக

மகன் + து = மகந்து

பெண்பாலொருமை-அள். தெலுங்கில் அல் என்பது வினையிறுதியில் பெண் பாலைக்குறிக்கும். ளகரம் டகரமாதலுண்டு. ஆடு-என்பதே பெண் பால் விகுதியாயும் வரும். தெலுங்குப் பாட்டில் ஆலு என்பது பெண்ணைக் குறிக்கும்.

காக்கேசிய மொழி சிலவற்றில், னகர ளகரங்கள் ஆண்பால் பெண்பால் விகுதிகளாய் வருகின்றன.

இமென் = தகப்பன்
இவெள் = தாய்

காண்டு மொழியில், ளகரத்திற்கு ரகரம் வரும் ஆதலின் அர் விகுதி பெண்பாலுணர்த்தும்.

தெலுங்கில் அஃறிணை விகுதி பெண் பாலுணர்த்தும்.

மாலதி = பறைப்பெண்
சின்னதி = சிறுபெண்

தமிழில் ஒருத்தி, வண்ணாத்தி என்பவற்றில் அது வருதலுண்டு. தகரம் அஃறிணை விகுதி போல்வது இகரம்-பெண்பாலுணர்த்தும். வட மொழியிலும் இ-பெண்பால விகுதியே.

அஃறிணைவிகுதி — தகர ஒற்றாற் குறிக்கப் படும.

தமிழ் — அது, இது
தெலுங்கு — அதி, இதி
காண்டு — அத், இத்
லத்தீன் — இத்
சமஸ்கிருதம — தத்

ஆரியத்திலும, தகரம் அஃறிணை விகுதியாய் வரும். அகரம்-அஃறிணைப்பன்மை விகுதி.

எண் விகுதி பெறாத அஃறிணைப் பெயர்கள் தமிழிலுள்ளன. அதுபோலச் சித்திய மொழியில் அஃறிணைக்கு எண் விகுதி கிடையாது. மாடு வந்தது, மாடு வந்தன என்பதில் வினை விகுதியே பாலுணர்த்துவன. தெலுங்கில், எண் விகுதி அஃறிணைக்குச் சேர்த்தல் மரபு.

வேற்றுமை விகுதிகள், ஆரியத்தில ஒருமைக்கு வேறாகவும் பன்மைக்கு வேறாகவும உள்ளன. தமி

ழில் ஈரெண்ணுக்கும் ஒருதன்மையான வேற்றுமை யுருபுகளே உள்ளன. வடமொழியில் எண் விகுதிக் குமுன் வேற்றுமை விகுதி சேர்க்கப்படும். தமிழில் அதற்குப்பின் வேற்றுமையுருபுகள்சேரும். சித்திய மொழி இவ்வகையில் தமிழ்மொழிபோல்வது. ஆனல் விகுதிகள் வேறுபடும். திராவிட மொழிகளில் எண் விகுதி திணையுருபுடன் சேர்க்கப்படும். திணை யும் எண்ணும் ஒருங்கு காட்டும் விகுதிகள் பன்மை யிலுள்ளன. அவர்—உயர்திணைப்பன்மை. அவை-அஃறிணைப்பன்மை. உயர்திணைப்பன்மை விகுதி எல்லாத்திராவிட மொழிகளிலும் ஒத்திருப்பனவே.

உதாரணம்:—

தமிழ்-அர், ஆர், ஓர், இர்,
தெலுங்கு- அரு, ஆர, எரு, ரி, ரு.
மலையாளம்- பார்.
துளு — ஆர்.
காண்ட் - ஓர்.
பிராகுயி - { முன்னிலை- எரெ, உரெ. படர்க்கை- உர், அர்.

இதனல், அர், என்பது பலர்பால் படர்க்கை விகுதி எனத் தெளியப்படும். இர் என்பது ஈர் என்பதன் இறுக்கமாகும். ஈர், இருமையுணர்த் தும் விகுதியாய் முதலிலிருந்து, பின்னர்ப்பன்மை விகுதியாயிற்று. மார்விகுதி மர், எனவும் வர் என வுந் திரிவதுண்டு.

உதாரணம்:— என்மர், நால்வர், என்பது.

மங்கோலிய மொழிகளில் நர் பன்மைப் பகுதி. அது ஓர் எனமருவும். இளைஞர், என்பதில் அது காண்க. அர் விகுதி; ஞகரம் இடை நிலையெனவுங் கூறுவதுண்டு.

அகரம், பலவின் பால் விகுதியாகத் தமிழில் இருந்தாலும், பிற திராவிடமொழிகளிற் கள் விகுதியும் அதன் றிரிபும் பலவின் பால் குறிப்பன. தமிழில், கள்விகுதி—விகுதிமேல் விகுதியாய் உயர்திணைக்கு வருதல் போல. (உ-ம்:- அவர்கள்) தெலுங்கில் அஃறிணை லு விகுதி உயர்திணைக்குத் தனியாகவும் விகுதிமேல் விகுதியாயும் வரும். மகந்து (ஒருமை) மகலு (பன்மை) வாருலு. இரட்டிப்பான பன்மை.

தற்காலக் கன்னடத்தில், கலு என்ற விகுதியுள்ளது. துளுவில், லு விகுதி வழங்குகிறது.

| | | |
|---|---|---|
| தெலுங்கு-குலன் (ஒருமை) குலன்குலு | } | (பன்மை) |
| தமிழ் = குளம் = குளங்கள் | | |

அகரவிகுதி—சுட்டெழுத்தோடு சேர்ந்துவரும். அவை என்பதில் அகரம் சுட்டெழுத்து; வகரம் எழுத்துப்பேறு; அகரவிகுதி ஐகாரமாய்ப்பன்மை குறிப்பது.

மலையாளத்தில், அவ, இவ, என்பன பலவின் பால் விகுதிகளாகும். பிற என்பதில் அகரம் தனியே பன்மை யுணர்த்தும். அதன் ஒருமை சிறிது. தெலுங்கில், அவி, இவி, என்பன அஃறிணைப்பன்மை குறிப்பன. கன்னடத்தில் அவு, காண்டு மொழி யில், அவ், இவ், துளுவில் உகரம் வழங்கும். ஆரிய மொழிகளாய லத்தீன், கோதிக் என்பவைகளில் அக ரம் அஃறிணைப் பன்மைவிகுதி. வடமொழிவிகுதி, ஆணி.

## வேற்றுமை

வேற்றுமை யுருபுகள் ஆதியிற் பெயர்ச்சொல் லாயிருந்து மருவினவை. பின்னசைகளாகவே அவை வருதல் சித்திய மொழியமைப்பை ஒத்திருப்பது. தமிழில் உருபுகள் எத்தனை வகையுண்டோ அத் தனை வேற்றுமைகள் இருக்கவும், வடமொழியைப் பார்த்து இலக்கண நூலார் வேற்றுமை எட்டே கொண்டு அவற்றுட் பிறவற்றை அடக்கினர்.

அம் என்னும் விகுதி வினையிலிருந்து அஃறி ணைப் பெயர் வகுப்பது. அது எழுவா யுருபாகக் கொள்ளின், பிறவேற்றுமை உருபுகள் சேருங்காலை அது நிற்பதில்லை. உதாரணம்:— மரம்—முதல் வேற்றுமை. மரத்தை — இரண்டாம் வேற்றுமை. இதில், அம்கெட்டு, அத்துச்சாரியை சேருகிறது.

பழங்கன்னடத்தில், பன்மை விகுதிக்கு முன் மகரம் கெடும். மரம்—மரகள் (பன்மை). தற்காலக் கன்னடத்தில், மகரத்திற்குப் பதில் வகரம் வரும். மரவு = மரம். அம், அஃறிணை எழுவாயுருபுபோல் வழங்குவது.

மகரத்திற்குனகரம் போலி. கடம், கடன். ஏன்—ஏமி (தெலுங்கு). உரம், உரன். மரம், மரன். குளம், குளன். கன்னடத்தில், ஈறுகெடுதலுண்டு. நா =நான். தா =தான்.

தமிழில், இடப்பெயர்களில், முதல்வேற்றுமையில், உயிர் நீண்டும், பிறவேற்றுமைகளில், உயிர் குறுகியும் இருக்கும். யான், என், நாம், நம், நீ, நின், நீர், நும் எனவருதல் காண்க. அவ்வாறு கன்னடத்திலும், நான், நன்ன, நீ, நின்ன, தான், தன்ன என்பனவரும். தெலுங்கில், இரண்டாம் வேற்றுமையில் மட்டும் குறுக்கம் உண்டு.

பெரும்பான்மையும், முதல் வேற்றுமைக்கு உருபு இல்லாமையால், அதனோடு பிற வேற்றுமை யுருபுகள் சேர்க்கப்படும். விகுதிகலவாதே பெயர் தானே உரிச்சொற்போல நின்றும், இன், அத்து முதலிய சாரியைகலந்தும், ஆறும் வேற்றுமைப் பொருளையும், ஏழாம் வேற்றுமைப் பொருளையும், பெயரெச்சப் பொருளையும் உணர்த்தும். இன்சா

ரியை ஒருமையில், தெலுங்கில் நி, ந என்ற வடிவ டையும். பெயர்க்கும் வேற்றுமை புருபுக்கும் இடை யில் இன்சாரியை வருதலுண்டு. அன்சாரியை வருத லுமுண்டு. உதாரணம்:—

ஊர்மரம் = ஊரிலுள்ள மரம், ஊரானுடைய மரம்,
மரத்தின்கிளை = மரத்தினது கிளை.
குளத்துமீன் = குளத்தினது மீன்.

அதனால், இதனால் என்பதில் அன்சாரியை யாய்வரும் இன், இல் என்பன ஆதியில் இடமு ணர்த்தின.

தெலுங்கில், இல் என்பது லே, உள், லோ என்ற வடிவடையுபட.

கன்னடத்தில் இன் வருதலுண்டு. குரு—குரு வின். அத், அர் என்பனவும் சாரியையாய் வேற்று மையுருபுக்கு முன்வரும். அர, இத, இன என்பன ஆறும் வேற்றுமை உருபாம். அகரமே ஆறும வேற் றுமையைக்குறிப்பதால் பிற அசைகளாகும். அது என்பது வேற்றுமையுருபுக்கும் பெயருக்கும் இடை யில் சாரியையாய் வரும். அதனை எழுவாயுருபு என்பதுமுண்டு. அத்தகைய சொல்லுருபுகள் பல வுள. அவை உண்மையில் எழுவாயுருபல்ல. ஏனெ னில், எழுவாய் குறிப்பதற்கு அவை சேர்க்க வேண் டிய கட்டாயமில்லை. அவ்வாறு டி, அல்லது தி,

தெலுங்கில் எழுவாய்க்குச் சொல்லுருபாக வரும். வாகிலி > வாகிடி = வாசல். நுதரு = நுதடி = நெற்றி = நுதல் (தமிழ்) தொல்லி + தி > தொண்டி-தொன்று (தமிழ்) வாயு > வாதி (= வாய்)

கன்னடத்தில் "அத்" என்பது தமிழில் அத்துச்சாரியை போல் வழங்கும். சாவரத்தொந்து (கன்னடம்). = ஆயிரத்தொன்று (தமிழ்).

வேற்றுமை விகுதி சேருமுன், தமிழில் நிலைமொழியீறு இரட்டித்தலும், இரட்டித்த அளவில் உருபுகலவாமல் வேற்றுமையுணர்த்தலுமுண்டு.

ஆடு + கால் = ஆட்டுக்கால். சோறு + கை = சோற்றுக்கை.

தெலுங்கில் றகரத்திற்கு டகரம் வருதலும், டகரம் இரட்டித்தலுமுண்டு.

ஏறு = நதி, எடி = நதியினுடைய
நாடு = நாட்டு = நாட்டினுடைய
அற்று = கழுத்து, அர்டி = கழுத்தின்

இகரம் தெலுங்கில் ஆறும் வேற்றுமையுணர்த்தும். உதாரணம்:—

வாரி = அவர்களுடைய
காலி = காலினுடைய
தேரி = தேரினுடைய

வருமொழியின் உயிரினமாக இகரம் உகரமாதலுமுண்டு. தமிழிலும் உகரச்சாரியைவரும்.
அவன் + கு = அவனுக்கு

அவர் = வாரு
அவரது = வாரிதி } (தெலுங்கு)

இரண்டாம்வேற்றுமை.

ஆரிய மொழியில் அஃறிணைப் பெயர்களில் எழுவாய்க்கும் இரண்டாம் வேற்றுமைக்கும் வேறுபாடான உருபில்லை. அவ்வாறு சில இடங்களில் பண்புப்பெயர்களில், பெயர் விகுதியே இரண்டாம் வேற்றுமையுருபாய் நிற்பதுண்டு. ஆரியத்தில் இரண்டாம்வேற்றுமையுருபு எழுவாய்க்குப் பயன்படாது. சித்தியமொழியில் எழுவாயே இரண்டாம் வேற்றுமை குறிப்பதாயிற்று.

இரண்டாம் வேற்றுமைக்குத் தமிழில் ஐயுருபு வழங்குகிறது. தெலுங்கு, குஜராத்தி, ஹிந்தி, பிராகுயி முதலிய மொழிகளிலும் எகரமும் சித்திய மொழியில் மகரமும் அவ்வேற்றுமையைக்குறிக்கும்.

மூன்றாம்வேற்றுமை.

தெலுங்கில், தி அல்லது த உருபாகும். சேத = கையினால். சேத அல்லது சே என்பதும் உருபாகவரும். பழங்கன்னடத்தில் இட், உருபு வரும். தமிழில் இன், மூன்றாம் வேற்றுமைப்

பொருளுமுணர்த்தும். தமிழிலும் மலையாளத்திலும் ஆல், ஆன் என்பன உருபுகள். காண்டு மொழியில் ஆல் ஐந்தாம் வேற்றுமைக்கு வரும். சித்திய மொழியாகிய மாகியார் மொழியில் அல் என்பதும் (மூன்றும் வேற்றுமை ஒருமை) எல் என்பதும் (மூன்றும் வேற்றுமைப்பன்மை) உருபுகளாக வரும். தமிழில் கொண்டு என்பது உருபாக வருதலுண்டு. மூன்றும் வேற்றுமை கருவிப்பொருளுணர்த்துதல் ஆரியத்திலுண்டு. அது உடன் சேர்தலாகிய ஒட்டுப் பொருளுணர்த்துதல் ஆரியத்திலில்லை; சித்தியத்திலுண்டு. தமிழில் உடனிகழ்ச்சியுணர்த்தும் உருபு, ஒடு, ஓடு என்பன. ஒடு என்பது உடு என்றும் அன்சாரியை சேர்ந்து உடன் என நிற்கும். இதனை மூன்றும் வேற்றுமைப் பகுதியாகக்கருதாது தனி வேற்றுமையாகக் கருதவேண்டுமென்பது ஆராய்ச்சியாளர் கருத்து. கன்னடத்தில் இதன் உருபு ஒடனே என்பது. தொடு, தொடர் என்பனவும் அப்பொருளே. தெலுங்கில் தொடு என்பது அவ்வுருபே.

நான்காம்வேற்றுமை.

வட இந்திய உள் நாட்டு மொழிகளில் (North Indian Vernaculars) நான்காம் வேற்றுமை உருபு இரண்டாம் வேற்றுமையாகவும் வரும். ஆனால் காண்டு மொழியில் அது இல்லாமைக்குக்

காரணம், அது திராவிட மொழியாயிருப்பதே. தமிழில் குவ்வுருபும், தெலுங்கில் கி உருபும், கன்னடத்தில் கே உருபும், துளுவில் கு, க் என்பனவும், வங்காளத்தில் கே, சிந்தில் ஆய்தக்கே, ஹிந்தியில் கோ, துருக்கியில் கெ, கா, மலையாளத்தில் இன், நு, உ என்னும் உருபுகள் நான்காம் வேற்றுமையைக் குறிப்பன.

ஐந்தாம்வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமைக்கும் எழாம் வேற்றுமைக்கும் உருபுகள் ஒத்துநிற்பன. உருபொடு சேர்க்கப்படும் ஒருவினைச்சொல்லான் ஐந்தாம் வேற்றுமைப் பொருளுணர்த்தலுமுண்டு. ஐந்தாம் வேற்றுமைப் பொருள் நீக்கப் பொருளாய் இடப்பொருளுணர்த்தும் ஏழாம் வேற்றுமையின் வேறாயினும், முன்னதற்கு பின்னதின் வேறான தனியுருபுகள் இருப்பதாகத்தெரியவில்லை. திராவிடத்தில் இன், இல் என்பன உருபாக வருதல் போல ஆரியத்தில் இன் உருபாகவருதலுண்டு. நின்று, இருந்து என்பன தமிழில் உலகவழக்கில் உருபாய் வரும். கன்னடத்தில் அது, இம் உருபாக வரும். தெலுங்கில், தமிழ் இல், இன்னுக வரும். இண்டி=வீடு

ஆறாம்வேற்றுமை.

தமிழிலே இடப்பெயர்களுக்கு ஆறாம் வேற்றுமை, முதல் குறுகுவதனாலே காட்டப்படுகிறது.

யான் என்பது யன் எனக்குறுகி பின் யென் என்றாய், யகர எகரம் மொழிக்கு முதலில் வாராமையால் என் என எழுதப்பட்டதுபோலும். நீ நின், நாம், நம் தாம், தம் என்பனவும் காண்க. நீங்கள் என்பது நிங்கள் என்றாய்: அது நுங்கள் என்று திரிந்திருத்தல் கூடும். நும் என்பதனோடு கள் விகுதி சேர்ந்து நுங்கள் என்றாயிற்றென்றலுமுண்டு. நீ என்பது நி என பிறமொழிகளில் குறுகியுளளது. இடப்பெயரினமைந்த எச்சங்களே ஆறாம் வேற்றுமைப்பொருள் குறிப்பனவாம். பெயர்ச் சொல் பெயரெச்சமாகும்போது முதல் குறுகுதல் ஆறு+பத்து=அறுபது, எழு+பத்து=எழுபது என்பவற்றிற்காண்க. அஃறிணைப்பெயர்களில், தமிழில் அத்து, அற்று என்பனவும், தெலுங்கில், தி, டி, என்பனவும் ஆறாம் வேற்றுமைப் பொருள் குறிக்கும் சொல்லுருபுகளாய் அல்லது சாரியைகளாய்ப் பெயரைப்பெயரெச்சமாக்கும் தன்மையன. முடியும் சொல் வினையாயிருக்குமாயின் "அத்து" என்பது ஏழாம் வேற்றுமைப் பொருள் குறிக்கும்.

தமிழில் அது என்பது ஆறாம் வேற்றுமை உருபாம். அது தெலுங்கில் அதி என்றாகும். கன்னடத்தில் அத, அர என்பனவும் அதுவே. தமிழில் பன்மைக்கு அகரம் உருபாக வரும். அது என்பது முதலில் பொருளுடைமை உணர்த்தும் பெயர்ச் சொல்லின் விகுதியாக இருந்து பின் ஆறாம் வேற்று

மை உருபாயிற்றென்ப. உ-ம்:— என்பது=என்னுடைய பொருள் என்பதாம். இக்காரணம் பற்றியே அது வென்பது ஒருமை உருபாகக் கருதப்படுகிறது. தெலுங்கில் நாதி என்பது என்னுடையது என்னும் பொருளுணர்த்தும், பன்மையில் இ, உடைமைப் பெயர் விகுதியாம் உ-ம்:—

வாரிதி-அவர்களுடையது. (தெலுங்கு).

சாரியையின் பின் இவ்வுருபு சேர்தல் பெரும்பான்மையாம். உ-ம்:— மரத்தினது கிளை. தமிழில் இன் என்பதும், தெலுங்கில் னி என்பதும் ஆறும் வேற்றுமைப் பொருளில் வருவனவாம். அவை ஏழாம் வேற்றுமையுருபாதலின் ஆறும் வேற்றுமையைக் குறிக்குமிடத்துச் சாரியையாகக் கருதப்படும்.

கு (KU) என்ற திராவிடமொழியில் னி என்பதும், நி என்பதும், மங்கோலிய, மஞ்சு மொழிகளில் உடைமை உருபாக வருகிறது. உயிரெழுத்திற்குப்பின் அது "இன்" என்றாகும். பிராகுயி, காண்டு மொழிகளில் ஞ என்பதும் ஆறும் வேற்றுமையுருபாக வரும். தமிழில் இன் உருபு பெயரெச்ச விகுதியாகவும் வரும். ஆறும் வேற்றுமைப்பன்மையுருபாகிய அ, கன்னடத்தில் அத், அர் என்பவற்றோடு சேர்ந்து பொதுவுருபாக வழங்குகிறது.

உ-ம்:—

அதர = அதனுடைய
நம்ம = நம்முடைய

என்பவை காண்க.

ஆங்கிலோ சாக்சனில் (Anglo Saxon) அகரம், ஆறும் வேற்றுமைப்பன்மையுருபு ஆகும். அஸ், என்பது ஆறும் வேற்றுமை ஒருமையுருபாம். மலையாளத்தில் இன்ற, என்பது ஆறும் வேற்றுமை யுருபாகவரும். என்ற புத்தகம் = என்னுடைய புத்தகம். (மலையாளம்) என்பதில் என் + து > என்த > என்ற எனக்கொள்வதுண்டு. தமிழில் "உடைய" என்பதும் தெலுங்கில் "யோக" என்பதும் துணை யுருபுகளாக வருவனவாம். மலையாளத்தில் உடெ, டெ என்பன துணையுருபாம். அம் என்பது எச்ச விகுதியாய் உடைமைப் பொருள் உணர்த்தும். உ-ம்:—

ஆலம்பூ ஆற்றங்கரை. என்பனவாம். தொடர்களுக்குள் அகரவிகுதி வழங்குகிறது. தெலு ங்கில் பன்மையில் லு > லகரமாகும். சித்திய மொழி யில் அகரம் ஆறும் வேற்றுமைக்கு வருவதில்லை. ஆரியத்தில் அது வருவதுண்டு.

## ஏழாம்வேற்றுமை.

ஏழாம்வேற்றுமை இடப்பொருள் குறிப்பது. மலையாளத்தில், கால் என்பது உருபாகவரும். அது கல் எனக்குறுகுதலுண்டு. தமிழில், இல் = வீடு.

உள் = உள்ளிடம். உள் என்பது தெலுங்கில் ஓல் என்றும். அது, லோ என்று நீண்டது. கன்னடத்தில், ஒல் என்பது ஒல் எனத்திரிந்து நின்றது. தமிழில் "இன்" உருபாதல் போலத் தெலுங்கில் ன, னி என்பன உருபாய்வரும். இன் > னி > ன.

கன்னடத்தில் அன்ட, இன்ட என்பன ஒப்புப் பொருளில் வருவன. தமிழில் இலும், இனும் என்பன ஒப்புப்பொருளில் வரும் உ-ம்:—

அவனிலும் } = இவன் நல்லன்
அவனினும் }

தெலுங்கில் "லோனு" என்பது இப்பொருளில் வழங்குகிறது. துளுவில் து, அல்லது த், டு அல்லது ட் இடப்பொருளில் வழங்கும்.

விளிவேற்றுமை அல்லது எட்டாம்வேற்றுமை.

இதற்குத் திராவிடமொழியிலுருபில்லை. ஏகாரம், உறுதிப்பொருளில் வருவது. ஆ என்பது உருபு போல் வரும் உ-ம்:—

முதல்வன் > முதல்வா
தங்கை > தங்காய்

டாக்டர் கால்டுவெல் ஈர் என்பது நீர் என்பதின் முதல் மெய் கெட்டதென்பர். காள், சொல்லுருபாம். பாவிகாள் என்பதிற் அது காண்க. சேய்மை

யைக்குறிக்க இகரம் ஈகாரமாகும். உ-ம்:— தோழி > தோழீ என்பதாம். கன்னடத்தில் ஆ, அல்லது எ, ஏ சேர்க்கப்படுகிறது. எழுவாயின் ஈற்றுயிர் நீளும். ஈர் என்பதனோடு அகரம் சேர்ந்து இர, இரா என்பனவரும்.

இரண்டு மூன்று வேற்றுமை யுருபுகள் ஒன்று சேர்தல் சித்திய மொழியிலிருப்பதுபோல் திராவிடத்திலுமுண்டு. வீட்டுக்குள், என்பதில் நான்கனுருபும், ஏழனுருபும் சேர்ந்துள்ளன. மனையில் நின்று, என்பதில் ஏழனுருபும் ஐந்தனுருபும் கலந்துள்ளன. ஆனால் சித்தியமொழியில், இடப்பெயரினமைந்த உடைமைப் பெயர், முடியுஞ் சொல்லிற்குப்பின் வைக்கப்படுதலுண்டு.

உ-ம்:— உர் = எஜமான
உர் —அம் = என் எஜமான்
உர் —அய்ம் = என் எஜமான்கள்
உர் —அத் = உன் எஜமான்
உர் —அய்த் = உன் எஜமான்கள்

இனி, இடப்பெயர், சுட்டுப்பெயர்களை ஆராய்வாம். ஆரியத்தில் தன்மைப்பெயர் எழுவாய்க்கும், பிறவேற்றுமையுருபுகள் சார்தற்குரிய தன்மைப் பெயர் வடிவுக்கும் தொடர்பு விளங்குமாறில்லை. ஆனால் திராவிடத்தில் அத்தொடர்பு நன்கு விளங்கும். வினைமுடிவிற்கு ஒத்த பெயர் வடிவே வழ

வாய் வடிவெனவும், வினைமுடிபுக்கு ஒவ்வாத எழு வாய் வடிவம், பின் ஏற்பட்டதென்றும், கொள்ளு தல் தவறாகாது. ஒருமைக்கும் பன்மைக்கும் அடிப் படையாவது இடப்பெயரொன்றே. யான்—எழு வாய். என்—உருபுகள் சேர்க்கும் பகுதி. என் என்பது ஏன், ஏம், ஓம் என்பன வாகத்திரியும். கன்னடம் நூல் வழக்கில் தன்மை யெழுவாய், ஆன், யான், ஆம் என்பது. உலகவழக்கில் நானு, எனு, ஏனு, ஏனே என்பன வழங்கும். நூல் வழக்கில் என் என்பது வழங்குகிறது. கன்னடப்பன்மை:—

உலகவழக்கில்—நாவு, நாம்
நூல் வழக்கில்—ஆம், ஆவு, அம்
வினைமுடிபு—எவு, ஏவு, ஏவெ என்பன வாம்.

எவு என்பது ஏம் அடியாகப் பிறந்தது.

தெலுங்கு— நேனு, நே, அல்லது நா இரண் டாம் வேற்றுமை. நானு வினைமுடிபு. னு அல் லது னி பன்மை. நேமு, மனமு என்பன உலக வழக்கு. ஏமு, நூல் வழக்கு. உருபுகள் சேர்ப்பதற் குரிய பகுதி மா, மம். என்பனவாம்.

துளுவில் யான் என்பது உருபுப் பகுதியாம். யென், என்பது வினைமுடிபாம். அதில் எகரம் அக ரம் போல் உச்சரிக்கப்படுகிறது.

தோடமொழியில் ஆன் என்பது உருபுப்பகுதி யாம். எது, என்பது வினை முடிபாம். எது, எனி, இனி என்பன உதாரணங்களாம். கோண்டு மொழியில் ஆநே, என்பதும், காண்டு மொழியில் அன்ஞ, என்பதும் உருபுப்பகுதிகளாகும். பிராகுயில் உருபுப்பகுதி, கான் என்பதாம்.

நான், யான் என்னும் இரு சொற்களில் எது முந்தியது என்று ஆயுமிடத்து டாக்டர் குன்டர்ட் யான், என்பதே முற்பட்டதென்பர். டாக்டர் போப் ஆன், என்பது முற்பட்டதென்பர். யாவர்> யார்> ஆர் என்பதை டாக்டர் குன்டர்ட் எடுத்துக் காட்டுவர். தமிழிலும், மலையாளத்திலும், யகரம் நகரமாகத் திரிதலுண்டு. நான் என்பதும் யான் என்பதைப்போலப்பழமையானதே. துளுவில் தன் மைப்பன்மைக்கு நாம் என்பதும், தெலுங்கில் நேமு, மேமு என்பதும் வழங்கும்.

நீ என்பதில் நகரம் வேர்ச்சொல்லின் பகுதியா மாயினும், துளுவில் ஈ என்பதே உள்ளது. அதனால், நகரம் வேர்ப்பகுதி அன்றென்று எண்ணுவாருமுளர். உன் என்பதில் நகரமில்லை; நும் உம் என்றாயிற்று ஆதலின் தன்மையில் அகரமே முக்கிய வேர்ப்பகுதி யென்று தெரிகிறது. நான் என்றதில், ஈற்று னகரம் வேர்ப்பகுதியாகாது. ஏனெனில் பன்மையில் னக ரம் போய் மகரம் வருதல் தெளிவு. நான், நாம், நீ, நீம், தான், தாம் என்பவற்றிற்காண்க.

பிராகுயி மொழியில் தன் என்பது தென் என்று வழங்குகிறது. தன்மைக்கு அகரமும், முன்னிலைக்கு இகரமும் அம்மொழியின் வேர்ப் பகுதிகளாம். ஆனால் தூரப்பொருளைக்காட்டும் அகரம், தன்மை இடப்பெயராதல் எப்படி? சித்திய மொழியில் ம என்பதன் அடியாய், தன்மைப்பெயர் கள் அமைந்துள்ளன.

முன்னிலை.

நீ என்பதனோடு னகரஞ்சேர்ந்து நீன் என்றாய் முதல் குறுகி நின் எனநின்று உருபுப்பகுதியா யிற்று. பன்மைக்கு உம், அல்லது-ம்-என்பது சேர் ந்து நீம், நும் என்பனவரும். விகுதிமேல் விகுதி சேர்ந்து நீங்கள், நுங்கள் என்பன உண்டாகும். நுங்கள் என்பதில் நகரங்கெட்டு உங்கள் என்பதா யிற்று. தெலுங்கில் மு, என்பது மறியாதை யொருமை. பன்மை விகுதி—ஈர், இர் என்பது. பிராகுயி மொழியில்-நீ- முன்னிலைப்பெயர். உரு புப்பகுதி-நா. பன்மை-நும். வினைமுடிபு-ரி. துளுவில் ஒருமை-நீ. பன்மை-ஈர். காண்டுவில் ஒருமை- இம்மா. பன்மை-இம்மிட். ஒருமை உருபுப்பகுதி-நி. பன்மையுருபுப்பகுதி-நா. மலையாளத்தில் உருபுப் பகுதி-பின். பன்மை-நின்னல். பாட்டில் உருபுப் பகுதி-நிம். கன்னடம் ஒருமை-நீனு,> நீன். உரு புப்பகுதி-நின். வினைமுடிபு-ஈ, இ, இயெ, எ, அய்

என்பன. கு மொழியில் ஒருமை-ஈனு. பன்மை-ஈரு. வினைமுடிபு-இ. இராஜமகால் மொழி ஒருமை-நின். பன்மை-நின. தெலுங்கு ஒருமை-நீவு. பன்மை-மீரு. உருபுப்பகுதி-மீ. வினைமுடிபு-ஈரு. இவற்றில் யான் என்பதன் தொடர்பு காணப்படுமாறில்லை. னகரவீறு-ஒருமை. ரகரம் அல்லது மகரம் பன்மையீறு என்பனவே துலங்கும். பேஹிஸ்டேன் கற்பலகையில் நி-ஒருமை. மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள பார்னு மொழியிலும் நி என்பது வழங்குகிறது.

உகரம் இகரமாதல் உலகவழக்கிற் காணப்படும். (உ-ம்):— புலி > பிலி. முன் > பின்.

சீன மொழியில் முன்னிலை நி, அல்லது நு. ஆரியமொழியில் து, அல்லது யு. சித்திய மொழியில் சி. மாகியார் மொழியில் தே. துருக்கி மொழி சின்-ஒருமை. சிஸ்-பன்மை. பாலியில் தே > நே. தா > நா. ஆஸ்திரேலிய மொழியில் முன்னிலைப்பெயர்-நின்ன என்பது. இவற்றால் முன்னிலைப் பெயரில் பெரும்பான்மை இகரமும், சிறுபான்மை உகரமும் முக்கிய உயிர் என்று தெரிகிறது.

படர்க்கையிடப்பெயர்-சுட்டுப்பெயர்களேயாம். தன்னைக் குறிக்கும் இடப்பெயர் தான் என்பதாகும். அதன் உருபுப்பகுதியாகிய தன், தம் என்பதனடியாகப் பலசொற்கள் பிறந்துள்ளன. (உ-ம்):— தன்மை, தனம், தம் > அப்பன் = தகப்பன், தந்தை,

தமையன், தமக்கை, தம்பி, தங்கை என்பனவாம். தாய்=த+ஆய். தன் என்பதில் னகரங்கெட்டு நின்றது. ஆரிய மொழில், தத் என்ற சுட்டுப் பெயர், இது போல்வது.

இடப்பெயர், சுட்டுப்பெயர்களுக்கு மகரவீறு அல்லது ரகரவீறு பன்மை விகுதியாக நூல்களில் வருகின்றது. அஃறிணைப் பெயர்களுக்குரிய கள் விகுதி உலகவழக்கில் விகுதிமேல் விகுதியாக வருகின்றது. தெலுங்கில் முதலில் நிற்கும நகரம் கெட்டு ஓசை நயத்தியற்காக மகரமாகிறது.

சுட்டெழுத்துக்களாகிய அகர இகரத்தோடு, ரகரங்கலந்து, அர், இர் என்பன பன்மை விகுதிகளாயின. நீயிர், என்பது முதலில் நீங்களிருவரும் என்ற கருத்தைக் குறித்திருந்துபின், முன்னிலைப் பன்மை குறிக்க வழங்கியிருத்தல் கூடும். உம், என்பது கூட்டமுணர்த்தும் இடைச் சொல்லாகும். அது பன்மையுணர்த்தப் பயன்பட்டு, பின்னர் மகரம் மாத்திரமே பன்மை விகுதியாய் வந்திருத்தல் கூடும். எவனும், எங்கும், எல்லாரும், என்பவற்றில் உம் பன்மைப்பொருளில் வந்தமை காண்க. மகரம், னகரமாய் பிராகுயி மொழியில் பன்மையைக் குறிக்கும். ஆஸ்டெயிக் மொழியில் உம் பன்மை தெரிவிக்கிறது. சித்திய குடும்பத்தில் சொல்லின் கடைசியில் வரும் உயிரெழுத்தின் திரிபால் பன்மை

யுணர்த்தப்படுகிறது. மஞ்சு மொழியில் பி=நான். பெ=நாம். மாகியார் மொழியில் தெ=நீ. தி=நீங்கள். பின்னிஷில் ம=நான். மெ=நாம். கிரீக்கில், மகரம் தன்மை முன்னிலைப்பன்மை குறிக்கிறது. மராத்தி, குஜராத்தி மொழிகளில் உளப்பாட்டுத் தன்மையும், உளப்படாத்தன்மையுமிருத்தல், திராவிடத்தொடர்பு பற்றியதாகும். சித்திய குடும்பத்தில் இவ்வேறுபாடுண்டு. ஆரியத்திலில்லை. மஞ்சுவில் பெ=உளப்பாட்டுத்தன்மை. மூ=உளப்படாத்தன்மை. சீனத்தில் ட்ஸாமென்=உளப்பாடு. வோமென்=உளப்படாத்தன்மை. பாலினிஷியன், ஆஸ்திரேலியன் மொழிகளிலும் இவ்வேறுபாடு காணப்படும்.

சுட்டுப்பெயர் வினப்பெயர் இவற்றின் பகுதியடிகளாகப் பிறந்துள்ள சொற்கள் சிறப்பாகத் தமிழிற் காணப்படுவது போலப் பிற எந்த மொழியிலுங் காண்பதரிது. அகரம் தூரத்திலிருப்பதையும், இகரம் சமீபத்திலிருப்பதையும், உகரம் இரண்டிற்கும் நடுவிலிருப்பதையும் எகரம் வினவையும் குறிப்பதுடன் அவற்றினடியாக எல்லாத்திணையும் பாலுங்குறிக்கும் பெயர்கள் அமைந்திருத்தல் பாராட்டத்தக்கதென டாக்டர் கால்டுவேல் கூறுகிறார்.

இதன் தாக்கு புதுப்பாரசீகமொழியிற்காணப் படும். பிற ஆரிய மொழிகளிலில்லை.

அவன், இவன், உவன், எவன்.
அவள், இவள், உவள், எவள்.
அவர், இவர், உவர், எவர்.
அது, இது, உது, எது.
அவை, இவை, உவை, எவை,

இச்சுட்டுப் பெயர் மூலங்கள் ஆரிய மொழியினடிப்படைகளிற் காணப்படுவதால், திராவிடத்தில் அதற்கும் ஆரியத்திற்கும் அடிப்படையான சுட்டுப் பெயர்கள் செவ்விதின் விரிந்து வளர்ந்துள்ளன என்பது ஊகிக்கற்பாலது.

வினைப் பெயராகிய யா கன்னடத்திலுமுண்டு. யாவே எகரமாயிற்றென்பதுமுண்டு. யா என்பது துளுவில் தா ஆயிற்று. யாவினடியாக வருடப் பெயர் ஏற்பட்டுள்ளது.

தமிழில், யாண்டு = வருடம்
தெலுங்கில், ஏடு, ஏடி = வருடம்

துளுவில், ஙகரம் உட்புகுந்து இது என்பது இந்து, உந்து என நிற்பது காண்க. இவர் > இமர் > மேர். இவள் > இமள் > மோள் = மோகிலு (= பன்மை) எனவும் வரும்.

தோடா் மொழியில் படர்க்கைப் பன்மைக்கும் ஒருமைக்கும் ஒரு சொல்லே வழங்குகிறது.

டைமொழியில் அதம்=அது. இதம்=இது என்று வருதலை ஒப்பிடுக.

சுட்டுப் பெயர் வினாப்பெயரினின்று குணப் பெயர் தமிழில் ஏற்பட்டுள்ள தன்மை, இன்மை, அம்மை, உம்மை, எம்மை, அது, இது என்பவற் ரோடு எச்சவிகுதியாகிய அகரஞ் சேர்வதுடன், நக ரமெய் உட்புகுந்து அந்த, இந்த என்னுஞ் சொற் கள் உண்டாயின.

உம், என்னும் இடைச்சொல், உகரச்சுட்டடி யாய்ப்பிறந்திருக்கலாம். கன்னடத்தில், அம் என் பது சுட்டாயும் அதற்குப் பதிலாக உம் என்பதும் வழங்குகிறது. துளுவில், ஏகாரவினா ஓகாரமாய் ஓலு என்பது எங்கே என்ற பொருளில் வழங்குகி றது. இதுபோல, அதுபோல, எதுபோல என்னும் பொருளில் தெலுங்கில், இட்டி, அட்டி, எட்டி என் பனவும், இவ்வளவு, அவ்வளவு, எவ்வளவு என்னும் பொருளில் இனிது, அனிது, எனிது, எனக் கன்ன டத்திலும் சொற்கள் உண்டாயிருத்தல் காண்க. இல், அல், எல் என்பன கன்னடத்தில் இடைச் சொல்லாக வழங்கும்.

வினை தழுவுசொல் அல்லது இடைச்சொல் என்பன திராவிடத்தில், பெயராக அல்லது வினையாக வருவதுடன், நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை உருபுகளுடன் கலந்துவரும். சுட்டுப் பெயர் வினைப்பெயருடன் நான்காம் வேற்றுமையுருபு கலந்து, மெல்லோசை நயம்பெற்று, அங்கு, இங்கு, எங்கு எனவரும். கண்டு மொழியில், இகு, என்பதும், வட மொழியில் இக, என்பதும் இங்கே என்ற பொருளில் வருதல் காண்க. துளுவில், ககரம் சகரமாய் அஞ்ச, இஞ்ச, எஞ்ச, எனவரும். தமிழில் ஆண்டு, ஈண்டு, யாண்டு, என்பனவும். தெலுங்கில், அத, இத, எத, என்பனவும், துளுவில் ஆட, ஈட, ஏட என்பனவும் ஒரு பொருளன.

கன்னடத்தில் அல்லி, இல்லி, எல்லி என்பன துளுவில் லகரம் ளகரமாய் அவளு, மூளு, ஓளு என்பனவும் ஒருபொருள் குறிப்பன, பொழுதைக் குறிக்கத் தமிழில் தகரவீற்று மெய்கலந்து அன்று, இன்று, என்று என்பனவரும். தெலுங்கில் அந்து, இந்து, எந்து என்பன இடங்குறிப்பன. இவற்றின் விரிவை டாக்டர் கால்டுவெல் நூலிற்காண்க.

## எண்கள்.

ஒன்று

எண்கள் பெயராகவும் பெயரெச்சமாகவும் வருவதுடன், வினைதழுவு சொல்லாகவும் வரும்.

ஒன்று என்பது ஒண்ணு எனமருவி தெலுங்குதவிர எல்லாக்கிளை மொழிகளிலும் வழங்குகிறது. ஒக்க என்பது தெலுங்கில் வழங்குகிறது. ஒரு என்பது பெயரெச்ச வடிவம். துளுவில் ஒருத்றி என்பதற்குப்பதிலாக ஓரி என்பது வழங்குகிறது. ஓரா = ஒருதரம் (துளு) கு மொழியில் ரா என்பது முதல் எண்ணைக் குறிக்கும். பேஹிஸ்டூன் கற்பலகையில், ரா என்பது வழங்குகிறது. கன்னடத்தில் ஒருவன் என்பது ஒப்பனு என்றும் ஒருவள் என்பது ஒப்பளு எனவும் வழங்குகிறது. மூன்று என்பது மூரு என்பதுபோல ஒன்று என்பது ஒறு > ஒரு என்றாயிற்று. உரிச்சொல்லாக வரும்போது, ஒறு என்பது இரட்டித்து ஒற்றை என்றாகும். கன்று என்பது கன்னடத்தில் கரு என்றாயிருத்தல் காண்க. னகரத்திற்கு றகரம் வருதல் பின், பிறகு என்பவற்றில் காண்க. றகரத்திற்கு டகரம் வருதல் இராஜமகால் மொழியில்—ஓர்ட் என்பதும் தெலுங்கில்-ஒண்டு, ஒன்டி என்பதும் ஒருமையைக் குறிக்கும். சாமாயெடிக் மொழியில் ஓக்கூர் என்பது முதல் எண்ணை உணர்த்துகிறது.

இரண்டு

| | |
|---|---|
| பிராகுயி | இரட், இரட்டு, இரண்டு. |
| கன்னடத்தில் | எரடு. |
| தெலுங்கு | ரெண்டு. |
| தமிழ் | இருவர்-தெங்கு-இதரு-இபரு. |

இர் > ஈர். இரட்டை.

ஈர் என்பது பிளத்தல் என்பதைக் குறிப்பது. அது, இர் என்றாயிற்றென்ப. அது தெலுங்கில் ரே என்றாயிற்றென்ப.

மூன்று

கன்னடம் மூரு. தெலுங்கில் மூடு. துளு வில் மூயி. பிராகுயி முசிட் இவையெல்லாவற்றிற் கும் வேர், மு என்பதேயாகும். முந்நூறு என்பதில் அவ்வேர் உளதாதல் காண்க. முத்தமிழ், முப் பழம் என்பதிலும் மு-என்பது மூன்றையுணர்த்தும். சித்திய குடும்பத்தில், மு > மூர். மு, என்பது மேல் என்ற பொருளில் இரண்டிற்கு மேற்பட்ட தையுணர்த்தும்.

நான்கு

தமிழில் நான்கு என்பது "பால்புரை புரவி நால்குடன் பூட்டி" என்ற அடியில் வந்தது காண்க. நால்கு என்பது கன்னடத்தில் வழங்குகிறது. தெலுங்கில்—நாலுகு. குடகில்—நாலு என்பனவும் காண்க. நா என்பதுகூட குடகு மொழியில் வழங்கும். சித்தியமொழிகளில், நில், நைல், நெல், நேகி என்பன இந்த எண்ணை குறிப்பன. நால்கு > நான்கு ஆயிற்று.

ஐந்து

ஐந்து < ஐ து. நகரவொற்றுமெல்லோசைக் காக ஏற்பட்டது. ஐ யென்பது உரிச்சொல்லாக

வழங்குகிறது. உ-ம்:- ஐயாண்டு. ஐ என்பதே மூலம். துளுவில், ஐன் என்று வழங்கும். தெலுங்கில் ஐது என்பதும், ஏனு என்பதும் வழங்கும். தோடர்மொழியில் ஐ கா ர ம், ஏகாரமாய் வழங்குகிறது. எனி என்பதும் ஐந்தைக்குறிப்பதே. ஐகாரம், தமிழில் அகரமாய் மருவுதல், அஞ்சு என்பதிற்காண்க. தொடாமல் விரல்களைப்போல் நெருங்கியிருப்பது ஐந்து என்பாருமுளர்.

ஆறு

தமிழ் தெலுங்கு கன்னடம், மலையாளம் என்னும் நான்கிலும் மாறுதிருப்பது. அது தோடர் மொழியில் ஆர், துளுவில் ஆஜி, காண்டுவில் சாரான் என வழங்கும். கன்னடத்தில் ஆறென்பது பலமான என்ற பொருளில் வழங்கும். அறுபது என்பது போலக் கன்னடம், தெலுங்கு முதலியவற்றிலும் வருமொழி நோக்கி முதல் குறுகுதல் காணப்படும்.

தமிழ் அறுபது = கன்னடம் அரவத்து, தெலுங்கு அரவை, துளு அஜிபா, அறு = அற்றுப் போதல் இதுவே வேராக இருக்கலாம்.

ஏழு

எழு = உயர் என்பதனடியாய்ப் பிறந்திருத்தல் கூடும். கன்னடம்-ஏளு. துளு-ஏள். தெலுங்கு-ஏடு.

எட்டு

உரிச்சொல், எண் அடியாக எண்மர் என வருதல் காண்க. கன்னடம் எண்டு = எண்வரு. தெலுங்கு எனிமிதி, எம்மிதி, எனமை (= எண்பது). ணகரம் தெலுங்கில் னகரமாயிற்று. எண்ணு (= என்னு) துளு-எண்ம. காண்டி-அனும. தோடர்-எட். சித்திய மொழிகளில் எட்டும் ஒன்பதுங் குறிப்பதற்குப் பத்தில் இரண்டு குறைந்தது, ஒன்று குறைந்தது என்னும் பொருளுடைய சொற்கள் வழங்குதல் தெலுங்கிலுள்ள எனிமிதி, தொம்மிதி, என்பவற்றை நினைவுறுத்தும்.

ஒன்பது

மலையாளம்—ஒம்பது. கன்னடம்—ஒம்பத்து. குடகு—ஒயிண்பது. தெலுங்கு—தொம்மிதி = தொம்பதி, தொம்மை. துளு—ஒர்ம்பா. சொன்பா என்பன ஒத்திருத்தல் காண்க. தொண்டு என்பது ஒன்பதையுணர்த்தும். தொன் > தொல் = முன், பழைய, தொல் > தொள், தொள்ளாயிரம்.

பத்து

தெலுங்கு-பதி. துளு-பட். கன்னடம்-ஹட்டு. ஹத்து. கோடர்-பத்து. பது > பன் > பான், என்பவற்றை பன்னிரெண்டு, ஒன்பான் என்பவற்றிற்

காண்க. பது > இன் = பதின் > பன் > பான். தெலு ங்கு பதி > பை, வை. குடகு = பதின் > பதுன், பதி = பகுதி.

## நூறு

தெலுங்கு—நூரு. துளு—நூடு.

## ஆயிரம்

சிலர் ஸஹஸ்ர > சாகச்ர > சார > ஆர > ஆயிர மென்பர். தெலுங்கில் வேலு, வேயி (= பன்மை) துளு—சார. கன்னட = சா. எண் வரிசைப்பெயர், என்பெயரோடு அம் சாரியை சேர்ப்பதால் உண்டாவது. தெலுங்கில் அவ என்பது சாரியையாக வழங்கும். ஆக > அக > அவ, தெலுங்கு-முதவ = முதலாவது. கன்னடத்தில், அனே என்பது வழங்குகிறது. மூனே = மூன்றாவது.

## பெயரடை

---

பெயர்களைத் தழுவுஞ்சொல் பெரெச்சமாகவும் உரிச்சொல்லாகவும் உள்ளன. அவற்றிற்கு வடமொழியிற்போலத் திணை பால் விகுதிகள் சேர்த்தல் திராவிடத்திலும் சித்தியத்திலுமில்லை.

தன்மையுணர்த்தும், அல்லது தொடர்புணர்த்தும் பெயர்ச்சொல்லே அடைமொழியாக வருவதுண்டு.

உ-ம்:— பொன்முடி, கல்வீடு.

(1) தன்மையுணர்த்துஞ் சொல் சில மாற்றங்கள் அடைதல் உண்டு. ஈறு கெடுதல் கார்முகில், நெடுங்கடல், நல்வழி, சுபதினம் என்பவற்றில் காண்க.

(2) பெயர்ச்சொல்லோடு அத்துச்சாரியை சேர்ந்தும் பெயரடை ஏற்படும். உ-ம்:- புறத்துமனை, மரத்துப்பழம்.

(3) வல்லொற்று இரட்டித்தல் நாட்டு உடை ஆட்டுக்கால், என்பவற்றுட் காணப்படும்.

(4) மெல்லொற்று வல்லொற்றாதற்குதாரணம்:-

குரங்கு + கால் = குரக்குக்கால்

மருந்து + பை = மருத்துப்பை என்பனவாம்.

ஆய, ஆன என்னும் பெயரெச்சச்சார்புபற்றி அடையாதற்குதாரணம்:-

அன்பான நண்பன், சார்பாய பொருள்என்பன.

காலவினைச் சொல் பெயரெச்சமாதற்குதாரணம்:-

உயர்மலை, உயர்ந்தமரம் என்பனவாம்.

அம் சாரியை சேர்ந்து அடையாதல் ஆலம்பு, மலம்பாம்பு, பனந்தோப்பு என்பவற்றுட் காண்க.

இன் சார்தலுக்கு மலையின் உயரம் என்பதும் அகரம் சார்தலுக்கு தீயவழி, மலைவளம் என்பன உதாரணங்களாம்.

ஒப்பிட்டு ஒன்றை மிகுத்துக்கூற உம்சாரியை யும் ஐந்து அல்லது ஏழாம் வேற்றுமைப்பெயர்ச் சொல்லும் பயன்படும். அவனைப்பார்க்கிலும் இவன் பெரியவன்; அதனின் இது சிறந்தது என்பவை அதுவாம்.

ஒன்றின உயர்ந்த அளவு காட்ட, மிக அதிக என்ற அடைமொழிகள் பெயரடைக்குச் சேர்த்தல் உண்டு. மிகமேலான. எல்லாவற்றினுஞ் சிறந்த அதிகநல்ல என்பவை உதாரணங்களாம்.

## வினைச்சொல்.

பெரும்பாலும் சொற்கள் வேற்றுமையுருபின் கலப்பால் பெயரென்றும், கால இடவிகுதிகள் பற்றி வினையென்றும் அறியப்படுவன.

ஒரு மொழியில் பெயராயிருக்குஞ்சொல், சார்பு மொழியில் வினையாகவும் வழங்கிவருதல் உண்டு. அது மாறியுங்காணப்படுதலுண்டு.

வேர்ச்சொல்லே ஏவல் வினையாக வருதல் உண்டு. அடி, வா, போ என்பன அவை.

வினைச்சொற்குச்சேரும் இடைநிலை, விகுதி முதலியவைகள் தெளிவாயிருத்தலால், ஒட்டு நிலைப் பின்னசை நிலையே, வினையாக்கத்தினியல்பாகும். உயிர்மெய் மாற்றங்கள் ஓசை நயம் பற்றிப் பெரும் பாலும் நிகழும். திராவிடப்பெயர்களுக்கு ஒரே முறையான திணை, பால், குறிப்பும், திராவிட வினைச் சொற்கு ஒரே முறையான கால இட உருபமைப்பும் உள்ளன. காண்டுமொழியில் அவை மாறுபடும். சிறுபான்மையே வேறு முறைகள்காணப்படும்.

இறந்தகாலம் எதிர்காலம் குறிக்குஞ்சொற்களே ஆதியில் தமிழில் உள்ளன. நிகழ்காலங் குறிப்பன பின் வந்தன வாகும். நிபந்தனைக் குறிப்பும் (Subjunctive mood), விருப்பக்குறிப்பும் (Optetive mood), அசைகளாலும் விகுதிகளாலும் உணர்த்தப் படும். எச்சமும் விகற்பங்களும் துணை வினைகளா லுணர்த்தப்படும்.

திராவிட வினைச்சொல், சித்திய வினைச்சொற் போலத் தெளிவான சுருக்க அமைப்பு முறையுடை யது. வினையுடன் பெயர், உரிச்சொல் முதலியன கலந்து சொற்றொடரமைதலுண்டு. உருபுகள் சேர்ந்து தொகைச்சொல் அமைவதில்லை. ஹங்கேரி (Hungarian) மொழியிலிருப்பது போல எழு வாய்வினை, செயப்படுபொருள் வினை, யென்ற வேறு பாடு தமிழில் இல்லை.

உ-ம்:—

நான் அறிகிறேன்—எழுவாய்வினை.
நான் அதை அறிகிறேன்—செயப்பாட்டுவினை.

வினை தழுவுஞ்சொற்களெல்லாம், பலவகை வினையெச்சமாகவே குறிக்கப்படுவன.

உ-ம்:—

முந்திப்போனான்—செய்து என்னும் வாய்பாட்டு
(Participle) வினையெச்சம்.
தாழக்குதித்தான்—செயவெனெச்சம்.
(Infinite)

தன்வினை பிறவினையாகும் வகைபல.

(1) வல்லொற்றிரட்டல்,
பெருகு—பெருக்கு
போகு—போக்கு

(2) மெல்லொற்று வல்லொற்றாதல்,

அடங்கு—அடக்கு
திருந்து—திருத்து
நிரம்பு—நிரப்பு

தெலுங்கில் ககரம் சகரமாதல் தன்வினை பிறவினையாம். தூங்கு—தூச்சு—தூஞ்சு, இஞ்சு-என்பதும் பிறவினை விகுதியே.

(3) கால உருபில் வல்லொற்றுமிகுதல்

| தன்வினை | பிறவினை |
|---|---|
| சேர்கிறேன் | சேர்க்கிறேன் |
| சேர்ந்தேன் | சேர்த்தேன் |

(4) துவ்விகுதி சேர்ந்து வல்லொற்றிரட்டல்,

தாழ்—தாழ்த்து
சுழல்—சுழற்று
மீள்—மீட்டு

(5) பி. வி. என்ற விகுதிகள் சேர்ந்து நட என்பது நடப்பி என்றும், செய் என்பது செய்வி என்றும் ஆகும்.

மீட்டும் மீட்டும் நிகழ்செயல்குறிக்கப் பகுதி இரட்டித்து வருதலுண்டு. (Frequentative) மினு மினுக்கு, முறுமுறுத்தல், கிறுகிறுப்பு, வழுவழுப்பு என்பவை உதாரணங்களாம்.

ஏகாரம் மீச்செயலைக்குறித்தல் தெலுங்கில் காணப்படும்.

மால்பெவெ= செய்
மால்பேவெ= திரும்பத்திரும்பச்செய்
என்பதிற் அது காண்க,

அதிகமாய் நிகழுஞ் செயல் குறிக்கக் கன்னடம் இடை நிலையைப்பயன்படுத்தும். அது

கேனுவெ = கேட்கிறேன்
கெண்ட்டுவெ = அதிகமாய்க்கேட்கிறேன்
என்பதாற்றெளியப்படும்.

காண்டுமொழியில், செய்தற்கு என்ற வாய்பாட்டு வினையெச்சத்தோடு, கால இடவிகுதிகள் சேர்ந்து செய்யத்தொடங்குகிறேன் என்ற பொருள் பயப்பிக்கும். அது, பிறதிராவிட மொழிகளிற் காணப்படுவதில்லை.

செயப்பாட்டு வினையை, வடமொழியில், யகர விகுதியாற்குறிப்பர். வடஇந்தியப்பேச்சு மொழிகளில் செயப்பாட்டுவினை தெளிவாக அமையவில்லை. திராவிட மொழிகளில், அது ஒருகுறிப்பிட்ட உருபாற்குறிக்கப்படாவிடினும், பொதுவாகத் தமிழில் 'படு' என்பதே உருபாக வழங்குகிறது. உருபில்லாமலும் அது குறிக்கப்படுகிறது. 'அது என்னால் உடைந்தது,' 'கோயில் கட்டி ஆயிற்று', 'எழுதின சுவடி', 'உண்ட உணவு', 'சொன்னபோதும்' என்பவற்றுள் செயப்பாட்டு வினையுருபு இல்லாமை காண்க. துளு மொழியில், செய்வினை செயப்பாட்டுப் பொருளில் வழங்குதல்:—

அவன் நிந்தித்தவன் ஆவன் = அவன் நிந்திக்கப்பட்டவன் ஆவன் என்பதிற்காண்க.

காண்டு மொழியில், இரு என்பது செயப்பாட்டு வினைப் பொருளுணர்த்துகிறது. நான் அடித்திருக்கிறேன் என்பது நான் அடிக்கப்படுகிறேன் என்னும் பொருளில் வழங்குதல் காண்க. தமிழில் 'படு' என்பது செய்வினைப் பொருளுணர்த்துவதுண்டு. நான் நன்றாகச் சாப்பிடபபட்டவன் = நான் நன்றாகச் சாப்பிடக்கூடியவன்.

"நாச செற்று விக்குண்மேல வாராமுன்னல் வினைமேற்சென்று செய்யப்படும்" என்ற திருக்குறளில் செய்யப்படும் = செய்யத்தக்கது என்றபொருளில் வந்தமை காண்க.

செய்வினை, செயப்பாட்டுவினை, இரண்டிற்கும் நடுநிகர்த்ததான பகுதி (Middle voice) என்பது திராவிடத்திலில்லை. செயல் தன்பால மீளுவதைக் 'கொண்' என்றதுணைவினை குறிக்கும. உ-ம்:— அவன் தன்னை அடித்துக் கொண்டான்; அவர்கள் அடித்துக்கொண்டார்கள்; என்றதில் ஒருவரையொருவர் அடித்தனர் என்ற கருத்தும் புலனுதல்காண்க. தெலுங்கில், 'கொனு' என்பதும், துளுவில், 'கொணு' 'ஒணு' என்பனவும் 'கொள்' என்பது போல வழங்கும்.

எதிர்மறை என்பது வினைப்பகுதியாகப்பெறும் பான்மை வழங்குவதில்லை. எதிர்மறையுருபு செயல் நிலைகுறிப்பது. (Mood) ஆரிய மொழியில் தனிச்

சொல் வினையுரியாக ந + அஸ்தி = நாஸ்தி என்பதிற் போல எதிர்மறை குறிக்கும். சித்திய மொழிகளில் எதிர்மறையுருபு விகுதிக்குமுன் சேர்க்கப்படும். எதிர்மறைவினைக்குக் காலக்குறிப்பில்லை.

துளுவிலும், காண்டு மொழியிலும் ஒவ்வொரு காலத்தையுங் குறிக்கும் எதிர் மறை வினை உண்டு. மலையாளத்திலும் அவ்வாறே.

போகாயுன்னு = நான் இப்போது போக மாட்டேன்.
போகாஞ்ஞு = நான் போனேனில்லை.
போகாயும் = நான் போவதில்லை.

என்பவை உதாரணங்களாம்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் என்பவற்றில் எதிர்மறையுருபு எக்காலத்திற்கும் பொதுவாகவுள்ளது. 'ஆ' தமிழிலும், 'அ' கன்னடத்திலும் எதிர் மறைகுறிப்பது. கன்னடத்தில் பாளது = வாழது = வாழாது. தெலுங்கில், போனு = போகமாட்டேன், என்பதில் எதிர்மறையுருபு இல்லையாயினும், அது, போவனு என்பதன் மரூஉவாகவே கொள்ளப்படும். ஓசைக்காக, அகரம் தமிழில் ஆகாரமாயிற்றென்பாருமுளர். தமிழில், இல், அல், என்பன எதிர்மறையுணர்த்துவதுபோல, மலையாளத்திலும், கன்னடத்திலும், இல்ல என்பது வழங்கும். காண்டுமொழியில்

ஹில்லே, ஹல்லெ, என்பன வழங்கும். இஜ்ஜி என்பது துளுவில் எதிர்மறை யுணர்த்தும்.

தமிழில் 'ஆ' என்பதோடு மல், மை, ஆது, தே என்பனவும் எதிர்மறை குறிப்பது போற்றோன்றினும் அவை உருபுகளல்ல. தெலுங்கில் நி என்னும் விகுதி எதிர்மறை குறிப்பதுண்டு.

உ-ம்:— சேயநி =செய்யாத என்பதாம். நி என்பதை எச்சத்தொடர்பின் உருபாகக் கொள்வதுண்டு. நா என்பது தொழிற்பெயற் விகுதியாகத் தெலுங்கில் வழங்குவதுண்டு. கோரு = நம்பு. கோரிகா =நம்பிக்கை. தமிழில் அது கோரிக்கை என வேண்டுகோள் பொருளில் வழங்குகிறது. தெலுங்கில் ராகா, என்பது வராமையைகுறிக்குமிடத்து, ரா என்பதிலுள்ள ஆகாரத்தில், எதிர்மறையுருபாகிய அகரம அடங்கிப் போனமையால், அது வெளிப்படையாகக் காணப்படுமாறில்லை என்பர்.

வாழ்க என்பதன் எதிர்மறை வாழற்க என்பதேயாம். இதில், அல் எதிர்மறையுருபு. அதில், லகரங் கெட்டால், அகரம எதிர்மறை குறிக்கும். அதுவே, ஆ எனவிரிதலுமுண்டு. ஆதலின், அகரமே எல்லாத்திராவிட மொழிக்கும எதிர்மறையுருபாதல் இன்ன காரணத்தால் என்பது விளங்கும். அல் என்பது ஆல்> எல்> ஏ எனவும் திரிந்து வழங்கும். (உ-ம்:— மறூல், செல்லேல், வாழேன்.) வட

மொழி எதிர் மறை அகரங்கூடத் திராவிடத்திலி ருந்து ஏற்பட்டிருக்கலாம் என்பது டாக்டர் கால்டு வெல் கருத்தாகும்.

தமிழில் வினைக்குறிப்பு வினைப்பெயரடியாய்ப் பிறக்கின்றது. உகிரிய மொழிகளில் விகுதிகள் பெயரை வினையாக மாற்றுவதுண்டு. பாஸ் = எஜ மான். பாஸென் = எஜமானனாயிருக்கிறேன். மொட் = மனிதன். மொடெம் = மனிதனாயிருக்கி றேன். என்பன உதாரணங்களாம். பேஸ்கிப்பாதிரி யார் குறிப்புவினையை பெயர்வினையென்பர். தெலுங் கில் படர்க்கையில் குறிப்புவினை இல்லை. 'கு' என்னு மொழியில் குறிப்புவினையுண்டு. உரிச்சொல்லடி யாகவும் குறிப்புவினை பிறக்கும். (உ-ம்:— நல்லேன், நல்லாய், நல்லான் என்பனவாம்.) 'இய' என்பது பண்படியாகப் பிறக்கும் குறிப்புவினைச்சாரியையா கும். கொடுமை—கொடியன். வன்மை—வலியன். சிறுமை—சிறியன் இவற்றில் அகரத்தைப் பெய ரெச்ச விகுதியாகக் கருதுதலுண்டு. இவைகள் பெயராக வழங்கினால், குறிப்புவினையாலணையும் பெய ரெனப்படும். பெரிது, சிறிது என்பதில் இகர மாத்திரம் வருதலும், உடையதன், தீயன், என்ப தில் அகரம் மாத்திரம் வருதலுங் காண்க.

இடங்குறிக்கும் விகுதிகள் திணை, பால், இடம் உணர்த்துவனவாய்க் காலங்காட்டுமுருபுக

ளுக்குப் பின் வினைச்சொற்களில் சேர்க்கப்பட்டுவருவன. அவை சுட்டுப் பெயரடியாய்ப் பிறந்தவை. ஆரிய மொழியில் அவைபகுதியோடு சேர்க்கப்படுவன. அவ்வாறு பகுதிகளோடு சேர்ந்து உருவறியாத நிலையெய்தியபோது இடப்பெயர்களை வினைச் சொல்லிற்கு முன்வைத்து வினைச் சொல்லின் திணை பால்கள் உணர்த்தப்படும். செமிட்டிக் மொழியில் சுட்டுப் பெயர் பகுதிகள் வினைக்கு முன்னசையாகச் சேர்க்கப்பட்டால், எதிர்காலமும், பின்னசையாகச் சேர்க்கப்பட்டால், இறந்தகாலமும் குறிக்கப்படும்.

மலையாளக் கவிகளில் ஆதியில் வினைச்சொற்களின் இறுதியில் திணை பாலுணர்த்தும் விகுதிகள் சேர்க்கப்பட்டன. பிற்காலத்தில் அவையொழியவே, சுட்டுப்பெயர், இடப்பெயர்கள் வினைக்கு முன்வைக்கப்படுவனவாயின. காண்டு மொழி, 'த' மொழியென்பவற்றில் விகுதிகள் ஒழுங்காகத் திணைபாலுணர்த்தி நிற்பனவே.

காலங்காட்டும் இடை நிலைகள் பகுதியோடு சேர்க்கப்படவே, அவ்விடைநிலைகளுக்குப் பின்னே திணைபாலுணர்த்தும் விகுதிகள் சேர்க்கப்படும். இடைநிலையில் மெல்லொற்று வல்லொற்றுவதால் இயைபடுபொருளுடைய வினைகுறிக்கப்படும்.

வடஇந்திய பேச்சுமொழிகளில், நிகழ்கால வினையானது வினையெச்சமுந் துணைவினையுங் கலந்து

குறிக்கப்படுகிறது. நான் செய்கிறேன் என்பதற்குப்பதிலாக, நான் செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறுதல் மரபு. தெலுங்கில் அம்மாதிரி வழக்கமுண்டு. இறந்த காலத்திலும் எதிர் காலத்திலும், வெவ்வேறான காலப்பகுதிகளைக் குறிப்பதற்கு வினையெச்சமுந் துணைவினையுங் கலத்தல், பிற திராவிட மொழிகளிற் காணப்படும்.

தெலுங்கில் படர்க்கை வினையில் இறந்தகாலங் குறிக்கும் உருபில்லை. 'தி' என்னும் விகுதி அதற்குப் பதிலாக வழங்குகிறது. தமிழில் செய்யாது என்ற காலங்குறிக்கும உருபில்லை. செய்தும், செய்கும் என்பவைகளில் உம் விகுதி எதிர்காலங்குறித்தல் காண்க. 'வேண்டும்' என்பதிலும் அவ்வாறே கால உருபின்மை காண்க. தமிழில், இறந்தகாலங் குறிக்கும் வினையெச்சங் காணப்படும். மலையாளத்திலும், செய்யுள் வழக்குத்தமிழிலும் எதிர்காலங் குறிக்கும் வினையெச்சமுண்டு. கன்னடத்திலும், தெலுங்கிலும் இறந்தகாலம், நிகழ்காலம் குறிக்கும் வினையெச்சமுண்டு. துளுவில், நிகழ்காலம், எதிர் காலம், முற்றாத இறந்தகாலம், (Imperfect past) முற்றிய இறந்த காலம் என்பவற்றிற்குரிய வினையெச்சங்கள் காணப்படும். வினையெச்சங்கள் உம்மைச்சொல்லின் அவசியத்தை ஒழிக்கின்றன.

கன்னடத்தில் 'உத' என்பது நிகழ்கால உருபு, தெலுங்கில் 'து' என்றாய் நிகழ்காலங் குறிக்கிறது. கன்னடம் வாழுத = வாழ்கிற. தமிழிலுங்கூட வாழுது என்பது உலக வழக்கில் வாழ்கிறது என்று பொருள்படும். 'தப்' என்பது பழங்கன்னடத்தில் நிகழ்காலங்குறிக்கப்பகுதியோடு சேர்க்கப்படுகிறது. வாழிதபெம் = வாழ்கிறேன்.

உத என்பது உது என்னுஞ் சுட்டுப்பெயரடியாய்ப் பிறந்ததென்பர். உதம் = இது (கன்னடம்) தப் = த + அப = த + அக (<ஆக) தகரம் இறந்த காலத்தையும், ஆக என்பது எதிர்காலத்தையும் குறிக்கும். நிகழ்கால உருபு எதிர்கால உருபில்நின்று ஆதியில் ஏற்பட்டது. எதிர்கால இடைநிலையாய வகரமே துளு மொழியில் நிகழ்கால உருபாகப்பயன் படுகிறது.

தமிழில் ஆக, இ ந. ஆகநின்ற என்பவை கிறு, ஆகின்றத்து எனமருவின. கிறு என்பது கின்று என விரிந்தது. ஆய் நின்று என்பது பழைய மலையாள (774-கி. பி.) சாசனத்தில் நிகழ்காலங்குறிக்க வருகிறது. மலையாளத்தில் கின்னு, இன்னு என்பது கின்று என்பதன் மரூஉவாகும். தோடர் மொழியில் ககரம் நிகழ்காலங் குறிக்கிறது.

போகேம் = போகிறேன்
இல் + து = இன்று
உள் + து = உண்டு என்பன காண்க.

இறந்த காலம், ஆரிய மொழியில் மிகுதியும் பகுதி இரட்டிப்பால்வரும். செமிட்டிக் மொழியில் இடங்குறிக்கும் விகுதிகளால் அது சுட்டப்படும். இறந்தகால எச்சத்திலிருந்து இறந்தகால உருபு திராவிட மொழிகளில் ஏற்பட்டதென்ப. சொல்லின் இறுதி ஒற்று இரட்டிப்பதால் அது சுட்டப்படும். உ-ம்:— புகு, புக்கான், தகு, தக்க என்பன வாம். தகரம் இறந்தகால உருபாகப் பகுதிக்குப்பின் சேர்க்கப்படுதலுமுண்டு. தெலுங்கில் இகரம் இறந்த காலஞ் சுட்டுவதுண்டு. காண்டு மொழியிலும் இகரம் இறந்தகாலங் குறிக்கிறது. தமிழில் இரண்டும் வழங்குதல் தெளிவு. உ-ம்:— போல் + து = போன்று. கல் + து = கற்று. படின, சொல்லிய, ஓடி. 'தி' என்பது தெலுங்கில் இடவிகுதிக்கு முன் வரும். சேஸ்திரி = செய்தேன் என்பதில் அது வந்தமை காண்க.

தோடர் மொழியில் தகரம், இறந்தகால உருபாக வழங்குகிறது. தமிழில் சிலசொற்களில் தகரத்தோடு இகரங்கலந்து, பின் கெட்டிருத்தல் கூடும். தகரம், த்வா என்னும் ஆரிய உருபிலும் இறந்த காலங்குறிப்பது போலும். வங்காள மொழியிலும் அது இறந்தகால உருபே. துருக்கி, உகிரியமொழிகளிலும், பினிசியம், ஹறங்கேரி மொழிகளிலும் அது அவ்வாறு வழங்குகிறது. அது > து > த < த்

எனவருதலால் சென்றதைக் குறிக்கும் சுட்டே ஆதியில் இறந்தகாலமுணர்த்திற்றென்ப.

தொழிற்பெயர் எச்சத்தினின்றும், பகுதியினின்றும் உண்டாதல் கூடும். இடப்பெயர் விகுதி பெற்று வினையாலணையும் பெயர்கள் உளவாயின. அவை வினைபோலச் செயப்படுபொருளால் அவாவப்படுவன. உ-ம்:— வீட்டைக் கட்டினவர், செய்தனம் என்பதுபோல. தொழிற்பண்பு குறிக்குந் தொழிற்பெயர் தமிழிலும், மலையாளத்திலும் உள்ளன.

தமிழில் பண்புகுறிக்கும் 'மை' விகுதி மலையாளத்தில் ம, கன்னடத்தில் மே, தெலுங்கில் மி என வரும். தொழிற்பெயர் வினைபோல உரிச்சொல்லால் தழுவப்படுவன. உ-ம்:— கெட்டநடை, நன்றாய்நடத்தல் என்பன காண்க.

கை, கல், தல், அம் முதலியன தொழிற்பெயர் விகுதி. தெலுங்கில், த, தமு என்பன விகுதியாய்வரும். சேயுத, சேயதாமு = செய்தல், என்பன உதாரணமாம். வினையின் வல்லொற்று இரட்டித்தலாலும் பெயர் ஏற்படும். எழுது, எழுத்து. வினையே பெயராயும் வரும். கட்டு, உரை. வினை முதலெழுத்து நீளுதல்—படு, பாடு. அம்விகுதி— உயர், உயரம். நக்கு, நாக்கு. தி—கெடு, கெடுதி. கன்னடத்தில் தின்றி = உணவு.

பகரம், வகரம்—நடப்பு, கேள்வி
காண்—இடுக்கண்
மானம்—சேர்மானம்
பாடு—கட்டுப்பாடு

இகர விகுதி கருத்தாப் பொருள் குறித்தல் உண்ணி, கொல்லி, நாற்காலி, வானம்பாடி, வழி காட்டி, ஆழி (=கடல்).

'செயற்கு' என்பது தமிழில் காலப் பொது வெச்சம். இதில் குகரம் நான்காம் வேற்றுமையுரு பெனவும், தொழிற்பெயரில் அது விகுதியாய் வருவ தென்றுங் கூறுவதுண்டு. எச்சம், அகரத்தில் முடிவதே மரபு. உ-ம்:— வரை என்பதிற்காண்க. வியங்கோளுக்கு உருபும் அகரமே. இவ்வகரம், ஆதியிற் சுட்டுப் பெயரென்ப.

ஏவல் வினையாய்ப் பகுதியே வருதலும், விகுதி பெறுதலும் உண்டு. நட, நடவாய், நடமின். அண்டி என்பது தெலுங்கில் ஏவல் விகுதியாய் வரும். தமி ழில் வினைமுற்றுப் பன்மை உலகவழக்கில் ஏவற் பன்மையாய் வரும். உ-ம்:— செய்யும் என்பதாம்.

சின், மின், என்பன தமிழ், மலையாளத்திலும், இம், என்பது கன்னடத்திலும் ஏவல் வியங்கோளு ணர்த்துவன. நிபந்தனையுணர்த்தும் (Subjunctive mood) செய்தால், செய்யின் என்னும் வாய்ப்பாடு

வினையெச்சம் எனப்படும். ஆகில், ஆனால் என்பது தமிழிலும், இன, தெலுங்கிலும், நிபந்தனை குறிக்கும். ஆல் என்பது ஆகல் என்பதன்மரூஉ என்ப.

கன்னடத்தில், எதிர்காலம் பெயரெச்சம் அகரத்தில் முடியும். வாழ்வ =வாழும்.

எதிர் காலங்குறிக்க நிகழ்கால வினைபயன்படுதலுண்டு. உகரம், எதிர்காலஉருபு, ககரம் அசை.

ஙகும், வான், பான், பாக்கு எதிர்கால எச்சங்குறிப்பன. வருந என்பதில் அகரம் எதிர்கால விகுதி.

தெலுங்கில், உம் என்பதற்குப் பதிலாக நு என்பது வரும்.

வகரம் தமிழ், கன்னடம், துளு என்பவற்றில் எதிர்கால இடைநிலை. வங்காளம், இந்தி மொழிகளில் பகரமும், லத்தீனில் மகரமும், பினிசியமொழிகளில் 'வ' என்பதும் எதிர்கால உருபாய் வருதல் காண்க.

## மொழி யொப்புமை.

---

## (Glossanal Affinity.)

திராவிட மொழிகள், சித்தியப்பெருங்குடும்பத்தோடு பெரும்பான்மை இலக்கண முறையிலும், சிறுபான்மை சொல் வகையிலும் ஒத்திருத்தல்

போல, ஆரியத்திற்குத்தாயான மொழியுடன் ஒரு
வகைச் சம்பந்தமுடையனவாகத் தோன்றுகின்றன.
வடமொழி வாணர் இதைப்பாராட்டுவதில்லை.

ஒரு சொல் வடமொழியிலுந் தென்மொழியி
லுங் காணப்பட்ட விடத்து, அது தென்மொழிக்
குரிய தென்று சில காரணங்களால் துணிய
வேண்டும். வடமொழியில் அதுதனிச் சொல்லாய்ப்
பகுதியும், அதனின்று உளவாகும் கிளைச்சொற்களு
மில்லாதிருப்பத் தமிழில் அது பலகிளைச் சொற்க
ளோடு பெருவழக்குடையதாயிருப்பின், அது தமி
ழிலிருந்து வடமொழிக்குச் சென்றதேயாகும். ஒரு
பொருளைக் குறிப்பதற்குத் தமிழில் வேறு சொல்
லில்லாது ஒரு சொல்லே வழங்கவும், வடமொழி
யில் வேறுசொற்கள் அப்பொருளைக் குறிப்பதற்கு
ஏற்பட்டிருந்தால், அச்சொல் தமிழ்ச் சொல்
லென்று ஊகிக்கலாம். ஒருசொல் திராவிடத்திற்
காணப்படுவதாய், ஆரிய மொழிகளில் சம்ஸ்கிருதந்
தவிர பிறமொழிகளிற் காணப்படாததாயிருக்குமா
யின், அதுதிராவிடச் சொல்லென்று துணியலாம்.
வடமொழியில் ஒரு சொல்லிற்குக் கூறுந்தாது
பொருட் பொருத்தமில்லாதிருந்தாலும், தமிழில்
அதன் மூலம் பொருத்தமுள்ளதாயிருந்தாலும்,
அச்சொல் தென்மொழிக்குரியதென்றல் சாலும்.
ஒரு சொல்லின் பொருள் தமிழில் இயற்கையாயும்,
வடமொழியில் உருவகத்தால் இயைபுடையதா

யிருந்தால் அது தமிழ்ச் சொல்லென்று கொள்ள லாம். வடசொல்லைப்பிரித்தறியும் தமிழ் இலக்கண நூலார் ஒரு சொல்லைத் தமிழ் என்றால், அது ஏற் றுக் கொள்ளற்பாலதே.

அக்கா என்பது தமிழில் தாயையும், தமக்கை யையும் குறிக்கும். அட்டா, அட்டி, என்பன சித் திய மொழியில் அப்பொருளுடையன.

அடவி என்பது அடர்ந்திருக்குங்காடு என்ற பொருளில் தமிழ்ச் சொல்லே. அடர் என்றசொல் எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுவது. அட் = திரி என்பதில் நின்று அடவி யென்பது வந் ததாக வடநூலார் கூறுவது பொருட்பொருத்த மில்லாததே.

வடமொழியில் அம்பா என்ற சொல், அம்மா என்ற தமிழ்ச் சொல்லின்திரிபே. ஜெர்மனியில் 'அம்மெ' என்றசொல் செவிலித்தாயைக் குறிக்கும்.

கடுகு என்றசொல், கடு= அதிகம், என்பதன டியாய்ப்பிறந்து காரமிகுதியுடைய பொருளைக்குறிப் பதாயிற்று. கடுக, என்றசொல் வடமொழி கட் = போ, என்பதனடியாய்ப் பிறந்ததென்பது பொருத் தமில்லாததே. கடுகு(=விரைந்துபோ), கடி, என் சொற்களும் ஒரு வேரிற் பிறந்ததே. காடுத, கடம், கடறு என்பனவும் அவ்வாறேவருவன

'கலா' கல் என்ற தமிழ்ச் சொல்லடியாய்ப் பிறந்த கலே என்பதன் திரிபே கலாஎன்ருயிற்று.

குடும்பர்—என்பது குடிஎன்ற தமிழ்ச்சொல்லடியாய்ப்பிறந்திருத்தல் கூடும். குட் =வளை, சுற்று என்பதில் நின்று குடி, குடம் முதலிய சொற்கள் உண்டாயின போலும். சுற்றத்தார் என்பது குடும்பத்தோடொத்த பொருளுடையது. குடில், குடிசை, குச்சு என்பன ஒரு வேரிற்ருேன்றினபோலும். தெலுங்கிலும், கன்னடத்திலும் குடி (guti) என்பது கோயிலைக் குறிக்கும். ஹிந்துஸ்தானியில், குடி =வீடு. ஆங்கிலமொழியில் குடிசையென்ற பொருளில் cot (=காட்) என்னுஞ்சொல், குடி என்பதோடு ஒத்தசொல்லே. கொடு= வளைந்த. இதனடியாகக் கோட்டா, கோட்டை என்ற சொற்கள் வருவன.

நாளு =பல என்றசொல் நாலா என்ற தமிழ்ச் சொல்லடியாகப் பிறந்தது. வடமொழியில் அதற்குச் சரியான வேர்ச்சொல் இல்லை.

நீரம் என்ற வடசொல், நீர் என்ற தமிழ்ச் சொல்லே. தெலுங்கில், அது நீளு எனப்படும். காண்டுமொழியில் நீர், ஏர் என்பனவும் பிராகுயில் தீர் என்பதும் ஒன்றே.

படு =சூழ், அணவு =பொருந்து, என்னுஞ் சொற்களடியாகப் பட்டாளம் என்ற சொல் பிறந்

தது. தமிழில் பட்டி என்பது கிராமத்தைக்குறிக்கும். அது கன்னடத்தில், ஹட்டி என்று வழங்கும்.

தமிழ்ச் சொல்லாகிய போன் என்பதனடியாகப் பன்ஞே என்ற பிராகிருதச்சொல்பிறந்துள்ளது.

பாகம், பங்கு என்ற வடசொற்கள் பகு என்ற தமிழ்ச்சொல்லடியாய்ப் பிறந்தன.

மீன், மீனம் என்பன மின் என்ற தமிழ்ப்பகுதியடியாய்ப் பிறந்தன. காண்டு மொழியில் அது மீண்டு என வழங்குகிறது. அது, மீ = தீங்கு கொல் என்ற வடசொல்லடியாய்ப் பிறந்ததென்பது பொருத்தமில்லாததே.

வள் என்பதனடியாக வளை, வலம், வட்டம் என்ற சொற்கள் உண்டாயின.

சவம் என்பது சா = இற, என்பதனடியாய்ப் பிறந்தது. சபாயேடிக் என்ற சித்திய மொழியில் சாவெ = இறந்த, என்பது காணப்படுகிறது. அது வடமொழியிற் சவ் = போ, என்பதனடியாய்ப் பிறந்ததென்பது பொருந்தாது.

கர் நாட என்பது, கருநாடகம் = கருத்த நிலப் பரப்பு என்பதனடியாய்ப்பிறந்தது.

பலன் என்பது பழம்=பழுத்தது என்பதன் மரூஉவாம்.

பிடகம்(=கூடை) என்பது பிடி என்பதனடியாய்ப் பிறந்தது.

முத்து (இரத்தினங்களில்) முதன்மையானது என்ற பொருளில் தமிழ்ச் சொல்லேயாம்.

உருவம் என்பது, உரு < உறு, உறுதியானது என்ற தமிழ்ச் சொல்லடியாய்ப்பிறந்தது.

இஞ்சி என்பதே சிரிங்கவேரா என்ற வடசொல்லாயிற்று.

பூப்பது பூ. அது, புஷ்பத்தினடியாய்ப் பிறந்ததன்று.

தீ என்ற சொல்லினடியாய் வடமொழித் தீபம் உண்டாயிருத்தல் கூடும், வடமொழியில்தீம்= பிரகாசிக்கிறது.

பிற என்பதும், பர என்பதும் ஒருசொல்லென்பாருமுளர்.

குழி என்பதன் வேரே, குண்டு, குண்டம் என்பவற்றிற்கு மூலமாயிருத்தல் கூடும்.

உலகிலுள்ள பிறமொழிகளுக்கும் தமிழுக்கும் சில சொல்லொற்றுமை காணப்படுமாறு அறிக.

நரம்பு என்பதும், லத்தீனில் நேர்வ் என்பதும் ஒப்பிட்டால் அகரத்திற்கு எகரமும் மகரத்திற்கு வகரமும் வந்து பிறழ்த்திருத்தல் காண்க.

'பல்' =பல, (லத்தீன்) பிளஸ் =அநேகம்.
பள்ளி—(கிரீக்) பாலிஸ் =நகரம்
வேண்டு—(ஆங்கிலம்) வான்ட் (want)
முறுமுறு—(மர்மர்) =murmur
ஈறு—(ஆங்கிலம்) ஈறு (year)
கொல்—கில் (ஆங்கிலம்)
உளை—(லத்தீன்) உளுபோ-(ulubo =howl)
அவா—(லத்தீன்) அவெயோ (aveo =desire)
குளிர்—(ஆங்கிலம்) கூல் (=cool)
மெல்ல—(லத்தீன்) மொல்ல (molla)
எல்லா—ஆல் (=all)
பூசை =பூனை. (ஆங்கிலம்) புஸ் (=puss)
பிள்ளை—(லத்தீன்) ப்வீல்லஸ் (=puell-us)
வீண்—(லத்தீன்) வானஸ் (vanus)
மூழ்கு—(லத்தீன்) மெர்கோ (=merge)
களவு—(லத்தீன்) க்ளெப்போ
கிண்டு—(கிரீக்)-கெண்டியோ =பொளுக்கு
குப்பை—(கிரீக்)-கொப்ராஸ் (kopras)
சாத்து—(ஆங்கிலம்)-ஷட் (=shut)
சுருங்கு—(ஆங்கிலம்)-ஷ்ரிங்க் (=shrink)
தெள் (=தெளிவான) (கிரீக்) தேல்ரஸ் (=தெளிவு) (delos)

தொலை—(கிரீக்) தெரியஸ்

திருப்பு—(கிரீக்) - (ட்ரெப்போ =திரும்பு) (trepos)

திற—(கிரீக்)-தூர (=கதவு) thure

ஏர்—(லத்தீன்) அர்-ஒ

அரி =அ்ரி-(சமஸ்கிருதம்) அர் =வெட்டு

ஓரம்—(லத்தீன்) ஓர (=விளிம்பு)

காண்—பழய (ஹைஜெர்மன்) சன் =லத்தீன் ஜ்ஞா (=gna)

புயல்—(லத்தீன்) mol-ior (முயற்சிசெய்) (வினை)

அலை—(கிரீக்) அளா-ஓமை =திரி (ala-omai) =wander

பல் =(பிளிஷ்)-பல்யோ

பிள்ளை—Tartar-billa (=பில்ல)

வாழ்—Turkish bol (=to live)

ஞாயிறு—Hungarian nyar (=சூரியன்)

அப்பா—Avamaic-abba

ஆறு—Heb Y'or (=river)

அல்—Heb அல் (=not)

அவா—Hete avah

ஊர் =Assyrian urn (=city)

கூர் =Heb kuir (=to pierce)

மரம் =Turkish murm

சினம் =Heb sinat (=hated)

நாட்டு =Heb nata (=to plant)

மெத்த =Heb mittah (=bed)
சுவர் =Heb shur (=wall)
உள் =ugrian ol (=to be)
Hing vol. Turk. ol
அலை =French-allote (=wander)
கண் =Chinese ugan
கொல் =French kuol
நோக்கு—Heb nokah (=shayht)
இரு—Japanese iri (=to be)
கரு =mongol kara (=black)
கோன்—Turkish & mongolian Khan (=Ruler)
அத்தன்—Gothic athan =father
அன்னை—French & Hungarian =anya

பிறவும் இவ்வாறே வருவன காண்க.

---

பல மொழிப்புலவர் ஒருங்கு கூடிப் பலப்பேச்சுக்களின் இலக்கணத்தையும் சொற்கோவையையும் ஒப்பிட்டுப் பார்ப்பின், மொழிமூலங்களும் மொழியமைப் பொற்றுமையும் நன்கு விளங்கும். பலமொழிக்கும் மூலமான ஒரு மொழியும் தூரத்தில் உதித்து காட்சிதருதலுங் கூடும். அப்பெருமுயற்சியை அறிஞரும், செல்வரும் கூடி ஆண்டுகள் பல செய்யின, அந்நோக்கம, முதல்வனருளால் முற்றுப் பெறுதல் கூடும்.